# வாகட சாரம்

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

டாக்டர் **சு. செல்வரங்கம், B.I.M.**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

சென்னை - 600 113.

மே - 1991

# வாகட சாரம்

சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டயத்திற்காக
அளிக்கப்பெற்ற பதிப்பாய்வேடு

டாக்டர் சு. செல்வரங்கம், B. I. M.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

மே - 1991

டாக்டர் சு. செல்வரங்கம்

சுவடியியல் பகுதிநேர மாணவர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113.

## உறுதி மொழி

'வாகட சாரம்' என்னும் இந்தச் சுவடிப் பதிப்பு ஆய்வேடு 1989 - 91 ஆகிய இரண்டு ஆண்டுகளில் பகுதி நேர மாணவராக இருந்த சுவடியியல் பட்டயத்திற்காக, என் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். இந்த ஆய்வேட்டை வேறு எந்தப் பட்டத்திற்கும் இதுவரை நான் அளிக்கவில்லை என்று உறுதி கூறுகிறேன்.

சென்னை - 600 113

20.5.'91.

சு. செல்வரங்கம்

சு. செல்வரங்கம்.

டாக்டர் பூ. சுப்பிரமணியம்,

சுவடியியல் துறை,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

சென்னை - 600 113.

## சான்றிதழ்

'வாகட சாரம்' என்னும் இந்தச் சுவடிப் பதிப்பு ஆய்வேடு இந்நிறுவனப் பகுதி நேர மாணவர் டாக்டர் க. செல்வரங்கம் அவர்களால் 1989 - 91 ஆகிய இரண்டு ஆண்டுகளில் சுவடியியல் பட்டயத்திற்காக உருவாக்கப் பெற்றதாகும். இந்த ஆய்வேடு இதுவரை வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று சான்று வழங்குகிறேன்.

20.5.91.

சென்னை - 600 113

20. 5.'91.

பூ. சுப்பிரமணியம்.

(நெறியாளர்)

டாக்டர் பூ. சுப்பிரமணியம்,
சுவடி இயல் துறை,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

## நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடாத்தி வரும் சுவடியியல் பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்பில் பகுதி நேர மாணவராகச் சேருவதற்கு எனக்கு அன்பு கூர்ந்து அனுமதியளித்தவர் நிறுவன முன்னாள் இயக்குநர் என் வணக்கத்திற்குரிய டாக்டர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள்

தேர்வு காலத்து உற்ற துணைபுரிந்தவர் நிறுவன இயக்குனர் (பொறுப்பு) வணக்கத்திற்குரிய டாக்டர் அன்னி தாமசு அவர்கள்

சுவடிப்பதிப்பிற்கான அடிப்படை அறிவினைக் கொடுத்து, ஆய்விற்கான பல செய்திகளையும் கொடுத்ததோடு ஐயங்களை நீக்கி ஆய்வுக் குறைகளை அகற்றி இப்பதிப்பாய்வேடு சிறப்புற அமைவதற்குப் பெருதவி புரிந்தவர் என் வணக்கத்திற்கு உரிய, சுவடியியல் துறைத் தலைவர் டாக்டர் பு. சுப்பிரமணியம் அவர்கள்

மொழிவரலாறு, செய்யுளியல், பாட்டியல் போன்ற பாடங்களில் எனக்கு பாடம் கற்பித்துத் தேர்ச்சி பெற வழி வகுத்துத் தந்தவர்கள் பேராசிரியப் பெருந்தகைகளான என் வணக்கத்திற்குரிய டாக்டர் ச. சிவகாமி, டாக்டர் சி. சசிவல்லி, டாக்டர் டி. மகாலட்சுமி ஆகியோர்

சுவடியியல் துறையில் சேருவதற்குத் தூண்டிப் பல்லாற்றும் துணைபுரிந்தவர் டாக்டர் மல்லிகா அவர்கள்

இப்பதிப்பு ஆய்விற்குத் தேவையான சுவடிகளைப் படியெடுப்பதில் பெரிதும் துணைபுரிந்தவர் டாக்டர் வாசுகி அவர்கள்

இவ் ஆய்வேட்டைக் குறித்த நேரத்தில் முடித்துத்தருவதற்கு உதவியவர் அருமை நண்பர் திரு. வே. நெடுஞ்செழியன் அவர்கள்

இச் சுவடியாய்விற்கு உறுதுணையாய் நின்று உரிய கருத்துகளை அவ்வப்போது வழங்கியவர்கள் அருமை நண்பர்கள் திரு. மொ. மருதமுத்து, திரு முகலூர் கா. முத்துமணி, திரு. விக்கிரமன் ஆகியோர்.

இப்பட்டயப் படிப்பிற்குத் தேவையான அனைத்து நூல்களையும் தந்து உதவியவர்கள் நிறுவன நூலகர்கள் திருமதி யோகம், திருமதி. பார்வதி ஆகியோர்.

இவ்வேட்டைச் செப்பமுறத் தட்டச்சு செய்யவும் புறவமைப்புப் பணிகளைச் சிறப்புற அமைதற்கு வழிகாட்டியும் துணை நின்றவர் திரு. தி.மு. கந்தசாமி அவர்கள்

அனைத்துப் பெருமக்களுக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றியினைச் சிரம்தாழ்த்தி உரித்தாக்குகிறேன்.

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

அ. செல்வரங்கம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | 1 - 5 |
| நூலாசிரியர் | 6 - 9 |
| நூலாய்வு | 10 - 33 |
| நூற்பொருள் | 34 - 69 |
| மூலநூல் | 70 - 121 |
| துணை நூற் பட்டியல் | 122 |

பின்னிணைப்புகள்

| | |
|---|---|
| பாட்டு முதற் குறிப்பு | 1 - 7 |
| சொல்லடைவு | 8 - 29 |
| முத்திரைப் படங்கள் | 30 - 49 |

# பதிப்புரை

## பதிப்புரை



தொன்மை வாய்ந்த இலக்கிய வளம்மிக்க மொழி நம் தமிழ் மொழி. சுவடிகளே பண்டைக் காலத்தில் எழுபொருள்களாக இருந்தன. இவ்வாறு காலந்தோறும் உருவான அருந்தமிழ்ச் சுவடிகள் பல. அவற்றுள் காலப்போக்கில் அழிவுற்றவை போக எஞ்சியுள்ளவை தனியாரிடத்தும் ஒரு சில நிறுவனங்களிடத்தும் கிடக்கின்றன. இவற்றைத் தேடித் தொகுத்தல் பதிப்பிப்பதே சுவடியியலின் பணியாகும்.

### ஆய்வுப் பொருள்களின் வரையறை

பண்டைய சுவடிகளை இன்றைய அச்சுவடிவில் நூல்களாகப் பதிப்பிப்பதன் வழி சிறப்புப் பெற்றது சுவடியியல். சுவடியியலில் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக உருப் பெற்றது இப்பதிப் பால்வேறு, உ.வே. சாமிநாதையர், தாமோதரம் பிள்ளை முதலான அறிஞர்களின் வழியே இன்று இவ் 'வாகட சாரம்' என்ற நூலும் உருவாக்கப் படுகின்றது.

வளர்ந்து வரும் பல துறைகளில் பதிப்பு துறையும் ஒன்று. இப்பதிப்பு துறையில் சுவடி பதிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. தனியார் நிறுவனங்களும் பதிப்பு ஆய்வு செய்து பல நூல்களைப் பதிப்பிக்கின்றன. அவ்வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் பல நூல்களை ஆய்வுச் செய்து பதிப்பித்து வருகின்றது. அதன் வழியே, 'வாகட சாரம்' என்னும் இவ்வாய்வேடும் உருவாக்கப்பட்டு உள்ளது.

### சுவடி பற்றிய செய்திகள்

'வாகட சாரம்' என்னும் நூல் தொகுப்பு நூல் ஆகும். அகத்தியர் குணவாகடம் என்னும் நூலில் இருந்து வைத்திய சாரம், நோயின்

சாரம், அஸ்த சாரம் ஆகியவற்றைப் பற்றித் தொகுத்த வாகடசாரம் என்னும் பெயருடன் 147 பாடல்களைக் கொண்டதாக காணப்படுகிறது (அஸ்த சாரத்தில் வரிசை எண் 46 முதல் 60 வரை சுவடிகள் காணப்படவில்லை)

## சுவடியின் அமைப்பு

சுவடியின் நீளம் 32 செ.மீ., அகலம் 3 செ.மீ. சுவடிகள் சில பழுதபட்டும், மறைந்தும் (அஸ்த சாரத்தில் வரிசை எண் 46 முதல் 60 வரை சுவடிகள் காணப்படவில்லை) உள்ளன. ஓலைச் சுவடிகளைப் பொறுத்தவரையில் அனைத்து ஏடுகளும் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. பெரும்பான்மையான சுவடிகளில் எழுத்துக்கள் தெளிவாக இருக்கின்றன. ஆனால் சில சுவடிகளில் எழுத்துக்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.

ஏடுகளின் இடப்புறமும், வலப்புறமும் இடம் விட்டு எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும், பாடலின் இறுதியில் எண்ணிடப்பட்டுள்ளது. சுவடியின் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது ஆறு வரியிலிருந்து 10 வரி வரை எழுதப்பட்டுள்ளன.

## யாப்பமைதி

பெரும்பான்மையான பாடல்கள் அறுசீர் விருத்தத்திலும், சில செய்யுட்கள் கலிவிருத்தத்திலும், எண் சீர் விருத்தத்திலும் உள்ளன. சுவடியில் உள்ள பாடல்கள் அசை, சீர், அடி, என்ற பாகுபாடின்றி

தொடர்ச்சியாக ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை எழுதப்பட்டுள்ளது. ஆனால் பெரும்பான்மையான பாடல்களுக்குத் தலைப்பு கொடுத்து எழுதி பிரித்து காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக நாடியைப் பற்றி தனித்தனி தலைப்பு கொடுத்தும், மிகும், குறைந்தால் வரும் நோய்களைப் பற்றிய செய்தி தலைப்பு கொடுத்தும், நோய் தீர்க்க மருந்து, கஷாயம், நெய், இரதம் போன்றவற்றைத் தனித் தலைப்பு கொடுத்தும் எழுதப்பட்டுள்ளது.

பாடல்கள் தொடர்ச்சியாகச்செல்லும்போது பாடல்களைப் பிரிப்பதற்குத் தொடரில் இடையே எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பாடல் எண்கள் வேறுபடுத்துவதற்கு உகஉ, க- என்ற குறியீட்டுகளைப் பயன்படுத்தியுள்ளனர். இறுதி ஏட்டில் முற்றும் என்ற குறிப்புகளுடன் 'நோயின் சாரம் முற்றிற்று சிவசிதம்பரம்' என்றும் அகத்திய முனிவர் அருளிச் செய்த வைத்திய சாரம் முற்றிற்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## நூல் பதிப்பு

'வாகட சாரம்' என்னும் நூல் பதிப்பில் வைத்திய சாரத்தில் நாடியைப் பற்றியும், நாடிகளின் வகைகளைப் பற்றியும், மிகுந்து, குறைந்து, தொந்தித்து நடப்பதால் வரும் நோய்களைப் பற்றியும்; நோயின் சாரத்தில், நோய்களின் வகைகளைப் பற்றியும் மரணக்குறிகளைப் பற்றியும் தோஷங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

அவிழ்த சாரத்தில் நோயினை நீக்க தேவையான மருந்து வகைகளைப் பற்றியும் விரிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே, ஒரு தொகுப்புப் பதிப்பு என்ற அடிப்படையில் 147-பாடல்களைக் கொண்ட இம் மூன்று நூல்களையும் இணைத்து "வாகட சாரம்" என்ற பெயரைக் கொடுத்துப் (இப் பெயர் சுவடியில் உள்ளது அன்று)

பதிப்பு ஆய்வுக்காக எடுத்துக் கொண்டேன்.

சுவடிச் செய்தி பற்றிய விளக்கங்கள் தனியே ஆய்வுரையை அடுத்து அமைகின்றன. நூல் பற்றிய அகச் சிறப்புகள் ஆய்வுரையில் அமைகின்றன.

## காலம்

வி.போ. சுப்பராய வாத்தியாருக்குச் சொந்தமான இச் சுவடி பிலவங்க ஆண்டு மார்கழி மாதம் 21-ந் தேதி எழுதியதாகத் தெரிகிறது. ஆனால் 21-ஆம் தேதிக்குரிய கிழமையோ, நட்சத்திரமோ இல்லாத காரணத்தால் எந்த பிலவங்கம் என்பதையும் அதற்குச் சரியான கி.பி. ஆண்டையும் அறிய இயலவில்லை.

இந்த நூலுக்கு உரியவர் விழுப்புரம் தக்கடியைச் சார்ந்த சிங்கக்கல்லிப்பட்டு என்னும் ஊரைச் சார்ந்தவர் என்பது சுவடியின் முற்குறிப்பால் அறிகிறோம்.

## நூல்தலைப்பு

பதினெண் சித்தர்களில் ஒருவரான அகத்திய முனிவரால் எழுதப்பட்ட அகத்தியர் குணவாகடம் என்ற நூலிலிருந்து மூன்று பிரிவுகளை மட்டும் தொகுத்துத் தனித்தனி தலைப்புடன் கூறப்படுவதால் இதற்கு 'வாகட சாரம்' என நூல் தலைப்பு இடப்பட்டது.

## பாடல் எண்கள்

இந்நூல் தொகுப்பு நூலாதலால், பாடலை வரிசைப்படுத்துவதற்கு இடதுபுறத்தில் வரிசை எண் முழு நூலுக்கும் தொடர்ந்து கொடுக்கப் படுகிறது. ஆனால், வலது புறத்தில் அந்தந்த நூலுக்குரிய பாடல் எண்ணும் குறிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக எல்லாச் சுவடிகளிலும் ர, ா, டு, ே எழுத்துக் குறிகள் மயக்கம் தருவன. இதுபோலவே த,ந, ப, ட, ம, க, ச, டு, து போன்ற எழுத்துகளும் தம்முள் மயங்கிவரும். இவற்றைச் சரிசெய்து அமைத்தவற்றிற்குச் சில சான்றுகள் கீழே தரப்பெற்றுள்ளன.

## பிழை திருத்தம்

| சுவடியில் உள்ளது | திருத்தி எழுதியது | பா. எண் வரிசை எண் |
| --- | --- | --- |
| போத்துவாம் | போற்றுவாம் | பா. 1:4 |
| அரப்பசி | ஐப்பசி | பா. 2:2 |
| ஆவனி | ஆவணி | பா. 3:1 |

நூலின் கண்ணேயே பிழைத்திருத்த முறை கையாளப் பட்டுள்ளமை அறியப்படுகிறது. சான்றாக, ஒரு சொல்லில் இடடையே ஓரிரு எழுத்துகள் பிழையாகி விட்டால் அவற்றை அடித்து விட்டு, அவ்வெழுத்துகளுக்கு நேர் கீழேயே திருத்தமான எழுத்துகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வாறே விடுபட்ட எழுத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சான்று

வாகட பயன் - வாகடத்–– பயன் (தன்) (7:1

குன்மமும் - குன்––ம் (மமு) (பா. 20-தலைப்பு)

சுவடிப் பதிப்பின் கண் சுவடியில் காணப்பட்ட பிழைகள் பல திருத்தப் பெட்டுள்ளன. ஒற்றெழுத்துக்ள் ஆய்வாளரால் புள்ளியிடப் பெற்றுள்ளன. சிதைவுற்ற தெளிவற்ற இடங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

ர-ற; ழ-ல-ள; ந-ண-ன; ப-ய-வ ஆகியவற்றுக்கு இடையேயான மயக்கநிலைகள் திருத்தப்பட்டுள்ளன. ண,ற,ன ஆகியவற்றில் ஆகார வடிவும், ல,ள,ண,ன ஆகியவற்றில் ஐகார வடிவும் தற்காலச் சீர்திருத்த முறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

நூலாசிரியர்


அகத்தியர்
VKS
RAJA

## நூலாசிரியர்

வாகடசாரம் எனும் இந்நூலின் ஆசிரியர் அகத்தியர் ஆவார். இதனை நூற்களில் இடம்பெற்றுள்ள சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

பொதிகை மலை அகத்தியனார் புகன்ற தாமே (பா. 6)
அகத்தியரும் முந்நூலில் அருள்செய் தாரே (பா. 13)
வரம்பெறு முனிவர்தாமும் வாக்கொடு சொன்னார்
தேர்ந்தே (பா. 63)

என்ற அகத்தியர் பற்றிய குறிப்புகள் நூலுல் இடம் பெற்றுள்ளன.

## அகத்தியர்

அகத்தியர் பதினெண்சித்தருள் ஒருவராகப் போற்றப்படுகிறார். இவர் வடநாட்டிலிருந்து வந்தவர் என்ற கருத்து வலிமை பெற்று விளங்குவதைப் போன்றே, இவர் பொதிகை மலையில் வாழ்ந்தவர் என்ற கருத்தும் வலிமையுடையதாக விளங்குகிறது. தமிழ் இலக்கியப் பரப்பின் துறைதோறும் முதனூல் இவர் இயற்றியதாகக் கூறுதலே மரபு சார்ந்த வழக்கு.

## அகத்தியர் சிறப்பு

ஆமென்ற வெல்பே ரகத்திய னாகும்
அருளினோ மென்னுடைய சீஷர்பதி னெண்பேர்

அதாவது, என்னுடைய பெயர் அகத்தியராகும் என்னுடைய சீஷயர்கள் பதினெட்டு பேராகும் என்று குறிப்பிடுகிறார்.

அகத்தியர் சௌமிய சாகரம் 1200 என்னும் நூல் சிவன் 2. உமைக்குச் சொல்ல, உமை, 3. நந்திக்குச் சொல்ல நந்தி- 4. தன் வந்திரிக்குச் சொல்ல, தன்வந்திரி - 5. அகவனிதேவர்க்குச் சொல்ல அகவனி தேவர். 6. அகத்தியருக்குச் சொல்ல, அகத்தியர் 7. புலத்தியருக்குச் சொன்னார் என்ற முறையை நிரல்படுத்துகிறது. (பக். 15)

அகத்தியர் வகார சூத்திரம் 200- என்னும் நூல் நாயுருவி விரையைப் பாலில் அரைத்து உட்கொள்ள ஓராண்டு வரை பசியற்று இருக்குமென்றும் அவ்விரையை வெந்நீரில் கொண்டால் தீவிரமாக பசியுண்டாகும் என்றும், கட்டுக்கொடி மூலம் வெல்லத்தில் கொண்டால் சிறுநீர் கட்டிப்போடும் என்றும் அறிகிறோம்.

சித்தர்கள் தற்போது மறைந்துள்ளதற்குக் காரணம்.

கலியன் வந்தானென்று சகல ரிஷிகளும்
கலியைக் கண்டிடும் காணா திருக்க
கலியானை விட்டுக் கயிலைக்குச் சென்றே
கலியுக மட்டும் கடுந்தூக்கம் கொண்டார்

என்பதனால் அறியலாம். (அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம், ப. 35)

## அகத்தியர் வரலாறு

குறுமுனி - அகம் - தீ) அச்சிறப்பு வழி மூலாக்கினி உருவாகப்பட்டது. அகத்தியர் - விப்பிரர் குலம் என்ற குறிப்பு உள்ளது.

சுமார் 37 அகத்தியர்கள் பல்வேறு காலங்களில் இருந்ததாக திரு அ. சிதம்பரனார் அகத்தியர் வரலாறு (பக். 2) என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

தட்சணா மூர்த்தி குருமுகம் நூறு என்ற நூலின் மூலம் அகத்தியருக்குத்

தட்சனா மூர்த்தி என்ற பெயரும் உள்ளதாக கூறுகிறார்.

சென்னையில் கீழ்நாட்டுக் கையெழுத்துப் பிரதி நூலகம் தயாரித்துள்ள பட்டியலில். அகத்தியர் பெயரில் சுமார் 96 நூல்கள் காணப்படுகின்றன. பெருந்திரட்டு, ஆயுள் வேத பாஷியம், வழி நூக் மூவகை காண்க சிவஜாலம், சண்முக ஜாலம் செந்தூரம் 300 மணி 400, வைத்தியம் 1500, வைத்தியம் 1600, வைத்திய ரத்நாகரம், காசல் பஸ்பம் 200, நாடி சாஸ்திரம், அகத்தியர் சித்த வைத்தியம், கர்ப்ப சூத்திரம், வாகடம், வைத்திய கும்மி போன்றவை சில.

அவற்றுள் மருத்துவத்திற்கின்றியமையாத தாது, தாவர, சீவ பொருள்கள் முதலியவைப் பற்றி

"பொருள் குணம் கருமம் பொதுச் சிறப்பொற்றுமை
இன்மை யுடன் பொரு ளேழென மொழிப"

\- (அகத்தியர் தருக்க சூத்திரம், பக். )

என்னும் நூலில் அறியலாம்.

இவற்றைத் தவிர கையாளப் பெற்றுவரும் அகத்தியர் நூல்களில் சிலவற்றைக் கீழே காணலாம்

1. அகத்தியர் அறபோக சூத்திரம்
2. அகத்தியர் அஷ்டமா சித்தி
3. அகத்தியர் கர்ம காண்டம்
4. அகத்தியர் குருநாடி
5. அகத்தியர் குருநூல் முப்பு
6. அகத்தியர் சாலத் திரட்டு - 1200
7. அகத்தியர் சூத்திரம்
8. அகத்தியர் சௌமிய சாகரம் - 1200
9. அகத்தியர் ஞானகாவியம் - 1000

10. அகத்தியர் ஞானம்

11. அகத்தியர் பரிபாஷை - 500

12. அகத்தியர் பரிபூரணம்

13. அகத்தியர் பாலவாகடம்

14. அகத்தியர் பூசாவிதி

15. அகத்தியர் முன்ஞாக் 80

16. அகத்தியர் வழலை

17. அகத்தியர் வாகடவசனம்

18. அகத்தியர் வாகடவெண்பா

19. அகத்தியர் வைத்திய கும்மி

20. அகத்தியர் வைத்திய ரத்ன சுருக்கம் - 360.

நூலாய்வு

# நூல்

## முன்னுரை

சித்தர்கள் எல்லாக் காலத்திலும், எல்லா நாட்டிலும் வாழ்ந்து வந்தனர். வாழ்ந்து வருகின்றனர். வாழ்ந்து வருவர்.

சித்தர்கள் இறைவனின் அருளைப் பெற்றுள்ள காரணத்தால் பேரறிவைப் பெற்றவர்களாக விளங்கினார்கள். வியக்கத்தக்க பல அற்புதங்களைச் செய்துள்ளார்.

தமிழ் நாட்டுச் சித்தர்கள் மனித குலத்துக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. இச்சித்தர்கள் மருத்துவ நூல், மந்திர நூல், இரசவாத நூல், யோக நூல் என்ற பல வகை நூல்களை எழுதித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிந்து இருக்கிறார்கள்.

சித்தர்கள் எளிமையாக, பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் பயன்படுத்தியே பாடினார்கள். ஆனாலும் அதில் மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு ஒரு பொருளும், ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு வேறு பொருளும் தோன்றும் வகையால் அமைகின்ற குழூஉக்குறிச் சொற்களை வைத்துப் பாடி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாம்பாட்டிச் சித்தர் பாடலில்

தாசிவீடு சென்ற தறுதலைக்குத்
செம்மையாய்த் தருக செருப்படிதான்
காசம் அற்றவரும் கவயிறும்
கதியே சைவமென் றாடுபாம்பே"

என்பது நாட்டுப் புறப்பாடல் போல இருந்தாலும். இதில் மருத்துவ முறையொன்று அடங்கி உள்ளது. தாசி வீட்டுக்குச் சென்றதால் வந்த

மேகவெட்டை என்னும் தொற்று நோய்க்குச் செருப்படை என்னும் மூலிகையைக் கொடுக்க வேண்டும். மேகவெட்டை தொடர்பால் வரக்கூடிய காசநோய்க்கும், கபநோய்க்கும் தாளிசபத்திரியைக் கொடுத்தால் அவை ஒழியும் என்பது இப்பாடலின் பொருள்.

குருகுரு ஆனைக்கல் வாகடதோகட வயிராணைக்கல்
சக்கு சுண்ணாம்புக்கல் ஜோதிக்கல் ஜோதிக்காய்?

சுக்குசுக்கு வெள்ளைக்கல் சுப்பிரமணியன் வெள்ளைக்கல்
காசுக்கு ரெண்டுக்கல் கருணைக் கிழங்கடா
மயிற்றைப் பிடுங்கடா

சித்தர்கள் பதினெண்மராகச் சுட்டப்படுகின்றனர்.

நந்தியகத் தியர்மூலர் புண்ணாக் கீசர்
நற்றவத்துப் புலத்தியரும் பூனைக் கண்ணர்
கந்திடைக்க டரும்போகர் புலிக்கை யீசர்
கருவூரார் கொங்கணவர் மாகா லாங்கி
சிந்தியமு கண்டரகப் பெயர்பாம் பாட்டித்
தேரைய ரும்குதம்பைச் சட்ட சித்தர்
செந்தமிழ்ச்சீர் சித்தர்பதி னெண்மர் பாதம்
சிந்தித்தே அன்பாகச் சேர்ந்து வாழ்வாம்.

என்று சித்தர் பெயர்கள் பட்டியலிடப் படுகின்றன. எனினும் இப்பட்டியல்கள் நூலுக்கு நூல் வேறு படுகின்றன.

## சித்தர்

இச் சொல்லுக்குப் பல்வேறு விளக்கங்களைக் கூறுதல் கூடும்.

சித்த என்னும் சொல் சித்தம் என்னும் சொல்லில் இருந்து தோன்றியதாக இருக்கலாம்.

சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக் கரணம் எனப்படும். இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும். புத்தி நிச்சயிக்கும். அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும். சித்தம் இம் மூன்றுக்கும் காரணம் ஆகும். இதனை,

மனம்புத்தி யகங்கார சித்தத் தாலே
வாரணமாய் நடத்திவைத்த கர்மத் தாலே
வந்ததடா நோயதுவு மனிதர்க் காமே.

என்னும் அகத்தியர் அனுபோக சூத்திரப் பாடலால் அறியலாம்.

சித்தி செய்த சித்தருக்குச் சித்தரென்ற நாமம்
அகத்தியர் தத்துவம்

சிந்தையிலே களங்கமற்றார் சித்தனாவான்
- 50, அகத்தியர் குருநூல் முப்பு 50

ஆச்சப்பா தத்துவத்தை யுணர்ந்தோன் சித்தன்
- 108 அகத்தியர் தத்துவம்

சிவனுக்குச் சித்தன் என்ற பெயரும் உண்டு
- மதுரைத் தமிழ்ச் சங்க அகராதி
பாகம்:1, பக். 907-

கடவுளைக் காண முயல்பவன் பக்தன்
கண்டு தெளிந்தவன் சித்தன்
- கலைக்களஞ்சியம், தொகுதி 4, பக். 643

இ

என்பன 'சித்தர்' என்ற சொல்லை விளக்குவனவாகும்.

ஒப்புமை 

சித்த என்னும் சொல்லைக் குறிக்க "மிஸ்டிஸம்" எனவும் சித்தர்களைக் குறிக்க "மிஸ்டிக்ஸ்" எனவும் ஆங்கிலத்தில் சொற்கள் வழங்குகின்றன. (Ince R. Dictionary Of Relegion and Religious . P.188)

"தென்னாட்டில் பதினெண் சித்தர்கள் யார் என்பது பற்றிப் பல கருத்து நிலவுவதுபோல, வடநாட்டில் நவநாத சித்தர்கள் யாவர் என்பதிலும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது.

- அபிதான சிந்தாமணி: பக். 940

## சித்த மருத்துவச் சிறப்பு

"ஒரு மனிதனின் உணவு இன்னொரு மனிதனுக்கு விஷயம்" -லுக்ரஷியஸ் என்னும் தத்துவஞானி கி.பி. முதல் நூற்றாண்டில் கூறியது.

நாம் இப்புவியில் பிறவியை எடுத்துள்ளோம். ஒரு நாள் இறப்பது நிச்சயம். இது தவிர்க்க முடியாதது. ஆனால், இறப்பு எப்போது சம்பவிக்கும் என்பது நமக்குத் தெரியாது. அதைச் சந்தோஷமாக வரவேற்க வேண்டும். இந்த உண்மையை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் உயிருள்ள வரை நோயற்ற வாழ்வு வாழ வேண்டும். அதற்கு ஒரே வழி சித்த வைத்தியத்தில் உள்ள எளிய முறையைப் பின்பற்றி வேண்டும்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (குறள் - 942)

அற்றாவளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றானெ டிதுய்க்கு மாறு (குறள் - 943)

சித்த மருத்துவத்திற்குச் சிறப்புகள் பல உள. நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்வதால் எவ்வித நோயானாலும் வேருடன் அழியும் என்பது உறுதி. இதற்கு மேலாக எவ்விதப் பின் விளைவுகளையும் ( side effects ) இம்முறையினால் நேர்வதில்லை.

## அறுசுவை உணவு முறை

சிலர் தவறு செய்பவர்களைப் பார்த்து கேட்பது, 'நீ வயிற்றுக்கு என்ன சாப்பிட்டாய்! அறிவு இல்லையா உனக்கு என்ற கேள்வி ஆகும். இதன் உட்பொருளை ஆராயும் போது 'அறிவு இல்லையா' என்பது அறுவகை 'உ' ருசிக்குரிய உணவு (அறுஉ - அறிவு) வகை வீட்டில் இல்லையா என்பதே ஆகும். ஆக அறுவகை உருசி உணவினை உட்கொண்டு வருவதாலேயே பூரண உடல் நலமும், அறிவும் ஆற்றலும் பெற்று இனிதே வாழ முடியும்.

"உண்மை கசப்பில் தான் உள்ளது"

(எ. காட்டு) "உண்மையைச் சொன்னால் கசக்கிறதா"
என்பது பழமொழி.

ஆகவே மனிதர்கள் முறைப்படி உண்ண வேண்டிய 1. இனிப்பு 2. புளிப்பு 3. கசப்பு 4. துவர்ப்பு 5. உப்பு, 6. காரம் உணவில் சேர்த்து உண்ண வேண்டும்.

## மருத்துவம்

"மருந்து" என்னும் சொல் வலித்தல் விகாரம் பெற்று "மருத்து" எனவாகி, அதைக் கொண்டு செய்யும் செயலை உணர்த்த "மருத்துவம்" என அமைந்தது.

மருத்துவம்: இம்மொழி 1. நீக்குகை, 2. மாற்று மருந்து 3. பரிகாரம், 4. வைத்தியம், 5. சிகிச்சை என்கின்ற பொருள்களைப் பயக்கும்.

மருத்துவம், மக்கள் இருமைக்கு ஏற்ப அடையும் இன்ப, துன்பமிரண்டனுள் வெறுக்கத்தக்க துன்பம் மிக்க வன்மை பெற்றிருப்பினும், அதனை வேரறக் களைந்து எக்காலத்தும், விரும்பத்தக்க இன்ப வாழ்க்கையைப் பெறவும், இதற்கு இடையூறாய் இருக்கின்ற நரை, திரை, மூப்பு. சாக்காடு என்பவற்றை ஒழிக்கக் கூடிய அறிவைப் புகட்டி உடலை நிலைக்கச் செய்யவும் பயன்படுகிறது.

### வகை:

1. அலோபதி மருத்துவம்

உ.இந்திய மருத்துவம்

ஆயுர்வேத மருத்துவம்

சித்த மருத்துவம்

யூனானி மருத்துவம்

ஓமியோபதி மருத்துவம்

இயற்கை மருத்துவம்

காந்த சிகிச்சை

வர்ம வைத்தியம்

என்பன. மேலும் பலவகையான விளக்கங்கள் பல மருத்துவ வல்லுநர்களால் கொடுக்கப் பெற்றுள்ளன என்றாலும் அவை ஒவ்வொன்றும் தம்முள் வேறுபாடு உடையனவாகவே காணப்பெறுகின்றன.

<u>மருத்துவன்</u>

பண்டி தன்பரிகாரிநல் வைத்திய னென்பபேர்
கொண்ட வன்பர னும்

என்பது நிகண்டு.

மருத்துவன் - பண்டிதன், பரிகாரி, வைத்தியன் பரன் என்ற பல பெயர்களுமின்றி அகத்திக்காரன்" என வேறொரு பெயரும் உண்டு.

1. <u>மருத்துவன்</u> நோய்க்குத்தக்க மருந்துகளைச் செய்து தான் கையாண்ட வழக்குப்படி நோய்களுக்குத் தக்க சிறை மருந்துடன் கொடுத்து நோய்களை நீக்குதல் இவனது தன்மையாகையால் இப்பெயர் வழங்கிற்று.

2. <u>வைத்தியன்</u>: தன் வித்தையின் இயல்பால் மருந்துகள் செய்து நிலைப்படுத்தல் இவனது சிறப்பாகையால் இப்பெயர் பெற்றன.

3. <u>அகதங்காரன்</u>: குளிகை கட்டி, அதனால் மருத்துவம் செய்தல் இவனது சிறப்புத் தன்மையாகும்.

4. <u>பரன்</u>: இவன் இறைவனுக்கு ஒப்பாய் மூன்று கண்கள் உள்ளவன் எனப் பொருள்

"மூன்று கண்ணுளோ ரிருவராம்
அன்னவர்யா ரெனில்
ஆன்ற லோகமீன் றளிப்பவன்
ஆகிய வரனும்
தோன்று மக்கடம் துயரினைப்
போக்கிடு வோனாம்
ஏன்ற மாமருத் துவனுமே
என்னியம் புவரே"

உலகத்தில் மூன்று கண்கள் உள்ளவர் யாவரெனின், எல்லாவுலகங்களையுந் தோற்றுவித்துக் காத்தளிப்பவனாகிய இறைவனும் உயிர்களுடைய நோய்களை நீக்க வல்லவனாகிய மருத்துவனும் ஆகிய இவ்விருவவராவர்.

1. இறைவனுக்கு மூன்று கண்கள்: 1. திங்கள் 2. ஞாயிறு 3. தீ என்பன. இவற்றைச் "<u>சோம சூரியாக்கினி</u>" என்பர்.

2. மருத்துவருக்கு மூன்று கண்கள்: 1. மருந்துகளைத் தூய்மை செய்யும் வகை. 2. நோய்களைத் தீர்மானிக்குந் தன்மையும், மருந்துகள் இன்னின்ன இயல்புடையன என்பவற்றை அறியும் நிலையும், 3. மருந்துகளின் பல பெயர்களையும் தெரிந்து கொண்டிருக்கும் புலமையுமாம். இதனை,

"மருந்துசுத்தி குறிகண்டு கண்கள் மூன்றாம்" என்ற

நின்று அடியாலும் அறியலாம்.

ஆங்கிலத்தில் A Surgeon must have Eagle's eye, Lion's heart, and Lady's Finger

என்பதும் ஒப்புமையுடையது

## மருந்து முறைகள்

### அக மருந்துகள்

நூலுள் கூறப்படுகின்ற மருந்துகளை அகமருந்து, புறமருந்து என இரு வகையாக்கிக் காண முடிகிறது. அவற்றுள் அகமருந்துகள் உள்ளுக்குக் கொடுக்கப் பெறுபவை, அவை பிற மருந்துகளாகிய துணை மருந்துகளோடு (அநுபானம்) கொடுக்கப் பெறுபவையும் உண்டு. அநுபானம் இன்றிக் கொடுக்கப் பெறுவையும் உள்ளன. சிலவற்றிற்குப் பத்தியமும் கூறப்படுகிறது. பத்தியம் இல்லாத மருந்துகள் பல. இந்த அகமருந்துகள் நோயின் தொடக்கநிலை, வளர்ச்சியுற்ற நிலை ஆகியவற்றிற்கு ஏற்பவும், நோயுற்ற பருவகாலத்திற்கு ஏற்பவும், நோயாளியின் வயதுக்கு ஏற்பவும், மருந்தும், மருந்தின் அளவும் வேறுபடுவது குறிப்பிடத்தக்கது. பருவகாலத்திற்கு ஏற்ற அநுபானங்கள் கையாளப் பெறும்.

இவ்வாறு கொடுக்கப்பெறும் அக மருந்துகள் நூலுள் பல வகையாக காணப்படுகின்றன. அவைமுறையே எண்ணெய், கியாழம், கிருதம், குடிநீர், சாறு சூரணம், நெய், பானம், பொடி, லேகியம் என்பனவாகும். அக மருந்துகள் தயாரிக்கப் பெற்ற காலத்திலிருந்து சிலகால அளவு வரையிலேயே வன்மை உண்டு.

### புற மருந்துகள்

கண், காது ஆகிய உறுப்புகளில்விடும் மருந்துகளும், கை, கால் முதலான உறுப்புகளில் பூசும் மருந்துகளும் புற மருந்துகள் எனப்படுகின்றன.

கட்டி, கரப்பான், காயம், சொறி, சிரங்கு, பரு, புண், வேர்க்குரு போன்ற உடலில் தோன்றும் நோய்களுக்குப் பூசும் மருந்துகளாகவும், வைத்துக் கட்டும் மருந்துகளாகவும் புற மருந்துகளாக பயன்படுத்தப்பெறுகின்றன. புற மருந்துகளுக்கும் பருவகாலமும் வயதும் பார்க்கப்படும். புற மருந்துகளுக்குப் பத்தியம் முதலான கட்டுப்பாடுகள் இல்லை. இந்நூலின் புற மருந்துகளாக 'தைலம்,எண்ணெய் போன்றவை குறிப்பிடப்பெறுகின்றன. புற மருந்துகளும் தயாரித்தபின் குறிப்பிட்ட காலம் வரையிலேயே நோய் தீர்க்கும் வன்மையுடையதாயிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அக மருந்து வகை

இவ்விருவகை மருந்துகளும் தத்தம் வகையில் முப்பத்திரண்டு வடிவுடையனவாகும்.

அகமருந்து முப்பத்திரண்டும் அவற்றின் ஆயுள் காலமும்

| | |
|---|---|
| 1. சுரசம் | 2. சாறு |
| 3. குடிநீர் | 4. கற்கம் |
| 5. உட்களி | 6. அடை |
| 7. சூரணம் | 8. பிட்டு |
| 9. வடகம் | 10. வெண்ணெய் |
| 11. மணப்பாகு | 12. நெய் |
| 13. இரசாயனம் | 14. இளகம் (இலேகியம்) |
| 15. எண்ணெய் | 16. மாத்திரை |
| 17. கடுகு | 18. பக்குவம் |

| | |
|---|---|
| 19. தேனூறல் | 20. தீநீர் |
| 21. மெழுகு | 22. குழம்பு |
| 23. பதங்கம் | 24. செந்தூரம் |
| 25. நீறு (பற்பம்) | 26. கட்டு |
| 27. உருக்கு | 28. களங்கு |
| 29. சுண்ணம் | 30. கற்பம் |
| 31. சத்து | 32. குருகுளிகை |

என்பன அக மருந்து முப்பத்திரண்டாகும்.

சுரசம், சாறு, குடிநீர், கற்கம், உக்களி, அடை

இவை ஒரு சாமம் என்றும் ஆங்கில மூன்று மணி நேரம் வரை வன்மையுள்ளவையாம். ஆகையால் இவைகளில் எது செய்வதாக இருந்தாலும் அவ்வப்போது புதிதாகத்தயார் செய்து மூன்று மணி நேரத்துக்குள் கையாள வேண்டும்.

சூரணம், பிட்டு, வடகம், வெண்ணெய்

இவை மூன்று திங்கள் வன்மை உள்ளவாம்.

மணப்பாகு, நெய், ரசாயனம், இளகம்

இவை ஆறு திங்கள் வன்மை உள்ளவாம்

எண்ணெய், மாத்திரை, கடுகு, பக்குவம், தேனூறல், தீநீர்

இவை ஓர் ஆண்டு வன்மையுள்ளன.

மெழுகு, குழம்பு

இவை ஐந்தாண்டுகள் வன்மை உள்ளது.

இரசப்பதங்கம்

இதற்கு ஆயுள் அளவு பத்தாண்டு.

செந்தூரம்

இஃது எழுபத்தைந்தாண்டு வன்மையுள்ளது.

நீறு, கட்டு, உருக்கு, களங்கு

இவை நூறாண்டு வன்மையுள்ளன.

சுண்ணம்

இஃது ஐந்நூறு ஆண்டு வன்மை உள்ளது.

கற்பம், சத்து, குருகுளிகை

இவை பல நூறாண்டுகள் வன்மை உள்ளவையாய் இருக்கும்.

ஆகையினால் இம் மருந்துகளை அந்தந்தக் கால அளவிற்கு மேல் பயன்படுத்துதல் கூடாது.

புறமருந்துவகை

புற மருந்து முப்பத்திரண்டும் அவற்றுள் சிலவற்றின் ஆயுள் அளவும்

1. கட்டுதல் 2. பற்று
3. ஏற்றம் 4. பூச்சு
5. வேது 6. பொட்டணம்
7. தொக்கணம் 8. புகை
9. மை 10. பொடிதிமிர்தல்

| | |
|---|---|
| 11. கலிக்கம் | 12. நசியம் |
| 13. ஊதல் | 14. நாசிகாபரணம் |
| 15. களிம்பு | 16. சீலை |
| 17. நீர் | 18. வர்த்தி |
| 19. சுட்டிகை | 20. சலாகை |
| 21. பசை | 22. களி |
| 23. பொடி | 24. முறிச்சல் |
| 25. கீறல் | 26. காரம் |
| 27. அட்டைவிடல் | 28. அறுவை |
| 29. கொம்புகட்டல் | 30. உறிஞ்சல் |
| 31. குருதி வாங்கல் | 32. பீச்சு |

என்பன புற மருந்து முப்பத்திரண்டாம்

மை, கலிக்கம், நசியம், பசை, பீச்சு

இவை ஓராண்டு வன்மை உள்ளவை.

நாசிகாபரணம், நீர், வர்த்தி, பொடி:

இவை மூன்று திங்கள் வன்மை உள்ளவை.

களிம்பு, சீலை

இவை ஆறு திங்கள் வன்மை உள்ளவை.

## நூற் பொருள்

### வாகடம்

மருத்துவ நூல்களுக்கு வழங்கும் பெயர்களுள் வாகடம் என்பதும் ஒன்று. நோய் நீக்கும் முறையைக் கூறும் நூலை வாகடம் என்பர். வாகடம் என்பதை வாகு - அடம் எனப் பிரித்து உடலுக்கு வரும் நோய் முதலியவற்றை அடுதல் எனப் பொருள் கூறுவாருமுளர். வாக்படர் என்ற ஆயுர் வேத ஆசிரியரின் பெயரடிப்படையில் வாக்படர் - வாகடர் - வாகடம் என்றவாறு உருவானதாகவும் வழக்கு உள்ளது.

சாரம் என்பது பிழிவு. அகத்தியரின் பெருநூலான வாகடத்தின் பிழிவாக இச் சுருக்க நூல் அமைதலின் வாகட சாரம் என்னும் பெயர்த்து.

### அகச் சான்று

வாதமும் பித்த மைய
  மருவிய குணபா டத்தை
தீதற முனிவர் நூலை
  தேர்ந்தபின் திரட்ட தாக
ஓதிய சுருக்க நூலை
  ஒழுங்கொடு வுணர்ந்து கொள்ள
வாதுதீர் வயித்திய ருக்கு
  வல்லருள் விளக்க மாமே (பா. 41)

சித்த மருத்துவ முறையானது சிவபெருமானால் உமாதேவியார்க்கு ஓதப்பெற்றுப் பின் உமாதேவி முருகனுக்கும் முருகன் நந்திக்கும் நந்தி பிற சித்தர்க்குமென முறையே உரைக்க இந்நூலும் அவ்வாறமைந்த சித்த மருத்துவ நூலே. இதனை உறுதி செய்யும் வகையில்,

தேனென்ற மொழியாட்குப் பரனார் சொன்னார்
செகமெல்லாம் இப்படித்தான் செனித்த வாறே
(பா. 8)

என்ற வரிகள் அமைந்து இந்நூல் சித்த மருத்துவ முறையினது என்பதைப் பறைசாற்றுகின்றது.

சித்த மருத்துவமுறைப்படி நோயைக் கணிப்பதற்கு எட்டுவிதமான அணுகுமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றையே எண்வகை தேர்வு என்பர்.

ஆயுர் வேதத்தில் கூறப்படும் அஷ்டவிதப் பரிட்சைகளுக்கும் சித்த மருத்துவத்தில் கூறப்படும் எண்வகைத் தேர்வுக்கும் சிறித வேறுபாடுண்டு. சித்த மருத்துவத்தில் கூறப்படும். எண்வகை தேர்வுகளாவன: 1. நா, 2. நிறம், 3. மொழி, 4. விழி, 5. தொடு உணர்வு, 6. மலம் 7. சிறுநீர், 8. நாடி என்பன.

1. நா: நோயாளின் நாக்கைப் பரிசோதிக்க வேண்டும். நாக்கு இயற்கையாக இருக்கிறதா? சிவந்திருக்கிறதா? கறுத்திருக்கிறதா? வெண்மையாக உள்ளதா? நோயாளிக்குச் சுவை மாறுபடுகிறதா என்பவற்றை அறிந்து மிகுந்த குற்றம் வாதமா, பித்தமா, கபமா என்பதை அறிய முடியும்.

2. நிறம்: நோயாளியின் இயற்கை நிறம் என்ன? அதிலிருந்து மாறுபட்டுக் காணப்படுகிறா என்பதை உணர்ந்து முக்குற்றங்களின் வேறுபாட்டை அறியலாம்.

3. மொழி: நோயாளின் குரல், பேச்சுந்தடுமாற்றம், ஆகியவற்றை கண்டு நோயை கணிக்கலாம்.

4. விழி: கண்ணின் பார்வை நிறம், தாபிதம், இமைத்தலில் கோளாறுகள், நீர் பாய்தல் ஆகியவற்றை கொண்டு வளி, அழல், ஐயங்களின் மாறுபாடுகளைக் கணிக்கலாம்.

5. தொடு உணர்வு: நோயாளியின் மேனியைத் தொட்டால் உணர்வு உள்ளதா? வலி, எரிச்சல், சூடு, குளிர்ந்து காணப்படுகிறதா என்பவற்றை கொண்டு வாத, பித்த ஐய நாடிகளின் மாறுபாட்டைக் கணிக்கலாம்.

6. மலம்: கழிக்கின்ற மலத்தின் நிறம், அதனுடன் இரத்தம், சீழ், போகிறதா? நீராக போகிறதா? காற்றுடன் கலந்து போகிறதா என்பவற்றை கண்டு முக்குற்ற வேறுபாடுகளை அறியலாம்.

7. சிறுநீர்: நோயாளன் சிறுநீரின் நிறம், அளவு, நுரை, எச்சல் (அடியில் தங்குவது) கழிக்குபோது உண்டாகும் உணர்வுகள், சிறுநீர் கழிந்தும் தடவைகள் ஆகியவற்றை கண்டு குற்றவேறுபாட்டை அறியலாம்.

8. நாடி: மேற்கூறிய ஏழு வகைத் தேர்வுகளிலும் கண்ட உண்மைகளை ஒழுங்குபடுத்தி நாடி பார்த்து நோயைக் கணிக்க வேண்டும்.

நாடி

நாடி என்பது, ரத்தக் குழல்களில் உண்டாம் துடிப்புகளின் எண்ணிக்கையோ (Rate ) துடிப்புக்களின் தாள அமைதியோ

( Rhythm ) எழுப்பும் பரிமாணமோ

( Volume ) அழுத்தமோ

( Tension ) மட்டுமல்ல.

அது ஒவ்வொரு உடம்பிலும் செயல்படும் உயிரின் முழு இயக்கமாகும்.

" நாடியென்றால் நாடியல்ல நரம்பில்தானே
நலமாகத்துடிக்கின்ற துடிதானுமல்ல
நாடியென்றால் எழுபத்தீராயிரமுமல்ல
நாடியென்றால் வாதபித்த சிலேற்பனமுமல்ல
நாடியென்றால் அண்ட பகிரண்டமெல்லாம்
நாடியெனும் பொருள் தெரிந்து நாடுவாரே"

என்று ஓர் சித்தர் கூறுகிறார்.

சிறப்பாகப் பத்து இடங்களில் இரத்தக் குழாய்களில், இரத்த அழுத்தம் காணும். இதனையே நாடி உடம்பில் பத்து இடங்களில் பார்க்கலாம் என்று சித்தர்கள் கூறியுள்ளார்கள்

## தசநாடி

சுழிமுனை இடகலை பிங்கலை காந்தாரி
காயத்திரி சிங்குவை யலம்புடை புருடன் தாகும்
நெமுகுருவன் சங்கினியோ டிரைந்தாக
நின்றதச நாடிபத்தும் நிலைத்த நாமம்.

அவை: 1. இடகலை, 2. பிங்கலை, 3. சுழுமுனை, 4. சிங்குவை
5. புருடன், 6. காந்தாரி, 7. அத்தி, 8. அலம்புடை,
9. சங்கினி, குரு எனப்படும்.

1. இடகலை: வலக்கால் பெருவிரலிலிருந்து கத்தரிக் கோல்போல் இடது மூக்கை பற்றி இருக்கும்
2. பிங்கலை: இடக்கால் பெரு விரலிலிருந்து கத்தரிக் கோல்போல் வலது மூக்கை பற்றிருக்கும்
3. சுழுமுனை: மூலாதாரத்தைத் தொடர்ந்து எல்லா நாடிகளுக்கும் ஆதாரமாக ஒரு நாடியாகச் சிரசளவு முட்டி நிற்கும்.
4. சிங்குவை: உள் நாக்கில் நிற்கும்
5. புருடன்: வலக்கண்ணளவாய் நிற்கும்
6. காந்தாரி: இடக்கண்ணளவாய் நிற்கும்
7. அத்தி: வலக்காதளவாய் நிற்கும்
8. அலம்புடை: இடக்காதளவாய் நிற்கும்
9. சங்கினி: குறியளவாய் நிற்கும்
10. குரு: அபானத் தளவாய் நிற்கும்.

## நாடியின் இடங்கள்

"அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பெறாஞ் சலத்தினில்
மறந்திடும் ஐயம் வாசிக்கும் விந்துவில்
உறைந்திடும் மூன்றுக் குறவாந் தலமிதே"

## நாடியின் நிறம்

"உறவாங் கறுப்புஞ் சிவப்பிலும் நல்வாதம்
குறைவான பச்சைப் பசுமைக் கொடும்பித்தம்
நிறைவான வெண்மையாய் நின்றது நல்லையம்
அறைவான வர்ணம தாகுந் தலமிதே"

மருத்துவத்தின் விரிந்த நூலிலிருந்து இன்றியமையா சில செய்திகளை மட்டும் சுருங்கிய நிலையில் பாடல்களாகச் செய்வதோ சில பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து அமைப்பதோ வைத்திய சாரம் என்று குறிப்பிடப்படுகிறது.

மருத்துவத்தில், மருந்து, செய்முறை கொடுக்கும் முறை, நோய் வகைகள் நோய்க் குணங்கள் நோய்க்குரிய மருந்து என்னும் பல வகையான முறைகளை விரித்துச் சொல்லுவது பெருநூல்களாகும். அவை ஆசிரியர் பெயர், நூல் பொருளின் பெயர், பொதுப்பெயர் போன்ற நிலையில் அமையும். சான்றாக:

அகத்தியர் பன்னிராயிரம்

அகத்தியர் முதற்காண்டம்

அகத்தியர் தைலவர்க்கம்

அகத்தியர் வைத்திய சூத்திரம்

போன்ற நிலைகளில் பெயர் அமைவதுண்டு.

இந்தப் பெரு நூல்கள் சில பயன் கருதி சுருக்கிச் சொல்லப்படுவது உண்டு. அவற்றுள் நோய்களைப் போக்கும் மருந்து முறைகளை மட்டும் தொகுத்து பெரு நூலில் இருந்து சுருக்கித் தருவது 'வாகடம்' என்ற பெயரைப் பெருவாரியாகப் பெறுகிறது.

இந்த நிலையிலும் சுருங்கி அடிக்கடி தோன்றும் நோய்களுக்குரிய மருந்து முறைகளை மட்டும் மிகச் சுருக்கமாக தொகுத்துக்கூறுவதே மருத்துவச் சாரம் எனப்படுகிறது. பல சுவடிகளையும், அச்சு நூல்களையும் நன்கு ஆய்ந்து பார்த்து அவற்றின் பெயருக்கும், அவை கூறும் செய்திக்கும் உள்ள தொடர்பை ஆய்வு செய்கிற பொழுது இவ்வாறு பெரு நூல், வாகடம்,

சாரம் என்னும் பெயர் பெறும் முறைகளை அறிய முடிகிறது.

## ஆய்வு சாரம்

இந்த ஆய்வேட்டில் வைத்திய சாரம், நோயின் சாரம், அவிழ்த சாரம் என்னும் மூன்று சுவடிகள் தொகுத்து அளிக்கப் பெறுகின்றன. இவற்றில் சாரம் என்ற பெயரும், கருங்கிய மருத்துவமுறை என்ற அடிப்படையிலேயே அமைவதும் சான்றாகிறது.

## வைத்திய சாரம்

மருந்து கொடுக்கக்கூடாத பேர்கள், மருத்துவத்தைப் பற்றி சொல்லக் கூடாதவர்கள், போன்ற மருத்துவர்களுக்குரிய அறவுரை யோடு நூல் தொடங்குகிறது. இச் செய்தியைச் சொல்லு முன் கணபதி காப்பு அடங்கிய ஒரு வெண்பாவும் அமைகிறது.

கைக்கூலி வாங்குதல், களவுக் கூலி பெறுதல் ஆகியவற்றை முன் பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதுபோல,கூலி வேலைசெய்வோர், பிறர் ப ணியைக் கண்காணிப்போர், வித்தை காட்டுவோர், பாடம் சொல்லித்தருவோர், ஆகியோர் அப்போதைக்கப்போதே தங்கள் கூலியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இவற்றைப்போலவே மருத்துவர்களும் பணம் வாங்கிக் கொண்டே மருத்துவம் செய்தல் வேண்டும், என்று கூறும் தொடக்க செய்தி அரிய செய்தியாகவே காணப்படுகிறது.

மருத்துவத்தை தவறான முறையில் செய்பவர்களுக்கு நரகம் கிடைக்கும். என்ற அச்சுறுத்தலும் நூலில் காணப்படுகிறது. பிறவாகிய மருத்துவச் செய்திகள் தனியே தொகுத்து அளிக்கப்பட்டன.

மருத்துவருக்கு,

1. மருந்து சத்தி அறிதல் 2. மருந்தின் குணமறிதல், 3. மருந்தின் பொருளறிதல் ஆகிய மூன்றும் மூன்றுக் கண்களாகும்.

2. வாதம், பித்தம், சிலேத்துமம், தொந்தம் ஆகிய நான்கும் மருத்துவரின் நான்கு தலைகளாகும்.

3. அறுசுவையை அறியும் ஆறு சுவை அறிவும் ஆறு கைகளாகும்.

4. நாடி முதலான எண்வகை குறியறியும் முறைகள் எட்டு உடல்களாகும்.

5. தசநாடியும், தசவாயுவுமாகிய இரு வகைப்பத்தும் மருத்துவரின் பத்து கால்களாம்.

6. அண்ட பிண்ட நிலைகளாகிய ஐம்பெரும் பூத தத்துவங்கள் மருத்துவரின் ஐந்து முகங்களாகும் என்று கூறுவது ஒருபாடல் (பா. 6)

இது கண்கள் மூன்றும், தலைகள், நான்கும், முகங்கள் ஐந்தும், கைகள் ஆறும், உடல் எட்டும் கால்கள் பத்துமாக வடிவெடுக்கப்பட்ட ஒரு கம்பீரமான மருத்துவரை உருவாக்கி காட்டுவதாகும்.

அச்சமற்றவர்களாக, அசாத்திய சாத்தியங்களை அறியும் திறன் உடையவர்களாக, குறி குணங்களைக் காண்பதில் ஒரு தலைப்பட்சம் அற்றவர்களாக, நோய் நீக்கும் உரிய மருந்தைத் தேர்ந்தெடுக்கும் திறன் உடையவர்களாக விளங்குபவர்களே உயர்ந்த மருத்துவர் ஆவர், என்று கூறும் ஒரு பாடல், இச் செயல்களில் தவறுவோர் குடும்பம் வேரோடு அற்றுப் போகும் என்று அச்சுறுத்தவும் செய்கிறது. (பா. 8) இதுபோன்ற அச்சுறுத்தல்கள் பல பாடல்களில் பல வகையாக அமைகின்றன.

மருந்து, மருத்துவம், மருத்துவர் ஆகிய மூன்று நிலையில் சுருக்கிச் சொல்லும், சாரநூலே ஆயினும் பலவகை இலக்கிய நயங்களோடு பாடப்பட்டுள்ளது. என்பதும் குறிப்பிடதக்கதாகும்.

நாடியின் நடையை எடுத்துச் சொல்வதற்கு பல உவமைகள் கையாளப்படுவது பொருள் புலப்பாட்டிற்கு உரியதாக அமைகிறது.

1. வாத நாடி கோழியைப் போல, அன்டி நிற்குமானால் வாத சன்னியின் நிலையை எடுத்துக் காட்டுவதாகும், என்று புலப்படுகிறது. அதுவே ஒடும் குதிரைப் போன்ற நடையாக இருந்தால் தொன்னூறு நாழியில் மரணம் உறுதி. இவ்வாறு தலையில் பேன் ஊர்ந்து செல்லும் நடை புழுவைப் போல் துடித்துச் செல்லும் நடை அரணைவால் போலும், அன்னம் போலும், காகம்போலும் நடைகள் உவமைகளாகக் கூறப்பட்டு நாடி நடைகளைப் புலப்படுத்துவது பொருள் புலப்பாட்டு நெறியாக அமைவதோடு உவமை நயம் பொருந்திய இலக்கிய நயமாகவும் அமைகிறது.

கைக்கனி, கண்ணின் கனி, வேசிகனி, மெய்க்கனி, வித்தைக் கனி... போன்று பத்து முறை கனி என்ற சொல் ஒரே பொருளில் பயன்படுத்தும் ஒரு பாடல் (பா. 2) சொற்பொருள் பின் வரு நிலை அணி. நயம் உடையதாக அமைவதோடு அடி இயைபுத் தொடை நயமும் பெற்று விளங்குகிறது. இவ்வாறு இயைபுத் தொடை நயமுடைய பாடல்கள் நூலில் பல அமைகின்றன.

அல்லு நிறக் குழலாளே (27:3)

மாமயிலே சத்தமது அறிய வேண்டில் (32:3)

வாரிட்ட முலைநல் லாளே (52:2)

வார்பெறு தனத்தாய் (110:1) என்பன மகடூ முன்னிலைத் தொடர்களாக அமைந்து ஒரு பெண்ணை முன்னிலைப் படுத்தி அவளிடத்தில் கூறுவது போல உலகிற்கு எடுத்துக் கூறும் இலக்கிய நடையை இம் மருத்துவ நூலும் பெற்றிருக்கிறது.

## மறைபொருள் சொற்கள்

வழக்காற்றில் பயின்றுவராத, ஆனால், மிக எளிய மருந்துப் பொருள்களைக் குறிக்கின்றன சொற்களாகப் பல சொற்கள் நூலில் கையாளப்படுகின்றன.

சான்று:

மரிசம் - மிளகு (103:3)

கன்னி - கற்றாழை (114:1)

பெருமருந்து - ஈசுர முலி (129:1)

நாகம் - சிறுநாகப்பூ (108.3)

போல்வன மறைபொருள் சொற்களாகக் கையாளப்படுகின்றன.. இவற்றை சித்த மருத்துவ முறையில் பரிபாஷை என்ற சொல்லால் வழங்கி வருகின்றனர். மிக எளிமையாக கூறப்படுகின்ற இந்த வைத்திய சார பாடல்களில் இவ்வாறு மறைபொருள் கிளவிகளும் கையாளப்பெற்றுள்ளன. இதற்கு காரணம் அக்காலத்தில் இக் கிளவிகள் அனைத்தும் மருத்துவர்களால் பரவலாக கையாளப்பட்டு வந்துள்ளன என்பதே ஆகும். மேலும் ஒரே பொருளைக் குறிக்கின்ற பல சொற்களை இலக்கிய நயம்பட ஆங்காங்கு கையாண்டு உள்ளனர் என்றும் கொள்ளலாம்.

## முடிவுரை

வாகடசாரம் எனும் இந்நூல் அகத்தியர் இயற்றிய நோயின்சாரம் வைத்திய சாரம், அமிர்த சாரம் என்ற மூன்று நூல்களின் தொகுப்பாக அமைந்து விளங்குகின்றது. எளிய நடையும் இனிய நயமும் அமைந்த சிறந்த மருத்துவக் கருத்துகளைத் தமிழ் கூறுநல்லுலகத்திற்கு வழங்குகின்றது. இது போன்று, மறைந்து கிடக்கும் மருத்துவச் சுவடிகள் பலவும் பதிப்பிக்கப் பெற்று வெளிவரின் தமிழ் மருத்துவம் பல்லாற்றானும் மறுமலர்ச்சியுற்று வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

நூற் பொருள்

# வைத்திய சாரம் - 36

## பாடல் 1: மருந்து கொடுக்க கூடாத பேர்கள்

பிறர் மனைவியின் மீது ஆசை கொள்பவன், வஞ்சகன், லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பவன் குலைக்காரன், சண்டைக்காரன் கொடியவன், திருடன், சோம்பேறி, கஞ்சன், பண்பில்லாதவன், அறிவில்லாதவன், மானமில்லாதவன், பண்டிதரோடு பகைத்தவன் செவிடன், ஊமை ஆகியோர் மருந்து கொடுக்கக் கூடாத பேர்களாகச் சுட்டுகின்றனர்.

## பாடல் 2: முன்னே பணம் வாங்கிக் கொண்டு பின்னே வயித்தியம் செய்யவும்

கைக்கூலி, கையொப்பக் கூலி, பொருட்பெண்டிர் கூலி, கள்கூலி, வித்தை கூலி, வியாபாரக் கூலி, பிணி தீர்க்கும் வயித்தியக் கூலி, ஆசிரியர் கூலி ஆகியவற்றை உடனுக்குடன் பெற வேண்டும் அன்றில் பிறகு கிடைக்காது.

## பாடல் 3: துஉஷ்டர்களுக்கு மூன்றுஞ் சொல்லக் கூடாது

மந்திரம், வாகடம், பழைய நூல் ஆகியவற்றைப் பற்றி துஉஷ்டர்களுக்கும், அறிவில்லா சண்டாளர்களுக்கும் சொல்லக் கூடாது.

## பாடல் 4: இந்த நான்கு வகையறியாமல் வைத்தியம் செய்பவர்களுக்கு நரகம் வரும்

சோதிடம், பலிக்கின்ற காலம், அதன் ஏற்ற தாழ்வுகள், பிராயச்சித்தம், வைத்தியம் இந்நான்கின் வழியே மருத்துவம் மேற்கொண்டால் யாருக்கும் குற்றம் இல்லை.

## பாடல் 5: கண்கள் - மூன்று, தலைகள் - நான்கு, முகங்கள் - ஐந்து, கைகள் - ஆறு, சரீரங்கள் - எட்டு, கால்கள் - பத்து, இந்த ஆறு வித குணங்கள் அறியார் ரோகிகளைக் கொல்றதானல் நரக மடைவார்.

கண்கள் மூன்று, தலைகள் நர்ன்கு, முகங்கள் ஐந்து, கைகள் ஆறு சரீரங்கள் எட்டு, கால்கள் பத்து இந்த ஆறு வித குணங்களை அறியாத வைத்தியர் நோயாளிகளைக் கொள்வதினால் நரகத்தைச் சேர்வர்.

## பாடல் 6: கண் - தலை - கை - சரீரம் - கால் - பிண்ட நிலமை விவரங்கள்

வைத்தியருக்கு உரிய உறுப்புகளாவன:-

மருந்து, மருந்து சத்தி குணம், நிகண்டு என்பன மூன்று கண்கள்.

வாதம், பித்தம் சிலேத்துமம், தொந்தம் என்ற நான்கும் தலைகளாம்.

ஆறு சுவைகள், ஆறு கைகளாம்

எண்வகை தேர்வு முறைகள் எட்டு. சரீரங்களாம், பத்து, நாடிகள், பத்து வாயுக்கள் ஒன்றிணைந்து பத்து கால்களாம் அண்டத்திலும், பிண்டத்திலும் பொருந்தியது. ஐந்து முகங்களாம்.

பாடல் 7: வாகடத்தின் பயனறியார் நாடி காணார்

நாடி அறியாத வைத்தியர் வலக்கையைப் பிடித்து இழுத்து அசாத்திய நோய் என்று சொல்லி; அப்பிணியைத் தீர்ப்பேன் என்று சொல்லி தான் பெரிய வைத்திய ரத்தினம் என்றும் சொல்லுவார் ஆனால் பிணியைத் தீர்க்கமாட்டார். அத்தகயவர்க்கு மோட்சம் இல்லை, நரகம் நிச்சயம்.

பாடல் 8:

வைத்தியர்கள் நோயுற்றோர் உடைய நோயின் தன்மை, அசாத்திய குணம், நோயின் குறிகுணம், தீர்க்க மருந்து, பரிகாரம் போன்றவற்றை முறையாக செய்யாமல் போனால் அவர் குலங்கள் வேரோடு அழிவுற்று போகும். நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர்.

பாடல் 9:

நோயாளியின் மெய் தேர்வு, கைதேர்வு ஆகியவற்றை நாடி மூலம் கண்டு தெளிந்து தகுந்த யோசனையுடன் மருத்துவம் செய்ய வேண்டும்.

பாடல் 10:

நோயாளிகள் மருத்துவரை குருவாக எண்ணி மருந்து வாங்கி பக்தியாக கொள்ள வேண்டும். மனத்தின் உரத்தைக் காக்க வேண்டும். கழுதைப் போலிருந்தவருக்குப் பலிக்காது.

பாடல் 11: நாட்டில் உள்ள நோயாளிகள் முறை

நாட்டில் உள்ள நோயாளிகள் முறையாக மருந்தைப் பக்தியோடு கொண்டார்களானால், நோய்கள் தீயின் முன் நின்ற பஞ்சு போல் ஒடும். பொதுவாக ஒருவர் தனக்கு நோய்வரும் போது மருத்துவரைக் குருவே என்பார்.

பாடல் 12:

நோயாளி, வைத்தியரைப் பிணிதீருவதற்கு முன் தாய், தந்தை, குரு என்பார். ஆனால் நோய் தீர்ந்த பிறகு தம்பி என்பார். நோய் தீர்ந்த பிறகு உபசாரம் வேறுவிதமாக இருக்கும். வைத்தியருடைய முகம் வாடி, மனம் நொந்தால், பிணி அகலாது. இதையறிந்து வைத்தியம் பெறுக.

பாடல் 13:

மனதில் வஞ்சம் இல்லாதவராகிய மருத்துவர் நோயாளிக்குத் தம் குழந்தையைக் காட்டிலும் பத்து மடங்கு கவனத்தோடு மருந்து செய்து நோயாளியின் நோய் நிலையைக் கருத்தில் கொண்டு பணியாற்றுவர். இத்தகைய வைத்தியருக்குப் பணம் கொடுக்காமல் ஏனை மொழி கூறும் பாவிகளை எமன் நரகத்தில் தள்ளி பாசக்கயிற்றால் அடிப்பான்.

பாடல் 14, 15: பிண்ட உற்பத்தி

ஆணின் விந்துவில் பத்து வாயுக்கள் கலந்து சுரோணிதத்துடன் கலக்கும் போது பெண் கருவுறுவாள்.

பாடல் 16,17, 18: கரு தரிக்கும் விதம்

ஆண், பெண்ணுடன் கூடி விந்து வெளிப்படுகிற சமயம், சுரம் என்னும் பிராணவாயு வலப்பக்க மூக்கு வழியாக இயங்கினால் (பிங்கலை) ஆண்யென்றும், இடதுபக்க மூக்கு வழியாக இயங்கினால் (இடகலை) பெண்யென்றும் அறிக.

சுக்கிலமும் சுரோணிதமும் கூடி உருவான கரு கழற்சிக்காய் போல் திரண்டு, முதலில் தலை உண்டாகும். தொடர்ந்து கை, கால், நரம்பு, மூளை, மலசல துவாரங்கள் தோன்றும். சிரசுவழியாக தாய் உண்ட உணவு செல்லும். அவ்வாறு சென்ற உணவு கழிவாக தொப்புள் வழியாக வெளியேறும்.

பெண்ணானவள் ஆணுடன் மருவும்போது முறை வேறு நிலையில் இருந்தால் மலடா வாள். ஆண் மலடும் அவ்வாறே அமையும்.

பாடல் 19: பலத்து நிற்கும் தசவாயுக்களின் பெயர், பிராண வாயு இருப்பிடம் - தச நாடிகளின் பெயர்களாவன

பிராணன், அபானன், வியானன், சமானன், நாகன், கிருகரன்,

தேவதத்தன், தனஞ்செயன், (கூர்மன், உதானன்) வாயுக்கள் பத்தாகும். இவற்றுள் பிராணன் மூலத்தில் தோன்றி தலையளவு ஓடி. இரு விழிகளுக்கும் கீழாக இறங்கி நாசி வழியே வெளிப்படும். பன்னிரண்டு அங்குலம் பாயும் பிராண வாயுவில் எட்டு அங்குலம் உட்புகும். வீணே கழிவது நான்கு அங்குலமாகும்.

<u>பாடல் 20: அபானன், வியானன், உதானன் சமான வாயுக்கள்</u>

அபானன் - உந்திக்குகீழ் நின்று மலசலங்களைக் கழியச் செய்யும்

வியானன் - தோலில் நின்று உறுப்புக்களை வலுவூட்டும்

உதானன் - பெருநாடி, நரம்பு வழியாக உணவின் சாரத்தை எடுத்துச் செல்லும்.

சமானன் - மற்ற வாயுக்களை மிஞ்ச வொட்டாமல் உடலை சமநிலையில் நிறுத்தி காக்கும்.

<u>பாடல் 21: கூர்மன், நாகன், கிருகரன், தேவதத்தன் தனஞ்செயன் வாயுக்கள்</u>

கூர்மன்: கண்ணிருந்து, கொண்டு இமைத்தல் தொழிலைச் செய்யும்

நாகன்: கொட்டாவி, விக்கல் ஆகியவற்றை உண்டாக்கும்

கிருகரன்: நீட்டி முடக்க உதவும்

தேவதத்தன்: சிரிப்பு, உணவு உண்டல் ஆகியவை செய்ய உதவும்

தனஞ்செயன்: சிரசில் நின்று செயல்படும்.

## பாடல் 22: தசநாடிகளின் பெயர்கள் சுழிமுனை நாடி

### இடகலை - பிங்கலை

சுழிமுனை, இடகலை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புடை, புருடன் குருடன், சங்கினி ஆகிய தசநாடி பத்தாகும்.

சுழிமுனை நாடி - மூலாதாரத்திலிருந்து எழுந்து சிரசளவாய் நிற்கும்.

இருவிழியினிடையே இடகலை, பிங்கலை தோன்றி இரு நாசி வழியாக ஓடிநிற்கும்.

## பாடல் 23: காந்தாரி - அத்தி - சிங்குவை - அலம்புடை

### புருடன் - குரு நாடிகள்

காந்தாரி - கண்டத்தில் நின்று, நாவில் நீர்சுரத்தல் உபாயங்கள் செய்யும்.

சிங்குவை அத்தி - சிங்குவை அத்தி செவிதனில் நின்று நாக்கு அவத்தைகளை உண்டு பண்ணும்.

புருடன் அலம்புடை - இருவிழியில் நின்று மெய்மறந்தபோது அசைவற்று நிற்கும்

குருநாடி - குடல் புரட்டி வாயில் நீர்சுரத்தி நிற்கும்.

## பாடல் 24: சங்கினி நாடி விடயம் ஐந்தின் பெயர்கள்

### வரன் விடயம்

சங்கினி நாடி நாபி, குதம், ஆகியவற்றைப் பற்றி நிற்கும். ஒன்றையும் மிஞ்ச வொட்டாமல் செய்யும். வாக்கு அதிகாரியாக நின்று ஐம்பத்தோறு அட்சரத்தையும் அறிவிக்கும். வசனம், கமனம், எழில், விசர்க்கம், ஆனந்தம் என்ற ஐந்தினுள் வசனத்திற்கு சுதபனாக நின்று வாக்கில் நின்று பேசச் செய்யும்.

## பாடல் 25: வியாதிகளை அஷ்டவிதப் பரீட்சைகளாலும்

### நிச்சயித்தல்

நாடி, கண், ஒலி, ஊறு, மணம், நா, மலம், சிறுநீர் ஆகிய எட்டும் வியாதிகளை அறிய உதவும் தேர்வு முறைகள். இவ்வெட்டும் அஷ்டாங்கம் எனப்படும்.

## பாடல் 26: நாடிகள் நிற்குமிடங்களும் வாத நாடி நடையும்

### வருதல் அறிக.

கையின் கண், பெருவிரலின் மேலே மூன்று அங்குலம் தள்ளி நடுவிடத்தில் கோதுமையரிசி அளவுக்கு முழுமையாக வியாபித்திருப்பது நாடியாகும். கையடியிலும், காலடியிலும் நாடி நிற்கும். பெண்களுக்கு இடபுறமாகவும், வாத நாடி வந்து நடக்கும்.

## பாடல் 27: பித்தம் சிலேத்தும நாடி நடைகள்

வாத நாடியைத் தொடர்ந்து பித்த நாடியும், அதனை யடுத்து சிலேத்தும நாடியும் தோன்றும். அதற்கும் அப்பால் நாடி நிற்குமாகில் ஆச்சரிய நாடியாகும். வாத நாடி தவளைப் போலும், அட்டை, தொட்டிலின் ஆட்டம் ஆகியவற்றை ஒப்ப நடக்கும்.

## பாடல் 28: பயித்திய நாடி நடை - சிலேத்தும

### நாடி நடை - வாதமும் பித்தமும்

### தொந்தித்த நாடி நடை

பித்த நாடி சவலைப்பிள்ளை, அன்னம், காகம் ஆகியவற்றைப் போல நடக்கும்.

சிலேத்தும நாடி நடை பறவை, ஊர்க்குருவி கோழி, ஆகியவற்றை ஒப்ப நடக்கும்.

வாத பித்த நாடி நடை காடைப்போல நடக்க தொடங்கி பின் மயில் போல நடக்கும்.

## பாடல் 29: வாத சிலேத்துமம் தொந்தித்த நாடி

### அசீரண நாடி - மகரிதய நாடி - நிதிரி

### சங்கை நாடி - மலபந்த நாடி - சன்னி

### வாத நாடிகளின் வருகை

வாதமும் சிலேத்துமம் கூடில் கோழி, அட்டை போன்று நடக்கும். அஜீரண நாடி மதயானை போல் நடக்கும். உட்சங்கை நாடி தூங்குகின்ற காகம்போல் நடக்கும். மலபந்தநாடி ஊரும் அன்னம்போல நடக்கும். சன்னி வாதம் உயர்நாடி என்று சுட்டப்பட்டுள்ளதே ஒழிய நடை கூறபட வில்லை.

பாடல் 30: குடிலை - குட்சம வாயு, சன்னி வாதம்

சங்கினி - காந்தாரி - நாடிகளின்

நடைகள் அறிதல்

குடிலை வாயுநடை - விறகு கட்டுக்குள் மூஞ்சூறு உலாவுதல் போல நடக்கும்.

குட்சம வாயு - விரைந்து எழுந்து இடையில் மந்தமாகி பின்வேறு விதமாக நடக்கும்.

சன்னி வாதத்தின் நடையும் இத்தன்மையதே.

சங்கினி, காந்தாரி விரைந்தெழுந்து நடக்கும் முறைமையினை.

பாடல் 31: தேகங்களின் பரிசங்களும், நிறங்களும்

வரும் குறியறிதல்

உடலின் உற்றுணர்வைப் பார்க்க வாத தேகிக்கு உடல் வெப்பமாக இருக்கும்.

பித்த தேகிகட்கு குளிர்ச்சியாக இருக்கும் சிலேத்தும தேகிக்கு தொந்தித்து நாலு விதமாய் காணும்.

வாத தேகத்தின் நிறம் கருத்து தோன்றும். பித்த தேகத்தின் நிறம் மஞ்சளும் சிவப்புமாகும்.

பாடல் 32: சப்த லட்சணம்

சிலேத்தும தேகியின் நிறம் வெளுப்பாகும் தொந்த தேகத்திற்கு நால விதமாய் நிற்கும். ஒலித் தேர்வு அடிப்படையில் நோக்க வாதரோகி இடைநிலையான குரலில் பேசுவான்.

பித்த ரோகி உரக்க கூறுவான் சிலேத்தும ரோகிக்கு சத்தம் அடங்கி காணும்.

தொந்த ரோகிக்கு நாலவிதமாய் காணும்.

பாடல் 33:

வாதரோகியின் கண்கள் கருநிறமாக நொந்து காணும் நீர்ப்பெருகும்.

பித்த ரோகியின் கண்கள் மஞ்சளும் சிவப்புமாய் காணும்.

சிலேத்தும ரோகியின் கண்கள் பீளை சேர்ந்து வெளுத்து காணும்.

சன்னி வாத ரோகியின் கண்கள் சிவந்து வீங்கி காமாலை-யென காணும்.

பாடல் 34: வாதமலம் - பித்த மலம் - கபமலம் - தொந்த மலம் - வாத சிறுநீர் - நிறங்கள்

வாதரோகியிற் மலம் இருகி கட்டி கருத்து காணும்.

பித்த ரோகியின் மலம் மஞ்சளும், சிவப்புமாக காணும்.

சிலேத்தும ரோகியின் மலம் வெளுத்து இருக்கும்.

தொந்த மலம் பல விதமாய் தோன்றும்

வாதரோகியின் சிறுநீர் வெளுத்திருக்கும்.

பாடல் 35: பயித்திய சிறுநீர் - கபநீர் -

தொந்த நீர் - வாதரோக நாவு -

பித்தரோக நாவு - நிறங்கள்

பித்த ரோகியின் சிறுநீர் மஞ்சலும், சிவப்பாய் தோன்றும்

சிலேத்தும ரோகியின் சிறுநீர் நுரையோடு கலங்கி காணும்.

தொந்த நீர் நாலவிதமாய் தோன்றும்.

வாதரோகியின் நாக்கு வெடித்து முள் போல் கருத்து காணும்.

பித்த ரோகியின் நாக்கு சிவந்தும் பசுமையாகவும் காணும்.

பாடல் 36: கபரோக நாவு - சன்னிரோக நாவு -

தொந்த ரோக நாவு

சிலேத்தும ரோகியின் நாக்கு வாய் வெளுத்து நீர் உண்டாகி காணும்.

சன்னி ரோக நாக்கு ஈரமற்று ஆனை முள் போல் கருகி காணும்.

தொந்த நாக்கு நாலவிதமாய் தோன்றும்.

இவ் எட்டுவித தேர்வு முறைகளை அறிந்தவர்கள் இவ்வுலகில் பண்டிதராவர் பெரியோர்க்கன்றி இம்முறைகள் பிறர்க்குக் கைவராது.

## நோயின் சாரம் - 66

### 1. நாடி பரிட்சை

**பாடல் 1, 2: மாதங்களில் நாடி பார்க்கும் காலமறிதல்**

சித்திரை, வைகாசி மாதங்களில் - காலையிலும்

ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் - மதியமும்

மார்கழி, தை, மாசி, ஆகிய மாதங்களில் - மாலையிலும்

பங்குனி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் - இரவிலும்

நாடி பார்க்க மூன்று நாடிகளும் தெளிவுற காணும்.

**பாடல் 3: நாடி பார்க்கில் பலித்திடா காலமறிதல்**

தலையில் எண்ணெய் தேய்த்து இருக்கும் போதும்,

ஈரதலையுடன் நின்ற போதும், உணவு அருந்தும் போதும்,

மிகுந்த பசி உள்ள நேரம், நடந்து செல்லும் காலம்,

சிற்றின்பத்தில் ஈடுபட்டிருக்கும் நேரம் ஆகிய காலங்களில்

நாடி பார்க்கில் பலித்திடாது.

**பாடல் 4, 5: நோய் நாடிப் பார்க்கும் விவரம்**

ஆண்களுக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும் நாடி பார்க்க வேண்டும்.

சுட்டு விரல் - வாதம்

நடுவிரல் - பித்தம்

மோதிர விரல் - ஐயம்

ஆகிய மூன்று நாடிகளையும் பிரித்து அறிதல் வேண்டும்.

வாத, பித்த, ஐய நாடிகளின் நடையை நன்கு அறிந்து

வைத்தியம் செய்ய வேண்டும்.

பாடல்



பாடல் 6: மந்த சுரக்குறி

வாத நாடியானது திரண்டு, உருண்டு பந்துபோல் எழும்பி காணப்பட்டால், குடலில் மந்தம் உள்ளது என்றும், அதனால் சுரம் உண்டாகி விடாமல் காயும். அன்றியும் உடற்கட்டுகளின் வன்மையும் குறைந்து, அறிவையும் மயக்கச் செய்யும்.

பாடல் 7: மந்தி சுரம், ம(ா)லை சுரமறிதல்

வாத நாடி சிலும்பி நின்று மெதுவாக நடக்கில் சுரம் தோன்றும். பெரும் காய்ச்சலாக இல்லாமல் மாலையில் வரும் சுரங்களின் ஒன்றாகிய என்புச்சுரம் (அத்திசுரம்) என்று அறிக.

பாடல் 10: மலபந்த நாடி

வாதநாடி மடங்கி குதித்து நின்றால், மலக்கட்டு உள்ளது என்றும், வாத, பித்த நாடிகள் கூடி காணில் வயிற்றில் எரிச்சலிருக்கும் என்றும் அறியலாம்.

பாடல் 11: மந்த சன்னி

வாத நாடி மடங்கி குதித்து நின்றால், மந்தமாகி சுரம் காயும், அவ்வாத நாடி வெழும்பி காணில் மூன்று நாளில் சன்னி தோன்றும் என்று அறிக

பாடல் 13: தோஷக்குறியறிதல்

வாத நாடியானது புழுவைப் போல் ஊர்ந்து ஓடில் சுரம் காணும். ஷாம் நாளில் நாவைப் பற்றி வாய் குழறி பேசும்.

பாடல் 15: வாத மெலிவு தோஷம்

வாத நாடியானது, மெலிந்து, பிரண்டு, அரணை வால்போல் தத்தி ஓடுமாகில் தோஷம் காணும்

பாடல் 16: சர்வாங்க வாத சன்னிக் குணம்

வாத நாடியானது கோழிபோல அண்டி நின்றால் வாதசன்னி காணும்.. வாதநாடி புலப்படாமலிருந்தால் சர்வாங்க சன்னி காணும்.

பாடல் 18: வாதகதியால் வரும் நோய்கள்

வாதம் மிகுந்தால் வாயுவு, சன்னி தோஷம் ஆகிய வியாதிகள் உடலில் தோன்றி, மெலிந்து கொல்லும்.

பாடல் 19: இரண்டு நாழி - ஒரு நாழியில் சாகும்குறி

வாத நாடியானது தலையில் உள்ள பேன்போல ஓடில் இரண்டு நாழிகையில் மரணம். மேலும், நோயாளியின் முகம் நொந்து, மஞ்சள் நிறத்தில் கண்டால் ஒரு நாழியில் மரணமாவான் என்றறிக.

பாடல் 20: தனிவாயு நோயும், வலிக்குன்மமும் மரணமும் வருங்குறி.

வாதநாடி தனித்து நின்றால் - வாயுவு மிகுந்து காணும்

வாதநாடி உதறி நின்றால் - வலிகுன்மம் வரும்

வாதநாடி தோன்றா விடில் - மரணம் காணும் என்றறிக.

பாடல் 21, 22: கர்ப்பம் தரித்த நாடி குணம்

வாத நாடி கருப்பையைப் பற்றி நின்றால், புறாப்போல ஊறும், மூன்றாம் மாதம் விட்டில் பூச்சிபோல் பதைக்கும். எட்டாம் திங்கள் புழுபோல காணும்.

மேலும், வாதநாடி சிதறி சிலம்பி காணில் மாதரின் வயிற்றில் சுரோணிதம் தங்கி மாதவிடாய் காலத்தில் வருத்தம் செய்யும் என்றறிக.

பாடல் 24: குதகத்தில் வாயுவு தங்கி குணம்

மாதர்களின் கையைப் பார்க்கும்போது மூன்று நாடிகளும் பதிந்து காணில் குதகத்தில் வாயுவு கூடி பல பிணிகளைத் தோற்றுவிக்கும் என்று அறிக

பாடல் 27: காலன் பிடிக்கும் நாடி

பாம்பின் நாக்குபோல வாத நாடி உதறியும், பித்த நாடி மறைந்தும் நின்றால் மரணம் நிச்சயம்.

பாடல் 28: மூலாதார வாதையால் சாதலும், பயித்தியம் பிடித்தலும் அறிதல்

பித்த நாடி புரண்டு காணில் மூலாதாரத்தில் வலி காணும்

பித்த நாடி அடித்து நின்றால் பயித்திய நோயி வந்து சேரும்.

<u>பாடல் 29:</u> பேச்செழும்புதலும், அடங்குதலும், குழறுதலும் வருகை

பித்த நாடியெழும்பி காணப்பட்டால் தொடர்ந்து பேச்சும், வசனமும் காணும்

பித்த நாடி அடங்கி அடித்து நின்றால் பேச்சு அடங்கி வாயி குழறில் போகும்.

<u>பாடல் 33:</u> வரட்சி சுரம், பிரமேகம் வரலாறு

பித்தநாடி வலமிடம் பிசகாமல், பச்சை புழுப்புபோல் ஓடில் உள்ளம் நொந்து. உடல் மெலிந்து, சுரம் காய்ந்து பிரமேகம் வந்து சேரும்.

<u>பாடல் 35:</u> பித்தத்தால் உண்டாகும் நோய்கள் வருதலிறிக

பித்தம் தனித்து நின்றால் - சூடு உண்டாகி உடல் உலரும்.

பித்தம் மிகுந்தால் - இருமல், ஈளை உடம்பு அழுத்தம் காணும்.

<u>பாடல் 36:</u> பெருவாதம், உதரவாயு, பயித்தியம் முதலான பிணிகள் உற்பவித்தல்

பித்தம் கதித்து நின்றால் வாதம், வயிற்றில் வாயு, பயித்தியம் போன்ற பல பிணிகள் பிறந்திடும்.

<u>பாடல் 37:</u> சன்னி வாதம், பிணத்தல், பிதற்றல் நினைவு இழப்பு வருகை

பித்தம், வாதத்துடன் பிணைந்து தோன்றினால் வாய் பிளத்தலுடன் சன்னி வாதம் தோன்றும்.

வாதத்தில் பித்தம் மீறில் பிதற்றி நினைவு இழப்பான்.

பாடல் 40: அசாத்திய நாடிக் குறியறிதல்

ஐய நாடியானது அரணைவால் போல் மந்தமாக ஓடினால் அந்நோயாளி சாவது நிச்சயம்.

பாடல் 44: ஒரு பகலுக்குள் இறக்கும் நாடி குறி

ஐய நாடி ஈசல்போல் சுழன்று பதறி நின்றால் ஒரு பகலுக்குள் நிச்சயமாக மரணம் காணும்.

பாடல் 45: குத்தல் - கோழை, வாயு - மரண நிச்சயக் குறி

சிலேத்தும நாடி தெளிந்து நின்றால் - தீமை உண்டாகும்
சிலேத்தும நாடி மந்தமாக ஓடில் - கோழை, வாயு உண்டாகும்
சிலேத்தும நாடி மிகுந்து நின்றால் - மரணம் நிச்சயம்.

பாடல் 46: சாகும் குறி

ஐய நாடி பித்தத்தோடு சேர்ந்து எதிர்த்து நடந்தால் ஒரு நாளில் மரணம் உண்டாகும்.

ஐய நாடி வாதத்தைப் பற்றி நின்றால் ஒரு நாழிகையில் மரணம் நிச்சயம்.

பாடல் 47: வியாதி தோஷமும், ஐயங்கள் வருகை

ஐய நாடி மிகுந்தால் தோடஷம், சன்னி, போன்ற வியாதிகள் வந்து உடல் மெலிந்து கொல்லும்.

பாடல் 48:

மூன்று நாடிகளும் அழுத்தத் தொடு மிகுந்து நின்றால் மேகநோய், குத்தல், நெஞ்சுவலி, ஆகிய குணங்கள் காணும்.

பாடல் 49:

வாத, பித்த, ஐய நாடி மூன்றும் தத்தம் நிலையில் இருந்தால் பிணியில்லை. ஒன்றொடொன்று தாவுமாகில் பிணிகள் தோன்றும்.

பாடல் 50:

மூன்று நாடிகளும் சேர்ந்து உதித்து நின்றால் சுழல் வாதங்கள் தோன்றும்.

மூன்று நாடிகளும் மந்தமானால் மூல நோய்கள் தோன்றும்

மூன்றும் அழுந்தி நின்றால் மரணம் நிச்சயம்.

மூன்று நாடிகளும் தன் மாத்திரை அளவோடு யிருப்பின் நோயின்றி வாழலாம்.

பாடல் 51: ஆறு மாதத்தில் சாகும் குறி

காலையில் மூன்று நாடி கதித்து நின்றாலும், உச்சியில் பித்தம் அழுந்தி நின்றாலும், மாலையில் வாதம் ஐயத்தில் உறைந்தாலும் ஆறு மாதத்தில் சாவு நிச்சயம்.

பாடல் 52: மலசல அடைப்பும் - விடுப்பும் வருதலறிக

பெருவிரலின் இரண்டு பக்கமும் நாடி பிசகி ஓடினால் மலசலங்கள் அடைபடும்.

மேற்காணும் நாடிக் குறியோடு அடிவயிற்றில் வாயுவு பிடித்தத மேலெழும்புமாகில் மலசலங்கள் நீங்கும்.

பாடல் 53: தொப்புளில் - மலம், சலம், வாயு இடது சந்து இடது முதுகு - இருத்தலறிக

நடுவிரலின் வலது பக்கம் நாடி நடந்தால் வயிற்றில் வாயுவு, மலசலம் சேரும். மேலும், இடது பக்க முதுகு, கழுத்து, சந்து ஆகிய பகுதிகள் அழுத்து வது போல வலி தோன்றும்.

பாடல் 54: தொப்புளின் கீழே ஐயமும், பித்தமும் சேரும் குணம் அறிக

நாடு விரலின் இடது பக்கம் நாடி நடக்கில் உந்தியின் கீழ் ஈளை, பித்தம் சேரும்.

பாடல் 55: கால் - கை - வலிப்பும் - உடல் நோக்காடுமாய் வரும் - சூலை - நோய்க்குறி.

சிறு விரலின் இரண்டு பக்கமும் நாடி சிதறியோடில் காலும், கையு ம் வலித்து நோகும் சூலை உண்டாகும்.

பாடல் 56: சூலை நோய் - கசத்த வாய் நீர் - மயக்கம் - வாந்தி - அடிவயிற்றில் சூலை வருகை

மோதிர விரலின் கீழ், நாடியானது முடுகி ஓடுமானால் ஈரல் நோய், கசப்புடன் வாயில் நீர் ஊறல், மயக்கம், வாந்தி ஆகிய வற்றோடு வயிற்றில் சூலையும் உண்டாகும்.

பாடல் 57: கால் - கை - கடுப்பு.- கோபம் - உந்தி நோய் - தலை வலி - வருகையும் அறிதல்.

மோதிர விரலின் வலப்பககமாக நாடி முடுகி ஓடினால் கை, கால்கள் கழுத்து வீக்கும் உந்தியில் நொந்து தலைவலி உண்டாகும்.

பாடல் 58: இரண்டு நாளில் - எட்டு நாளில் சாகும் குறி

வெள்ளப் பெருக்குப் போல சிலேத்தும நாடி மீறி ஓடினால் இரண்டாம் நாளில் மரணம் நிச்சயம்.

வாதநாடி சிதறியோடினால் எட்டாம் நாள் மரணம் உண்டாகும்.

பாடல் 59: மூன்று நாள் - பத்து நாள் - நாற்பது நாள் - சாகும் குறி.

பித்த நாடி மீறி ஓடினால் மூன்றாம் நாளில் மரணம் உண்டாகும்.

வாதமும் பித்தமும் தம்முட் கலந்து மீறி ஓடினால் பதினைந்தாம் நாள் சாவு நிச்சயம்.

இவற்றோடு ஐயமும் கூடினால் நாற்பதாம் நாளில் மரணமாம்.

பாடல் 60: உடலேயும் - மூன்று மாதத்திலும் சாகும் குறி

நாடித்துடிப்பு அரணைவால் போல் துடிக்குமானால் நோயாளி பிழைக்க மாட்டான்.

தேள் கொடுக்குப் போல பதைக்குமானால் மரணம் வருவது உறுதி.

கறையான் போல ஓடினால் மூன்றாம் மாதத்தில் மரணம் உண்டாகும்.

பாடல் 61: மரண நாடிக் குறியறிதல்

சிலேத்தும நாடி தவளைபோல் குதித்தால், பாம்பு போல் புரளுதல் ஆகிய நடைகளைக் காட்டினால் மரணம் விளையும்.

பாடல் 62: ஒரு மாதத்தில் சாகும் குறி

மூன்று நாடிகளும் இணைந்து தேள் போல் நடந்தால் சன்னி வரும், ஒரு மாதத்தில் மரணம் நேரும்.

பாடல் 63: இரண்டரை நாளிலும் - எட்டு நாளிலும் சாகும் - ஐய நாடி குறி

ஐய நாடி புரண்டு, உருண்டு, மேலேறி நடக்குமானால் இரண்டரை நாளிலேயே மரணம். இல்லையென்றால் எட்டாம் நாளில் மரணம் நிச்சயம்.

பாடல் 64: மரண நாடி குறியறிதல்

மூன்று நாடிகளும் உயர்ந்து தோன்றினால் மரணம் விளையும்

பாடல் 65: ஒரு மாதத்தில் சாகும் நாடிகுறியறிதல்

தீபச் சுடர்போல நாடி பொலிவுறத்தோன்றினால் ஒரு மாதத்தில் மரணம் உண்டாகும்.

பாடல் 66: பிராணன் விடும்போது நாடிக் குறியறிதல்

வட்டமிட்டு நிற்கும் அரணைவால் போல் நாடி துடித்து குறைந்து நிற்குமானால் உயிர் நீங்கும் நிலையைக் குறிக்கும்.

## ௨. மருந்து முறைகள்

**பாடல் 8: சகல சுரங்களும், பாஷாணத்தால் தீரும்**

விஷசுரம், மாலைச்சுரம் போன்றவற்றில் நாவின் நடுவில் பிளப்பு காணும் சுரம் மிகுந்தகாயும். இதற்கு பாஷாணத்தால் செய்த மருந்து கொக்க போகும்.

**பாடல் 9: வள மூலி கஷாயம் - மாத்திரை - கற்கம் இவைகளால் தீரும்**

நாட்டினில் சுரங்கள் மிகுந்து காணப்பட்டால் அவைகளைப் போக்க மூலிகைகளின் கஷாயம், குளிகை, கற்கம், ஆகியவற்றைக் கொண்டு, நோயின் தன்மை, நோயாளின் நிலைமைக்கேற்ப தக்க அனுபானத்தில் கொடுக்க தீரும்.

**பாடல் 12: சன்னி தீர அண்ட தைலம்**

வாத சன்னியில் வயிறுவலி, வாய்ப்புலம்பல், பிடரியில் வலி ஆகியவை காணும். இதற்கு அண்ட தைலம் கொடுக்க போகும்.

**பாடல் 14: தோஷம் தீர மயில் நெய்**

வாய்குளறி, பெருமூச்செறிந்து சுரம் காயும். பல்லிரண்டாம் நாள் மயில் நெய்யுடன் வசம்பு சேர்த்து உள்ளுக்கும் கொடுத்து, மேலுக்கும் தேய்க்கத்தீரும்.

பாடல் 17: சர்வாங்க வாத சன்னி தீர மருந்து

வாதநாடியானது குதிரை வால்போல் ஓடில் மூன்று நாள் சுரம் காயும். தொண்ணூற்றாறு (96) - நாழிகையில் மரணம் உண்டாகும். அதற்கு வேப்பெண்ணெய் கொடுத்து, விஷ்ணுமுஷ்டி தைலம் தேய்க்கத்தீரும்.

பாடல் 23: கர்ப்பம் தாிக்க குழம்பு

இடுப்பு, கழுத்து நொந்து, குத்தலுண்டாகி, கர்ப்பம் தங்காமல் செய்யும் பிணிதீர,

பசுநெய்யில் திருகுக் கள்ளி, ஊமட்டிக் காயின் குழம்பு சேர்த்து அளவுப்படி கொடுக்கத்தீரும்.

பாடல் 25, 26: எாிகுன்மம் தீர மருந்து

வாதத்துடன் பித்தம் சேர்ந்தால் பெலத்துடன் நாடி ஓடும். வயிற்றில் மந்தம் பற்றும், வயிறு கழியும். பூட்டுகள் தோறும் வலி, வயிறு எாிந்து வலிக்கும்.இதற்கு அஷ்ட சூரணத்துடன் சீனி சேர்ந்து உட்கொள்ள வேண்டும்.

பாடல் 30: பயித்திய நோய் தீர மருந்து

பித்த நாடி பலமாகத் தனித்து நின்றால் பயித்தியம், வரட்சி ஆகியவைகாணும்.

இதற்கு சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்கத்தீரும்.

பாடல் 31: சிறு கிருப்பு தீர கஷாயம்

பித்த நாடி புருவைப் போல் அடித்து நின்றால் உடம்பு வலிக்கும். சிறுநீர் வற்றும், புத்திமாறி, தலை கிறுகிறுக்கும். இதற்கு பச்சைப் பயிறும், நெல்லிக்காயும் சேர்த்து கஷாயம் இட்டு உண்ண தீரும்.

பாடல் 32: சுரத்தோடு கபாலக்குத்து வரலாறும் -
தீரும் வகை

நடு விரலில் ஒரும்பித்த நாடி மந்தமாக நடந்தால் உடம்புமுத்தி, சுரம்தோன்றி, இடியிடித்தது போல் தலை வலிக்கும். இதற்கு சாதிலிங்கப் புகை பிடிக்கத் தீரும்.

பாடல் 34: மஞ்சள் நீர் - நீர்க்கடுப்பு - உடல் வரட்சி
தீர வங்க பற்பம்.

சிறுநீர், மஞ்சள் நிறத்துடன் கடுத்து கழியுமாகில் வங்க பற்பம் கொடுக்க தீரும். அவ்வாறு கொடுக்காவிடில் உடல் வரண்டு, சூலை வந்து, நீர்த்தாரை வெடித்து புண்ணுவரும்.

பாடல் 38: சன்னிவாதம், பினத்தல், பிதற்றல்
தீர மருந்தும் க்ஷயரோக வரலாறும்

முசுறு முட்டையைக் கழுதைப் பாலோடு கலந்துண்ண சன்னி வாதம், பினத்தல், பிதற்றல் நினைவு இழப்பு நீங்கும். தீர்க்காவிடில்

பித்த நாடி ஐயத்தோடு திரும்பி நின்றால் சயரோகம் வந்து சேரும்.

பாடல் 39: சீறும் விடாத சுரமும், கூடிய ரோகந்

தீர - குக்கிலாதி நெய்

சுரம், நெஞ்சு வலி, இருமல், இரத்தம் வீழ்தல் ஆகியவற்றுக்கு குக்கிலாதி நெய் கொடுத்து கண்டங்கத்திரி, ஆடாதோடை கீரை உட்கொள்ள தீரும்.

பாடல் 41: இருமல், ஈளை, இளைப்பு கோழை தீர

மருந்து.

ஐய நாடி ஓங்கி அடித்து நின்றால் இருமல், ஈளை, இளைப்பு, கோழை, வாயுவு காணும்.

இதற்கு தூதுவளை, ஆடாதோடை, கண்டங்கத்திரி சேர்த்து கற்கமாக்கிக் கொடுக்க தீரும்.

பாடல் 42: தொண்டையும், நெஞ்சும் கட்டி

மழைக்காலத்தில் - உபாதித்தல் தீரக்

குக்கிலாதி நெய்.

ஐய நாடி இருகி நின்றால் தொண்டை கட்டும், நெஞ்சடைக்கும், மழை நேரத்தில் மிகுதியாக வாதை செய்யும்.

இதற்கு குக்கிலாதி நெய் கொள்ள தீரும்.

பாடல் 43: பீனசம் - மூக்கு நீர்ப் பாய்ச்சல் -
மண்டைச் சூலை - தலைக்கனப்புத் தீர
நண்டு நெய்.

சிலேத்தும நாடி பதாரி நின்றால் பீனசம், மூக்கல் நீர்ப் பாய்தல், மண்டைச்சூலை, தலைக்கனப்பு, காணும். இவை தீர நண்டு நெய்யைத் தலையில் தடவி மூர்கத் தீரும்.

அஷித சாரம் : பாடல்: 60

## அக மருந்துகள்

பாடல் 2,3; வாதம் எண்பதும் தீர சூரணம்:-

சித்திரமூலம், மாவிலக்கு, சரக்கொன்றை, முருங்கை, சங்கன், வெள்ளறுகு, வேப்பிலை, எருக்கு சுக்கு, திப்பிலி, ஐந்தப்பு, ஆகியவற்றை முறைப்படி சூரணம் செய்து கால் மண்டலம் கொள்ள

பக்க வாதம், நடுக்கு வாதம், முடக்கு வாதம், சந்து வாதம், முக வாதம் போன்ற எண்பது வகையான வாதம் தீரும்.

பாடல் 5,6: பித்தம் நாற்பதும் தீர சூரணம்.

அதிமதுரம், கோஉ்டம், மஞ்சிட்டி, ஏலம், நெல்லிவற்றல் சடாமாஞ்சில், சந்தனம், இரும்பு தாளிசபத்திரி, சீரகம், சிறுநாகப்பூ ஆகியவற்றை பொடித்து சூரணித்து சர்க்கரைக் கூட்டி ஒரு மண்டலம் உண்ண

சித்தப்பிரமை, நடுக்கல், வாந்தி, அறிவு மழுங்கல் தலைச்சுற்றல், வாய்நீர் ஊறல் போன்ற நாற்பது வகையான பித்தந் தணியும்.

பாடல் 8,9: சிலேத்துமம் இருபதும் தீர நெய்

இஞ்சிச் சாறு, திரிகடுகு, ஏலம், சிறுதேக்கு, (மிருதார்) சிக்கி, வாலுளுவையரிசி, இந்துப்பு, சிறுநாகபூ, கண்டங்கத்திரி, அரத்தை, குங்குமப்பூஆகியவற்றை பொடித்து நெய் சேர்த்து எரித்து உட்கொள்ள

சுவாசகாசம், இருமல், இரத்தகாசம், மாந்தம் சயரோகம், சுரம் போன்ற இருபது வகையான கபநோய்கள் நீங்கும்.

பாடல் 11,12: மூலநோய் ஆறும்தீரச் சூரணம்

கற்றாழை, முத்தக், கருணைகிழங்கு, சுக்கு, சித்திரமூலம் மருட்கிழங்கு, கடுக்காய், பிறண்டை கொவ்வை, ஆகியவற்றை சூரணித்து அளவுப்படி பாலில் உட்கொள்ள

இரத்த மூலம், குறுமூலம், கீழ்மூலம், வாத மூலம், பித்த மூலம் முளைமூலம் ஆகியவை நீங்கும்.

பாடல் 13, 14: கிராணி தீர மருந்து

காயுப்பு, பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு, வெள்ளைப் பூண்டு, சுக்கு, திப்பிலி, சந்தனம், சித்திர மூலம், ஓமம் ஆகியவற்றைப் பொடித்து பிரம்மிச் சாற்றில் அரைத்து உண்ண

முக்குற்ற கிராணி, மூலக் கிராணி, இரத்தக் கிராணி, சலக் கிராணி, கீழ் கிராணி நீங்கும்.

பாடல் 15,16,17: குன்மம் எட்டும் தீர சூரணம்

இருவி, நாபி, இரசம், வெங்காரம், லிங்கம், கந்தகம் மனோசிலை, அரிதாரம், ஈயம், திரிகடுகு முறைப்படி பொடி செய்து தேனில் கலந்து உண்ண

வாத குன்மம், பித்த குன்மம், ஐய குன்மம், சத்தி குன்மம், எரி குன்மம், முக்குற்ற குன்மம், வலி குன்மம், வாயு குன்மம் ஆகிய எட்டும் தீரும்.

மேலும், இதுவன்றி நான்கு வகையான வாத குன்மம், ஆறு வகையான பித்த குன்மம், பத்து வகையான ஐயகுன்மம் தீரும்.

பாடல் 20,21: மேகம் இருபதும் தீர ரசாயனம்

பறங்கிபட்டை, கந்தகம், சாதிக்காய், கிராம்பு, சிறுநாகப்பூ பச்சை கற்பூரம், தாளிசபத்திரி அமுக்கராங்கிழங்கு, கொடிவேலி, சடாமாஞ்சில் ஆகியவற்றை சூரணித்து சர்க்கரை சேர்த்து அளவுபடி நெய்யில் கலந்துண்ண.

இரத்தமேகம், கீழ்மேகம், மூத்திரகிரிசரம், நீர்க்கட்டு, குமேகம் போன்றவை தீரும்.

பாடல் 22, 23, காமாலை தீரப் பொடி

அயப்பொடி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கருஞ்சீரகம், காட்டு சீரகம், பூண்டு, காந்தம், பெருங்காயம், சுக்கு திப்பிலி ஆகியவற்றைச் சூரணித்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து அளவுபடி உட்கொள்ள

வாத, பித்த, சிலேத்தும காமாலை, அழற் காமாலை, ஊதுகாமாலை, வரட்காமாலை, ஆகியவை தீரும்.

பாடல் 24: சொறி, சிறங்கு தீர உள்ளுக்கு அமுதம்

எட்டி விதை, இரசம், லிங்கம், நெல்லிக்காய் கந்தகம் அரிதாரம், துருசு, துத்தம் ஆகியவற்றைப் பொடித்து நெய் கூட்டி அரைத்து அளவுபடி நாற்பது நாள் உள்ளுக்கு சாப்பிட

சூலை, புண்கள், கடி, பெருவியாதி, குஷ்டரோகம், வெண்குட்டம், சொறி சிரங்கு தீரும்.

பாடல் 26, 27: கண்டத்துக்கு மேற்பட்ட சகல ரோகமும் தீரச் சூரணம்

ஈசுரமூலி, கண்டங்கத்திரி, சுக்கு, செங்கந்தாரி, காட்டு சீரகம் கருஞ்சீரகம், கடுகுரோகிணி, சங்கன், அரத்தை ஆகியவற்றைச் சூரணித்து உட்கொள்ள

கபால சூலை, பீனசம், தும்மல், நாசிகா பீடரோகம் குஷ்டம், காதிற் சீழ் வடிதல், தலைவலி, பல்நோய், ஆகிய பிணிகள் தீரும்.

பாடல் 29,30,31: கவிசை, பெருவயிறு, மகோதரம் தீர

பேய்த்துமட்டிக் காய் எண்ணெய்

பேய்த்துமட்டிக்காய், காக்கண வேர், இந்துப்பு, இந்துகாரம், மாவிலங்கம், கொள்ளை, (வஜ்ஜிரத்தின்)பால் வசம்பு, மஞ்சள், காயம் பூண்டு ஆகியவற்றுடன் சிவதை, காரியபோலம், காட்டாமணக்கு வந்து, கருகுரோகணி முருங்கை, வள்ளி, மா, அவுரி, ரேவற்சின்னி ஆகியவையும் சேர்த்து பாலுடன் கலந்து ஆமணக்கெண்ணெய் சேர்த்து எரித்து அளவுபடி உட்கொள்ள

கவிசை, விப்புருதி, பிலீகம், சூலை, பெருவயிறு, கர்ப்ப சூலை, மகோதரம் நீங்கும்.

பாடல் 32, 33: சகல வாயுவும் தீர சூரணம்

சுரட்டு சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, சித்திர மூலம், திரிபலை, இந்துப்பு, வாய்விடங்கம், காயம், சவுட்டுமண் கடுகுரோகணி ஆகியவற்றை சூரணித்து அளவுபடி தேன் கலந்துண்ண

இரத்தகாசம், நெஞ்சிறுகல், வாதம், பயித்தியம், மேகம் சர்வாங்க வாயு, மூலவாயு போன்ற வாயுக்கள் யாவும் தீரும்.

பாடல் 34, 35: இரத்த வாந்தி, - காசம், எலும்புருக்கி தீர நெய்

தண்ணீர்விட்டான் கிழங்கு, அத்தி, அரசு, ஆலம்வித்து, சிறுபீளை, சீந்தில், முத்தகாசு, சாதிக்காய், கிராம்பு, தாளிசபத்திரி, சிவதை, சேர்த்து பொடித்து நெய் கலந்து கொடுக்க

இரத்த வாந்தி, ரோகம், இரத்த பித்தம், க்ஷயரோகம், பெரும்பாடு, ஆகியவை நீங்கும்.

பாடல் 36: சகல சுரங்கள் தீர கியாழம்

விலாமிச்சை, சீந்தில், காஞ்சொரி, முத்தம், பற்படாகம், சிற்றாமுட்டி, நிலவேம்பு, கோஉஷ்டம் கண்டங்கத்திரி ஆகியவற்றை சேர்த்து கியாழம் செய்து கொடுக்க எல்லாவித சுரங்களும் தீரும்.

பாடல் 40, 41, 42: சகல கரப்பான் தீர எண்ணெய்

செங்கத்தாரி, நொச்சி, தேக்கு, கழற்சிக்காய், புங்கு, சங்கங்குப்பி, கிரந்தி நாயகன், செருப்படை, ரேவல் சின்னி, வேலிப் பருத்தி, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, சிவதை, சித்திரமூலம், கண்டங் கத்திரி, கடுக்காய், கடுகு ரோகிணி, பூதகரப்பான் பட்டை காட்டு சீரகம், கருஞ்சீரகம், சேர்த்து ஆமணக்கெண்ணெயில் எரித்து அளவுபடி உட்கொள்ள

படைகரப்பான், சிலேட்டும கரப்பான், செங்கரப்பான், எரிகரப்பான் தீரும்.

பாடல் 43: சகல விடநங்களும் தீர குடிநீர்

தூதுவளை, நாரத்தை, நொச்சி, பிரமி, ரேவல்சின்னி, கழற்சிக்காய், நன்னாரி, கடுக்காய் சுக்கு ஆகியவை சேர்த்து குடிநீர் செய்து கொடுக்க, பலவகையான விடநங்கள், வாயுக்கழி தீரும்.

## நோயின் அறிந்த சாரம்

### புற மருந்துகள்

**பாடல் 4: வாதம் எண்பதும் தீர தொக்கிட தைலம்**

ஐந்தெண்ணெய், தில்லைபால்கற்கம், முருங்கை, வாகை, மாவிலங்கு, சித்திரமூலம், பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி, வசம்பு ஆகியவற்றைப் பொரித்த காய்ச்சிய எண்ணெயைத் தொக்கணமிட வாத நோய்கள் தீரும்.

**பாடல் 7: பித்தம் நாற்பதும் தீர முழுகுந்தைலம்**

கொடிவேலிச்சாறு, முசுமுசுக்கை, சீந்தில், பொன்னாங்கணி, முத்தால், மஞ்சிட்டி, அதிமதுரம், ஏலம், சடாமாஞ்சில், செண்பகப்பூ, கிராம்பு ஆகியவற்றை பொடித்து கற்க மாக்கிபாலுடன் சேர்த்து, நல்லெண்ணெயில் காய்ச்சி பதத்தில் வடித்தெடுத்து தலைமுழுகி வர பித்தம் நாற்பதும் தீரும்.

**பாடல் 10: சிலேத்துமம் இருபதும் தீர முழுகுந்தைலம்**

விலாமிச்சை, சீந்தில், முத்தாகாசு, சந்தனம், தேவதாரு, தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, நன்னாரி, மஞ்சளம் ஆகியவற்றை பொடித்து கற்கமாக்கி, பாலுடன் சேர்த்து நல்லெண்ணெயில் எரித்து வடித்து தலை முழுகி வரகபநோய் இருபதும் போகும்.

**பாடல் 18, 19: குன்மம் தீர தலை முழுகுந்தைலம்**

முத்தம், கோஉஷ்டம், இலந்தை, கொட்டைக்கரந்தை, பூலா கொன்றை, பாதிரி, நாவல், காய்ச்சுக்கட்டி, அதிமதுரம், சந்தனம், கிராம்பு, மகிழம்பூ, புனுகுசட்டம், இலவங்கம், தாளிசபத்திரி, சடாமாஞ்சில், கற்பூரம், எலுமிச்சை, ஆகியவற்றுடன் பால் சேர்த்து

கற்கமாக அரைத்து, நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி, வடித்தெடுத்து தலைமுழுகிவர குஷ்ட நோய்கள் விலகும்.

பாடல் 25: சொறி, சிரங்கு தீர மேலுக்கு சாம்பிராணி தைலம்

எட்டிவிதை, இரசம், லிங்கம், நெல்லிக்காய் கந்தகம், அரிதாரம், துருசு, தத்தம், சாம்பிராணி ஆகியவற்றைப் பொடித்து நல்லெண்ணெய் கூட்டியெரித்து தைலம் இறக்கி மேலுக்கு பூச.

குலை, புண்கள், கடி, பெருவியாதி; வெண்குட்டம் சொறி, சிறங்கு தீரும்.

பாடல் 28: கண்டத்துக்கு மேற்பட்ட சகலரோகமும் தீர

தலை முழுக்குத் தைலம்

கலப்பை கிழங்கு, நிலக்குமிழ், தசமூலம், காட்டு மஞ்சள் கப்பு மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகணி, எருக்கு, சத்திச் சாரணை, கொடி வேலி, சீந்தில், சித்திரமூலம் ஆகியவற்றை சேர்த்து நல்லெண்ணெய் கூட்டி யெரித்து வடித்து தலைமுழுகி வர கண்டத்துக்கு மேல் வரும் சகல நோய்களும் தீரும்.

பாடல் 38, 39: சன்னி தீர மேலுக்கு தைலம்

பெருங்காயம், வசம்பு, அரிதாரம், கரியபோளம், மஞ்சள், மாவிலங்கம், சிறுகாஞ்சொறி, எருக்கு, பூண்டு, முருங்கை, மல்லிகை, சதுரக்கள்ளி, மரமஞ்சள், திப்பிலி ஆகியவற்றை பொடித்து பாலில் அரைத்து கற்கமாக்கி ஐங்கூட்டு யெண்ணெயிட்டு எரித்து வடித்து மேலுக்கு பூச சன்னி தீரும்.

பாடல் 44, 45: கண்டமாலை பவுத்திரம் தீர

வேப்பெண்ணெய், புன்கு, வேம்பாடம்பட்டை, தெந்தகம், இரசம், துருசு, தத்தம் குங்கிலியம், அரிதாரம், மிருதார் சிங்கி, ஆகியவற்றைக்

கூட்டித் தைலம் செய்து மேற்பூச.

கண்டமாலை, பவுத்திரம், விப்புருதி, தொடை வாழை, சூலை, பிளவை, வீக்கம், அரையாப்பு தீரும்.

மை நா ம்

## அகத்திய முனிவர் அருளிச் செய்த



## வைத்திய சாரம்

சொல்லிய வைத்தியசாரச் சுருக்கமும் முப்பத்தாறும்
அல்லும் பகலும் அறிவுரை - நல்ல
குணபதியாம் பூரணத்திற் கூடியே வாழும்
கணபதியின் பாதமலர்க் காப்பு.

### மருந்து கொடுக்கக் கூடாத பேர்கள்

1. அல்லியதா ரத்தாசை கொள்வோன் வஞ்சகன்
    ஆசைகஞ்சா கள்ளுலோடி(பி) யன்போல் தீமை
தல்லிய கு ஷக்காரன் சண்டைக் காரன்
    குறும்பு சொல்லி விருந்துண்பான் திருடன்கூட்டன்
குல்லைறிந் திரையிருந்தோன் கொடாத லோபி
    குணமில்லான் மதியில்லான் மான மில்லான்
பல்லியன் டிதர்பகைகுள் செவிட ஊமை
    பாசுபத மறியானைப் பார்க்கொ ணாதே. 1

### முன்னே பணம் வாங்கிக் கொண்டு பின்னே வைத்தியம் செய்யவும்

2. கைக்கூலி கையொப்புக் களவுங் கூலி
    கபடமன முலைமாதர் வேசி கூலி
மெய்க்கூலி கள்கூலி வித்தைக் கூலி
    வியாபாரக் கணிசுக ளுடையான் கூலி
ஒப்பாய பிணிதீர்க்கும் ஒருவன் கூலி
    ஒருவர்க்கு முப்பாத்தி யாயன்றன் கூலி
அப்போதைக் கப்போதே வாங்கா ராகில்
    ஆர்பெறுவா ரார்தருவா ரவனி மீதே. 2

## மூடர்களுக்கு இம்மூன்றும் சொல்லக் கூடாது

3. மந்திரமும் வாகடமும் பழைய நூலும்
   வருவிக்கும் பெரியோரை வணமை கேளீர்
தந்திரமாய்க் காந்தமுக முனி பற்றுந்
   தன்மையது போற் தொடர்ந்து தாப்பா ராகில்
சுந்தரமாம் புகழுடையாய் குலமா னானந்
   மூடர்களுக் கிம்மூன்றுஞ் சொன்னா ராகில்
அந்தரமா மெழுநரகில் -ந்திப் பின்பு
   மறுவில்லாச் சண்டாள ராவார் பாரே. 3

## இந்த நாலு வகைகளு மறியாமல் வைத்தியம் செய்பவர்களுக்கு நரகம் வரும்

4. பார்க்கின்ற சோதிடம் கிரியா காலம்
   பக்குவமிப் பகாரமொடு பிராய சித்தர்
மற்றும் வைத்திய முறைகள் நாலும்
   வல்லோர் இதன்வழியே சிகிச்சைநேராகச் செய்வாராகில்
ஆர்க்குமே தோஷமில்லை இவைகளையா
   அறியாதார் சாத்திரவல் லவர்கள் போல
தீர்க்கமழ படியாகச் செய்வாராகில்
   சிவபிர மத்திவதை சேரு வாரே. 4

| | | |
|---|---|---|
| கண்கள் - 3 | தலைகள் - 4 | முகங்கள் - 5 |
| கைகள் - 3 | சரீரங்கள் - 8 | கால்கள் - 10 |

இந்த ஆறுவித குணங்கள் அறியார் ரோகிகளைக் கொல்றதனால் நரக மடைவார்.

5. வாதகுறி வைத்தியரே சொல்லக் கேளீர்
வாகாக கண்மூன்று தலைகள் நால்கு
நீதமுடன் முகங்களைந்து கைக ளாறு
நிலைசரீரங் களெட்டு கால்கள் பத்து
வீதமிதன் பயன்றிந்தார் வியாதி தீர்ப்பார்
விதமறியார் மாவிடரைப் பழியே செய்வார்
சேதமாம் செயமறிந்து பணித்தி டாது
செத்தபின்பு தீநரகில் சேரு வாரே. ௫

கண்-தலை-கை-சரீரம்-கால்-பிண்ட நிலைமை விபரங்கள்

6. மருந்துசத்தி குணம்-நிகண்டு கண்கள் மூன்று
வாதபித்த சிலேஷ்மமதோர் தலைகள் நான்காம்
அருந்துமறு சுவையறிதல் கைக ளாறும்
அஷ்டவித குறியறிதல் சரீர மெட்டாம்
இருந்ததச நாடிதச வாயுவி ரண்டும்
இதமாக பார்த்திடுங் கால்கள் பத்தாம்
பொருந்தியதோர் பிண்டநிலை முகங்க ளைந்தாம்
பொதிகைமலை அகத்தியனார் புகன்ற வாறே. 6

7. வாகடத்தின் பயின்றியார் நாடி காணார்
வலக்கையைப் பிடித்திழுத்து வார்த்தை சொல்வார்
ஆகலய மாகவே நல்லோர் தம்மை
அசாத்தியநோ யென்றுசொல்லி அழைத்துப் போவார்
பேர்கேட்கப் பேர்சொல்வார் வியாதி கட்டுப்
பிணிதீர்ப்போ மென்றுசொல்வார் தீர்க்க மாட்டார்
ஓகோகோ வைத்தியரத் தினமென்று சொல்வார்
ஒருக்காலும் மோட்சமில்லை நரகந் தானே. 7

8. அச்சமற வைத்தியரே நோயுள் ளோர்க்கு
அசாத்தியமுஞ் சாத்தியமும் அறிந்து நன்றாய்
பட்சமறக் குறிகுணமே பரீட்சை பார்த்து
பரிகார மாய்மருந்து பகரா ராகில்
தச்சமற கிளைஞங்கள் வேரோ டற்றுத்
தரணிதனில் வெகுபாவம் தலைமேற்கொண்டு
இச்சைபெற எழுகரனில் அழுந்திப் பின்னும்
ஈடேற்ற மில்லாமல் இருப்பர் தாமே. 8

9. தரணிதனில் அவிழ்தத்தின் சுத்தி கண்டு
தகைமைபெற நோயாளி சரீரம் பார்த்து
கரணியா சனவகையும் கண்டு பின்னும்
கைப்பரீட்சை மெய்ப்பரீட்சை கருதும் நாடி
திரநிகால் குருமுகமாய் அரத்தி யாகி
தெளிந்தோர்கள் யோசனையும் செய்தி கேட்டு
முரணியவா விந்தபகை செய்யா ராகில்
மூவேழு சுத்தமுன்வே ரற்றுப் போமே. 9

10. கருத்தறவே வாதிமகன் வயித்தியம் செய்யில்
கசடறவே நோயாளி குருவா யெண்ணி
கருத்தறவே மருந்துக்குப் பற்றி வேணும்
கைகண்டு வைத்தியரை அறிந்து நன்றாய்
கருத்தறவே மனதுவர நடக்க வேணும்
கழுதையைப் போல் இருந்தவர்க்குப் பணியா தென்றும்
கருத்தறவே மிவையறியாச் சித்தர் தானும்
காட்டினார் அவர்மனம்போல் நடந்து கொள்ளே. 10

11. நடந்துகொல்லும் நோயாளி சாவாக ...
நாட்டினா லவர்க்கக்கே மருந்தொழுது
தொடர்ந்துமே அவரிடத்தில் பத்திவைத்தால்
துரும்பாக போ(கு)மடா நோய்க ளேது
அடர்ந்துபோய் அவர்வாசல் காத்தானானால்
அக்கினியில் பஞ்சதுபோல் நோய்கள் போகும்
உடன்தனக்கு நோய்வந்தால் குருபே யென்பார்
சாதாரியமாய்த் தீர்ந்தால் தம்பி யாமே. 11

12. தம்பியென்பார் நோயதுவும் தீர்ந்த பின்பு
தாய்தந்தை குருவென்பார் தீரு முன்னே
வெம்பியதோ ரோகங்கள் தீர்ந்த பின்பு
வேளைப சாரம் பின்வா லென்பார்
தும்பியே கொதித்துழுக உள்ளம் வாடி
குருவான வயித்தியந்தான் மனது நொந்தால்
சம்பியே முகம்வாடித் தான்வா ரார்கள்
சாற்றினேன் இவையறிந்து மருந்து வாங்கே. 1௨

13. வஞ்சமற்றோ ரென்ற பிணி யாளார் தம்மை
மகவதினும் பதின்மடங்கு மருந்து செய்யில்
நெஞ்சில்நோ யாளியின் பிணிறி தாலம்
நிறுத்துமந்த வயித்தியர்க்கு நிதிகொ டாமல்
பஞ்சைமொழி பகருமரும் பாவி யோரை
பாழ்நரகில் அழுத்தியெமன் பாசத் தாலே
அஞ்சவுழந் தேயடித்துத் தவ்வா னென்று
அகத்தியரும் முந்தா னில் அருள்செய் தாரே. 13

## பிண்ட உற்பத்தி

14. கேளப்பா மனமான வாயு கூடி
கெடியான சித்தமா காயம் பொங்கி
வேளப்பா ஆங்கார சிகார மிஞ்சி
மேவுதற்குப் பெண்மேல மோக மாடும்
நாளப்பா ஐந்துக்கும் பலமே தென்றால்
நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய் கேளு
தாளப்பா மனதோடே வியான வோடும்.
தனியான நாதத்தில் அபானன் தானே. 14

15. தானென்ற விந்துவினாற் சமானன் கூடும்
தனியான சித்தமதில் வியானன் நாடும்
கானென்ற ஆங்காரம் கரச்சிப் போடே
கலந்துநிற்கும் உதானனப்பா கண்டு கொள்ளே
வேனென்ற பந்த ... தடி
மேவியவன் கலந்துவிந்த விழகும் போத
வானென்ற மெய்யபர வசமே_யாவான்
மருவுகின்ற பெண்ணுக்கு முறைதான் கேளு. 15

## கருத்தரிக்கும் விதம்

16. முறையான பெண்ணும் மௌன முற்றால்
மோசமில்லை கருவங்கே தரிக்கும் பாரு
நிறையான வலத்தோடி லானே யாகும்
நேராக யிடற்தோடிற் பெண்ணே யாகும்
உறையான கருப்பையில் சுக்கிலம் பாய
உத்தமனே சுரோணிதந்தா னுரைந்து கொள்ளும்
குறையாகப் பாய்ந்தவெளி தமரு போலக்
குழற்கொடிக்காய் போற்றிரண்டு சிரசு மாமே. 16

17. ஆமப்பா சிரசோடே கையுங் காலும்
அப்பனே தத்துவங்கள் நரம்பு மூளை
ஓமப்பா அந்திமூல றோமத் தோடு
உத்தமனே பதினாறு வாசல் காணும்
காமப்பால் விழுந்தவழி சிரசி னாலே
கைமுறையாய் தாயுண்ட அன்னஞ் செல்லும்
சோமப்பா நடுமையந் தொப்பு ளாலே
சென்றதெல்லா மலமாகக் கழியுந் தானே. 17

18. தானென்ற பதினொன்றா சடந்தான் முன்னே
சாதகமா யெடுத்துவரும் மலடென் வாறு
ஊனென்ற பெண்ணுக்கு மனது வேறாய்
ஊருற்ற மௌனமென்னும் பாவத் தாலே
காணென்ற மலடாவாள் புருட னுக்கும்
கைமுறையா யிப்படித்தான் கண்டு கொள்ளே
தேனென்ற மொழிபாட்டு பரனார் சொன்னார்
செகமல்லாம் யிப்படித்தாற் செனித்த வாரே. 18

## பிலத்து நிற்கும் தசவாயுகளின் பெயர்

## பிராணவாயு யிருப்பிடம்

19. பிலத்துநிற்கும் பிராணனோ டபானன் வியானன்
பிரபாத வியானன்சமா னனோடு நாகன்
நலத்துகின்ற நாகனெழிற் கிருகரன்றா னாகும்
நற்றேவ தத்தனோடு தனஞ்செயன்பத் தாகும்
இருக்குமுடல் பிராணநிலை மூலமதற் தோன்றி
யெழுந்துசிர சளவுமுற யிருவிழியின் கீழாய்
கலக்கமற நாசிவழி யோடுமீ ராறில்
கடுங்யெட்டு வுட்பகுந்து கழியுமொரு நான்கே. 19

## அபானன், வியானன், உதானன், சமான

## வாயுக்கள்

20. உந்தியெனும் தானத்திற் கீழபான னின்று
உறுமிமல சலங்களையுங் கழலச் செய்யும்
விந்தையெழில் வியானன்தோ விதனில் நின்று
மிக்கலையுந் தவனமுண்டாகச் செய்யும்
பிந்தஉதா னன்செயலுண் டசனந் தன்னை
பெருநாடி நரம்புவழி யூட்டல் செய்யும்
இந்தஉடல் தனைவளர்க்குஞ் சமானன் தானும்
யாவையுமே மிச்சவொட்டா திருக்கு மன்றே. 20

## கூர்மன், நாகன், கிருகரன், தேவதத்தன்

## தனஞ்செயற் வாயுக்கள்

21. கூர்ம னிருவிழியில் யிமைமந்திடுமே நாகன்
கொட்டாவி விக்கலெனும் கொடுமை செய்யும்
தீர்மைகிரு கரனீட்டி முடக்கி வைக்கும்
தேவதத்தன் ஷுறித்துமே யசனஞ் செய்யும்
பேர்மன்னுந் தனஞ்சயன்மேற் சிரசி ரெண்டாய்
பிளந்திடுபோத் தவோடிப் போ-டும்
நேர்மையறிந் திருவையினி நாடி பத்தின்
நிலைமைதெரிந் திடவிவரம் உரைசெய் வோமே. 21

## சங்கினி நாடி-விடையம் - ஐந்தின் பெயர்கள் வரன்விடையம்

22. சங்கினியென் பனநாபி குய்யம் பற்றித்
தானிருக்கு மொன்றையுமே மிச்சொப் டாமல்
அங்குமதி காரியமோ டைம்பத் தொன்றும்
அறிவித்தோம் வசனாதி யைந்தங் கேளாய்
இங்கு வங்கமனந் தானத் தோடும்
இருந்தவழில விசர்க்கமிது வந்தம் ஐந்தில்
பொங்குவச னாறியவன் வாக்கில் நின்று
பொருந்தவச னத்தையவன் பிறப்பிப் பானே. 22

## தசநாடிகளின் பெயர்கள் - சுழிமுனை நாடி

### இடாகலை - பிங்கலை

23. சுழிமுனையாம் இடகலைபிங் கலைகாந் தாரி
சாயத்தி சிங்குவைய லம்புருடன் றானும்
எழுகுருவன் சங்கினியோ டுரைந் தாக
நிறைந்ததாச நாடிபத்தும் நிலைத்த நாம
மொழிவதுகேள் சுழிமுனை யென் பதுமூ லத்தின்
முளைத்தநடு வெழுந்துசிர சளவும் நிற்கும்
பிறிவழியாய் சுழிமுனையின் கலைகள் தோன்றில்
பிறந்தயிரு நாசியிட மோடி நிற்கும். 23

### காந்தாரி - அத்தி - சிங்குவை - அலம்புடை

### புருடன் - குருநாடிகள்

24. கண்டமிதில் நின்றுகாந் தாரி நாவில்
கரைத்தநீர் பொசியவுபா யங்கள் செய்யும்
அண்டசெவி தனிலத்தி சிங்குவை நின்று
அவத்தையோர் நான்கினுக்கும் ஊமை யென்னும்
விண்டஅலம் புடைபுருடன் யிருவிழியில் நின்று
மெய்மறந்த போதஅசை வாகி நிற்கும்
கொண்டகுரு நாடியீர் லலே பற்றிக்
குடல்புரட்டி வாயில்நீர் ஊற்றி நிற்கும். 24

### வியாதிகளை அஷ்டவிதப் பரீட்சைகளாலும் நிச்சயித்தல்

25. தரணியுள்ள வியாதிதன்னை யஷ்டாங் கத்தால்
தானறிய வேண்டுமது பேதே தெல்லில்
திரணியதோர் நாடிகண்கள் சத்தத் தோடு
தேகத்தி லுபரிசம் வாடை நாக்கு
இரண்டுமல முத்திரமா மிவைக ளெட்டும்
இதம்படவே தான்பார்த்துக் குறிப்புங் கண்டு
பரன்ருளால் பெரியோர்கள் பாதம் போற்றி 25
பண்புதவ றாமற்பண் டிதஞ்செய் வீரே.

## நாடிகள் நிற்குமிடங்களும் வாதநாடி நடையும்

### வருத லறிக

26. செய்கின்ற நாடிபெரு விரலின் மேலாய்
திருந்தியமூன் றங்குலத்தின் நடுவ தாகத்
தைக்கின்ற கோதும்மை அரிசி போலச்
சரவம்யா பித்திருக்கு மதுதான் கூறில்
கையடியுங் காலடியும் நாடி நிற்கும்
யருக் கிடப்புறமாங் கணவர்க் கங்கே
மைக்கின்ற வலப்புறமாம் வாத நாடி
வந்தமுதலே நடக்குமப்பா வகைசொல் வேனே. 26

### 27. பித்தம் - சிலேபருமம் - நாடி நடைகள்

27. சொல்லுகின்ற பித்தநாடி தோற்று மப்பால்
தொடர்ந்து சிலேட் டுமநாடி தோன்று மப்பால்
அல்லுநிறக் குழலாளே நாடி நின்றால்
ஆச்சரிய நாடியெவ் றறிந்து சொல்லு
மல்லுகின்ற வாதத்தின் நாடி யங்கே
வக்கிரத்தி யாரடக்கும் தவளை போல
நல்லுகின்ற மாயிபட்டை தொட்டி லாட்டிடல்
நல்லாயிப் படிநாடி நடக்கும் தானே. 27

### வாதமும் பித்தமுந் தொந்தித்த நாடி நடை

28. நடக்கும்பித் தியஞ்சவலை பிள்ளை போலும்
நீடமையன் னம்போஜ னாகம் போலும்
திடக்குஞ்சிலேட் டுமநாடி யிலங்கும் பட்சி
செய்யாக ஊர்க்குருவி கோழிப் போல
அடக்கமாக நடக்குமது மயிலே சொல்வேன்
அவ்வளவே வாதப்பைத் தியத்தின் தோற்றம்
மடக்கின்ற காடைபோல நடந்து பின்னே
மந்தையென நடக்குமது மதித்துக் கூறே. 28

### வாதசிலேட்டுமத் தொந்தித்த நாடி - அசீரண நாடி

### மதாதய நாடி - நீதிரி சங்கை நாடி - மலபந்தராடி

### சன்னி வாத நாடிகளின் வருகை

29. கூறுகின்ற வாதசிலேட் டுமமுங் கூடில்
கோழியட்டை யெனநடக்கும் அசீரண நாடி
ஊருகின்ற மத்திரி யத்தி னாடி
ஊங்குகின்ற காகநடை யென்று சொல்வார்
தேருகின்ற யூட்சங்கை இப்படியாய் நின்று
தீவிரமாய் நடக்குமல பந்த நாடி
ஊருமன்னம் போல் நடக்கும் சன்னிவாதம்
உயர் நாடி விதிகளையு முரைக்கக் கேளே. 29

### குடிலை-சூட்சும வாயு-ஜன்னி வாதம்-சங்கினி-

### காந்தாரி-நாடிகளினடைகளறிக-

30. உரைத்தவிற விக்கட்டுக் குள்ளுஞ் சூழ
உலவுதல்போ லேநடக்கும் குடிலை வாயுவு
விரைத்தெ முந்தே மந்தமா யிருந்த பின்னும்
விதமாக நடக்குமது சூட்சம வாயு
புரைத்தருமை இவ்வகையில் சன்னி வாதம்
பொருப்பாகக் குவிந்தமுலை போலுங் கொங்கை
முரைத்தெழுந்த சங்கினிகாந் தாரி பின்னே
முறைமையதாம் நாடியென முனிவர் தாமே. 30

வருக்குறிய நிதல் -

31. முனைகின்ற தேகபரி சத்தைப் பார்க்கில்

முல்வாத தேகிக்குச் சரீரஞ் சற்றே

அணைகின்ற உஷ்ணமாம் பயித்தில தே

முண்டா மப்பால்சீ தளமாய் நிற்கும்

சுனைகின்ற சிலேட்டுமந்தான் சூழ்ந்தே சிக்கித்

தொந்தகுணம் நாலுவித மாய்தான் கதில்

பனைவாத தேகநிறங் கருத்து நிற்கும்

பைத்தியதேக நிறமஞ்சள் சிவப்பு தாமே. 31

சப்த லட்சணம்

32. ... லேட்டும் தேகநிறம் வெளுப்புத் தானே

தொந்ததேக் மிர்நால் விதமாய் நிற்கும்

மாமயிலே சத்தமது மறிய வேண்டில்

வாதரோகி சமதொனியாம் வார்த்தை பேசும்

ஈமமுள்ள பித்தந்தா னுறக்கக் கூறும்

இயம்பிடுஞ்சி லேட்டும ரோகிக்கில் சத்தம்

நாமுரைத்தோம் தொந்தரோகிக் குத்த விந்த

நால்விதமாய் மொழிந்த சத்தம் நயந்த காணே. 32

33. காணுகின்ற வாதரோ கிக்குக் கண்கள்
கருநிறமாய் நொந்துமிகத் தண்ணீர்பாயும்
நணுகின்ற பித்தரோ கிக்கு மஞ்சள்
போலிருக்குஞ் சிவப்பு நிறம் பொலிவு தோன்றும்
பேணுகின்ற சிலேட்டுமரோ கிக்குக் கண்கள்
பீளைகட்டி வெளுத்திருக்குஞ் சன்னி வாதம்
வாணுகின்ற சிவப்புடைத்தாய் வந்து வீங்கி
வந்திடும்கா மாலையென வருத்தக் சொல்லே. 33

<u>வாதமலம் - பித்தமலம் - பகமலம் - தொந்தமலம்</u>

<u>வாதச்சிறுநீர் - நிறங்கள்</u>

34. உலந்தமா வாதரோ கிக்குந் தானும்
மலமிறுகின் கட்டுப்பட்டுக் கருத்துத் தோன்றும்
சிந்துபித்த ரோகிக்கு மலமஞ்ச ளாகில்
சிவப்பாகில் சேர்ந்திருக்கும் சிலேட்ம ருக்கு
சொந்தமலம் வெளுத்திருக்கும் மலக்கப் டான
தொந்தமலம் பலவிதமாய்த் தோற்றுக் காணும்
விந்தமுள வாதரோகி சிறுநீர் தானும்
வெளுத்திருக்கும் பயித்திய நீர் விதம்சொல் வேளே. 34

<u>பயித்தியர் சிறுநீர் - பகநீர் - தொர்த நீர் -</u>

<u>வாதரோக நாவு - பித்தரோக நாவு - நிறங்கள்</u>

35. விதமுள்ள பயித்தியர்தல் சிறுநீர் மஞ்சள்
விதமுடைத்தா யிருக்குமல்லால் சிவப்புந் தோன்றும்
நுதையுள்ள சிலேட்டுமத்தோர் நீர்தான் மெத்த
நுரைகலக்குந் சொந்தநீர்நால் விதமாய்க் காணும்
கதையுள்ள நாவிற்குச் சொல்லில் வாதந்
தோன்றினாக்கு வெடித்துமுட்போற் கருத்தி ருக்கும்
கதையல்ல சிவந்தாலும் பகத்தா லந்தால்.
களமுள்ளப் பயித்திர்பர்நா கணக்குத் தானே. 35

## கபரோக நாவு - சன்னிரோக நாவு - தொந்தரோக நாவு

36. தானமொரு வாய்பெருத்து நீருண் டாகிற்
தான்சிலேட்ம நாவாகும் யீரம் அற்றே
ஆணைமுட்போற் கூருக்கிச்சன்னி ரோக நாவாம்
அதம்தொந்த நாநிறம்நால் விதமாய்தோன்றும்
ஆனவில் வகையெட்டு மறிந்த பேரை
அவனிதனிற் பண்டிதரா யறியச் சொல்வார்
ஈனமில்லாப் பொறியடக்கும் பெரியோ ரன்றி
எய்தாது யாவருக்கும் மியம்புங் காலே. 36

அகத்திய முனிவர் அருளிய வைத்திய சாரம் முற்றிற்று

## அகத்தியர் குணவாகடம்:

பிலவங்க வருஷம் - மார்கழி மாதம் - 21ஆந் தேதி விழுப்புரம் தக்கடியைச் சேர்ந்த சின்னகல்லிப்பட்டு வி.போ.சுப்பராய வாத்தியார் சொந்தமாகிய அகத்தியர் குணவாகடம்.

சுப்பராய வாத்தியார் கேட்டெழுதி சின்னசுவாமி - தெய்வநாயகம் ஆறுமுகம் - நடேசன் வாசிக்கின்ற வாகடத்திரட்டு.

பிரதியெடுத்தவர் வாசித்த... யிதில் தப்பு பிழையிருந்தால் - ஒப்பதாய்ப் பொருத்திக் கொள்ள வேண்டியது.
ஆதியே துணை.

## அகத்திய முனிவர் அருளிச் செய்த நோயின் சாரம்

### நாடிப் பரீட்)சை

37. "கரிமுகக் கடவுளை(க் கௌரி மைந்தனை
விரிகடல் வாயனை வேதவே தாந்தனை
அரிதிரு மருகனை யாதி சோதியைப்
பரிவொடு தொழுதவர் பாதம் போற்றுவாம்".

### மாதங்களில் நாடி பார்க்குங்கால முந்தல்

38. சித்திரை வைகாசிக்குச் செழுங்கதி (குதயம்) பார்க்க
அத்தமா மானி யாடி ஐப்பசி கார்த்தி கைக்கும்
மத்தியா னத்திற் பார்க்க (மார்கழி) தையு மாசிக்கும்
வித்தகன் கதிரோன் மேற்கில் விழும்வே ளையிற்றான் யிரே. 1

தானை பங்கு னிக்குந் தனைநல் லாவ ணிக்கும்
வானமாம் புரட்டா சிக்கும் மற்றைராத் திரியிற் பார்க்கத்
தேனென் மூன்று நாடித் தெளிவாகக் காணு மென்று
காலமா முனிவர் சொன்ன காரிகை வேந் துலே. 2

## நாடி பார்க்கிற பலித்திடாக் காலமறிதல்

39. எண்ணெயில் தலையில் போதும்
ஈரமாய் நின்ற போதும்
தின்றும்நல் லுணவில் போதும்
உண்டாம்வெம் பசியின் போதந்
திண்மையாய் நட(க்)கும் போதஞ்
சிற்றின்ப மூட்டும் போதும்
பண்ணிய நாடி பார்க்கப்
பலித்திடா தென்று செப்பே. 3

## நோய் நாடிப் பார்க்கும் விபர(ம்)

40. மருவிடு நோயின் நாடி
மதித்திடில் வலக்கை மைந்தர்
காரிகையர் இடக்கை மைந்தர்
அழுத்தியே சுட்டி காட்டும்
விரலதில் வாத மாகும்
மிகுநடு விரலிற் பித்தம்
தருமணி விரலில் ஐயம்
தாவியல் பறிந்து பாரே. 4

41. வாதமும் பித்த மைய
மருவிய குணபா டத்தை
தீதற முனிவர் நூலை
தேர்ந்தபின் திரட்ட தாக
உரிய சுருக்க நூலை
ஒழுங்கொடு வுணர்ந்து கொள்ள
வாதநீர் வைத்திய ருக்கு
வல்லிருள் விளக்க மாமே. 5

## மந்த சுரம் குறி

42. வாதந்தான் தனித்து நின்று
    வந்திடும் பந்து போலத்
தீதற வெழும்பி நின்றால்
    சிக்கியே மந்தம் பற்றும்
எதவாற் சுரங்கள் கண்டு
    இடைவிடா நிற்கு மாகில்
தாதுவுங் குறைந்து நின்று
    தன்னையு மறக்கச் செய்யும். 6

## மந்த சுரம், ம(ா)லை சுரமறிதல்

43. உற்றிடு வாத நாடி
    ஒருவிர லுள்ளே நின்று
பற்றியே கிளம்பி நின்று
    பையவே நடக்கு மாயின்
மத்திய சுரமே யாகும்
    மலைசுர மதுதா னாயின்
அத்தியே மற்றி யோடி
    யடங்கிடா தெழும்பி நிற்கும் 7

## சகல சுரங்களும் பாஷாணத்தால் தீரும்

44. இப்படி சுரங்கள் கண்டால்
    யெளிதல்ல வேகமுண் டாய்
அர்ப்பற நாவ          நடு
    நாவினிற் பிளப்புக் காணும்
வெப்புறு மிச்சு ரங்கள்
    ஜேவிடா தகல வேண்டி
மெய்ப்பாடு பாஷா ணத்தால்
    மீள்வது திண்ணந் தானே. 8

## இவைகளால் தீரும்

45. நாட்டிவில் சுரங்கள் கண்டு
நலம்படா திருக்கு மாயின்
காட்டினில் முட்டி யாவல்
சுஉநாயத்தில் வஷமை யாலும்
முட்டிய குளிகை யாலும்
முடிஙிய கற்கத் தாலும்
வாட்டமா மென்று ராலோர்
வயித்திய குணமீ தாமே. 9

## மலபந்த நாடி

46. வந்திடும் வாத நாடி
மடங்கியே குடித்த நிற்கில்
முந்தியே பழம லங்கள்
முடுகியே சிக்கு மேஎ
அந்தமாய் வாத பித்தம்
கூடிநில் றசைக்கு மாகிற்
பந்தியாய் வயிற்றெ ரியும்
இரைப்பும்வந் தெடுத்த தென்வே. 10

## மந்த சன்னி

47. நீளும் வாத நாடி
நின்றதிரே பமானாற்
பாரினி லெவர்க்கும் வாயு
பற்றிடு மந்த மாகும்
வோ சேர்க் குழலாய் வாதம்
விருப்பொடு வெழுந்து நின்றால்
(கூருள) சன்னி வந்து
கூடிடு முன்ப நாளில் 11

## சன்னி தீர அண்ட தைலம்

48. வந்திரு மூன்று நாளில்
வாதமாஞ் சன்னி கூடி
யுந்தியை மறந்து வாயாற்
புலம்பவே டலம்பல் பண்ணும்
பிந்திய நாலா நாளில்
பிடாரியிற் பின்னல் செய்யும்
அந்தமா ஷிஅன் டத்தின்
தைலமே புக்கி டாயே. 12

## தோஷக் குறி அறிதல்

49. பரவிய வாத நாடி
பக்கமே துடியா வண்ணம்
புரவிய புருபோ லூர்ந்து
புகல்கெட வதிர்ந்தே யோடில்
சுரமுள மேழு நாளிற்
சேஷம்வந் தணுகி நாவை
யுரமுற பேசா விட்டா
அளறியே குளறி நிற்கும். 13

## மேற்படி தோஷம் தீர மயில் நெய்

50. பேச்சது கு(ழ)றி நின்று
பெருக்கவுள் மூச்சு முண்டாம்
ஆச்சுபன் னிரண்டு நாள்தான்
அப்படி கிடக்கிற் பின்பு
கச்சற மயிலி னெய்யிற்
குலவிய வசம்பு கூட்டி(த்)
தேய்ச்சுமே லன்றுங் கொள்ளத்
தோஷமுஞ் சிதைந்து போமே. 14

## வாத மெலிவு தோஷம்

51. வாதமே மெலிந்து விம்பி
வரண்டது புரண்டு தத்தி
சேதமா யரணை வால்போற்
ஓடியே துடித்து நிற்கில்
வாதையே பெருகி மேனி
வந்திடுந் தோஷந் தானே
றோதினோர் முன்னோ ரீந்த
லுவமையே யொத்து மாலே. 15

## சர்வாங்க வாதசன்னிக் குணம்

52. கரிட்ட வாத நாடி
கோழிபோல் கிண்டி நின்றால்
வாரிட்ட முலைநல் லாளே
பாதமாஞ் சன்னி யாகும்
பேரிட்ட தெடுத் தெடுத்து
பிலப்படத் தியங்கு மாகில்
ஆரிட்ட தேகத் தண்டா
மதுசர் வாங்க (மாமே) 16

## மேற்படி நோய்தீர மருந்து

53. பதறிய வாத நாடி
பாய்பரி போல வோடிற்
சிதறிய மூன்று நாலித்
சேர்ந்திடுங் குதிரை வாலி
மதாயாய் தொள்ளூர த் றாறு
நாழியில் மரிக்கா விட்டால்
விதாயாய் வேம்பு வெள்ளை
விடமுடந்தி தைலங் கட்டே. 17

### வாத தனியால் வரும் நோய்கள்

54. வாதமே கதித்த போது
வாய்வு மெழும்புங் கண்டீர்
வாதமே கதிந்த போது
வந்திடுஞ் சன்னி தோஷம்
வாதமே கதித்த போது
வந்திடும் வியாதி மேலும்
வாதமே கதித்த போது
வல்லுடல் மெலிந்து கொல்லும் 18

### இரண்டு நாழி - ஒரு நாழியில்-சாகும் குறி

55. மந்தமாய் வாத நாடி
மயிரும்பேன் போலே ஓடில்
இந்தமா விடற்கி ரண்டு
நாழியில் யிருப்பு மில்லை
வந்தவன் முகமும் நேர்ந்து
மஞ்சளின் நிறமே யாகில்
முந்தவோர் நாழி கைக்குள்
முடிவது திண்ணந் தானே. 19

### தனி வாயுவு நோயும், வலிக் குன்மமும்

### மரணமும் வருங்குளை

56. வாதந்தான் தனித்த நிற்கில்
வாயுவும் தனித்து நிற்கும்
வாதந்தான் உதரி நிற்கில்
வலிகுன்மம் வந்து சேரும்
வாதந்தா னற்ற நிற்கில்
மரணமும் வந்து சேரும்
வாதத்தின்_(திரட்டு)_தெல்லாம் 20
இவ்வகை வடிவு தானே.

## கர்ப்பம் தரித்த நாடிக் கோணம்

57. காரிகை தமக்குப் பிள்ளை
    கருப்பையைப் பற்றி நின்றால்
கூரிய (வாத நாடி)
    குண்டலப் புழுபோ லாகும்
வீரிய மூன்று திங்கள்
    விட்டில்போல் பதைத்து நிற்கும்
பாரிய வெட்டாந் திங்கள்
    பையவே புழுப்போ லாகும் ௨௧

58. மாதர்கை பிடித்த போது
    வந்திடும் வாத நாடி
தீதற வெடித்துப் பாய்ந்து
    சிதறியே சுழம்பி நின்றால்
பேதைதன் வயிற்றி னுள்ளே
    பெருகுகரோ ணிதமே தங்கி
வாழைகள் பண்ணி மாத
    விடாய்க்காலம் வருத்தஞ் செய்யும் ௨௨

## கர்ப்பம் தரிக்க குழம்பு

59. இருப்பொடு கழுத்து நொந்து
    இடைவிடா குத்த லுண்டாம்
தடுத்திடா கர்ப்பந் தன்னை
    தங்கிடா வண்ணஞ் செய்யும்
அடுத்ததோர் ஆவின் நெய்யி
    லானதோர் திருக்கு கள்ளி
கொடுத்திடா அம்மட்டின் காயின்
    குழம்பது கொடுக்கத் தங்கும் ௨௩

## குதகத்தில் வாயு தங்கின குணம்

60. மாதர்கை பிடித்த போது
வந்திடும் நாடி முன்னுநீ
சேதமா யிற்று நின்று
சேரவே பதிந்து நிற்கில்
ஓதமே குத கத்தில்
ஓங்கிய வாயுவே நின்று
பேதமாய் வாழை பண்ணி
பிணிகளை விளைக்கும் தானே. ௨4

## எரிகுன்மம் தீர மருந்து

61. வாதத்தில் பித்தம் கூடி
வல்பெலத் துடனே யோழக்
நீதமை யத்தி னிலே
திரண்டதோர் மந்தம் பற்றி
வேதனை யெரிப்புங் கூடி
விரணமேச டொத்த குன்மம்
ஆதிசேர் சீனி கட்டி
அஉந்டகு ரனத்தால் கொள்ளே. ௨5

62. திருத்தமா வாதத் தோடே
தீக்கொடு பித்தஞ் சேர்ந்
பொருப்புகள் தோறும் நொந்து
போதவே பிடிக்கும் சூலை
பொருந்திடா வாயுவு கொள்ளும்
பேசிய வயிரே போகும்
(கருத்தினி) வரிந்து நன்றாய்
கன்டியா மனிதர்க் கெல்லாம் ௨6

## காலன் பிடிக்கும் நாடி

63. அரவிநன் வாலைப் போல
    அடிக்கடி யுதரி வாதம்
...பெரு நின்று பித்தம்
    ஓடியே ஒளிக்கு மாகில்
திரும்பிடாக் காலன் தானே
    தீங்குடன் பிடித்தா னென்று
வரம்பெறும் முனிவர் தாமும்
    வாக்கொடு சொன்னார் தேர்ந்தே ௨7

## மூலாதார வாதையால் சாதலும்,

## பயித்தியம் பிடித்தலும் அறிக.

64. பிறந்திடும் பித்த நாடி
    மிரண்டுமே நிற்கு மாகில்
வறண்டிடு மூலா தார
    வாதயா லமைவு செய்யும்
கறண்டது பித்த நாடி
    கதிப்பொடு துடித்த நின்றால்
அரண்டிடும் பயித்தி யந்தான்
    அடவொடு வந்து கூடும். ௨8

## பேச்செழும்புதலும், அடங்குதலும்,

## குழறுதலும் வருகை

65. உற்றிடும் பித்த நாடி
    ஒழுங்கொடு யெழும்பி நின்றால்
வற்றிடா பேசு கின்ற
    வசனமு மெழும்பி நிற்கும்
மத்திம பித்த நாடி
    மடங்கியே துடித்த நின்றால்
உத்தமப் பேச்சு தானும்
    ஒடுங்கிவாய் குழறிப் போகும். ௨9

## பயித்திய நோய் தீரும் மருந்து

66. பித்தமாய் நாடி தானே
பிலத்தொடு தனித்து நிற்கில்
மத்திமப் பயித்தி யத்தை
வளர்த்திடும் வரட்சி சேரும்
உத்தம மூளை தன்னி
லருகியே குறைந்து நிற்கும்
சிற்றாமுத் தாடு மெண்ணெய்
(தேய்த்திடச்) சிழைந்து போமே. 30

## கிறுகிறுப்பு தீர கஷாயம்

67. உதறிய பித்த நாடி
புழுவைபோல் துடித்து நிற்கில்
பதறிய உடம்ப முத்திப் முத்தும்
பாய்ந்திடும் சிறுநீர் வற்றும்
முதலிய புத்தி மாறிக்
கிறுகிறுத் சுழலை யுண்டாம்
நிதலிய பயிறும் பச்சை
நெல்லிக்காய் கஷாயம் கட்டே. 31

## சுரத்தோடு கபாலக்குத்து வரலாறுந்
## தீரும் வகையும்

68. நடுவிரல் பித்த மற்றும்
மந்தமாய் நடக்கு மாகில்
வடிவுள் உடம்ப முத்தி
மந்தித்துச் சுரமும் தோன்றி
இடியிடித் ததுபோல் ஓடி
சிரசினை யிடித்துக் குத்தும்
படியவே சாதி லிங்கப்
புகையுண்ணப் பறந்து போமே. 32

## வரட்சி சுரம் பிரமேகம் வரலாறு

69. வளர்ந்திடும் பித்த நாடி
வலமிடம் பிசகா வண்ணம்
பிளந்தது தனித்துப் பச்சைப்
புழுடல் கதுபோ லோடில்
உளந்தனில் வரட்சி தங்கி
யுடம்புலர்ந்த தந்தி தன்னிற்கு?
விளைந்திடும் சுரங்கள் வந்து
வள(ர்)பிற மேக மாமே. 33

## மஞ்சள் நீர், நீர்க்கடுப்பு, உடல்வரட்சி

70. சலநிற மஞ்சள் போலாய்க்
கடுந்திடுந் தளர்ச்சி செய்யும்
உலவிய மூன்று மாதம்
பழகிப்பின் உடம்பு தன்னிற்
குலவிய வங்க பற்பங்
கொடுக்காமல் போவா ராகில்
விலக்கிடா சூலை வந்து
வெடித்துப்புண் ணாகு மென்னே. 34

## பித்தத்தால் உண்டாகும் நோய்கள்

### வருதலறிக

71. பித்தமே தணித்தாற் சூடு
    பெலத்துட லுலரச் செய்யும்
பித்தமே மிகுந்தால் ஈளை
    இருமலும் பிலத்து நிற்கும்
பித்தமே மிகுந்த தானால்
    பிலன்குறைந் துடம்ப முத்தும்
பித்தமே திரட்டி னா லிற் 35
    பேசினார் பெரியோர் தாமே.

### பெருவாதம், உதரவாயுவு, பயித்தியம்

### முதலான பிணிகள் உற்பவித்தல்

72. பித்தமே கதித்த போது
    பெருத்திடும் வாத முண்டாம்
பித்தமே கதித்த போது
    பெருத்திடும் வயிற்றில் வாயுவு
பித்தமே கதித்த போது
    பிதற்றிடும் பித்தே கேளு
பித்தமே கதித்த போது 36
    பிறந்திடும் பிணிய வேகம்.

### சன்னிவாதம்-பிறத்தல் ப(த)ற்றல்

### நினைவு இழப்பு வருகை

73. பித்தந்தான் வாதத் தோடு
    பிணைத்துநேர் தொன்று மாகில்
மத்திய சன்னி வாதம்
    வந்திடும் பிளத்த லுண்டாம்
உற்றிடு வாதத் தோடு
    உறவதாய் 'பித்த மீறில்
நித்தமும் பித்தம் பேசி 37
    நினைவிழந் திருப்பா ரென்னே.

## மேற்படி நோய்கள் தீர மருந்தும்

## க்ஷயரோக ரெலாறும்

74. முற்றுமிக் குணங்கள் கண்டால்
முசறதன் முட்டை தன்னை
கத்தவ பாலி னோடு
கலந்தருந் திதமாம் பின்பு
பித்தந்தால் ஐயத் தோடு
பெருமுகந் திரும்பி நின்றால்
மத்திய சயரோ கத்தை
வாவெளி வழைக்குந் தானே. 38

## சீழும் விடாத சுரமுங்காறும்

## க்ஷயரோகந் தீர குக்கிலாதி நெய்யும்

75. இருமியே சீழும் வீழும்
இடைவிடாச் சுரமும் காயும்
பருவமாய் நெஞ்சிற் பற்றி
பதறியே யிரத்தம் வீழும்
குருநிம்பக் குக்கி லாதி
கிருதத்தாற் குடிபோம் பின்பு
வருநெறி கண்டந் தோடை
வளையதன் நீரைக் கொள்ளே. 39

## அகத்திய சுரநாடிக் குறியறிதல்

76. ஐயமா நாடித் தானே
அரணைவால் ஒத்து நேர்ந்து
பையவே மந்தம் பற்றி
பதறிடா திருக்கு மாகில்
செய்வதொன் றில்லை காலன்
தேடுவ துண்மை யென்று
கைதனைப் பிடிக்க வேண்டாம்
கழற்றிக் கொண் டப்பாற் செல்லே. 40

## இருமல், ஈளை, இளைப்பு, கோழை தீர



77. உற்றிடும் ஐய நாடி
யோங்கியே தடித்து நின்றால்
பற்றிடும் இருமல் ஈளை
பத்தியே இளைப்புண் டாகி
மெத்தவே கோழை வாயுவு
மிகுந்திடுக் கற்கத் தோடு
சுத்தமாய்த் தூ து வேளை
தோடைகை கண்டங் கட்டே. 41

## தொண்டையும், நெஞ்சுக்கட்டி, மழைக்

## காலத்தில் உபாதித்தில் தீரக் குக்கிலாதி நெய்

78. இதமொடு குருகி நாடி
இளகிடா திருகி நின்றால்
பதமொடு தொண்டை கட்டும்
பழுத்தநெஞ் சதனைக் கட்டும்
விதமொடு மழைநே ரத்தில்
மிருதுவாய் வாதை பண்ணும்
நிதியென குக்கில் ஆதி
நெய்யினால் மாறுந் தானே. 42

## பீனசம், மூக்குநீர்ப்பாய்ச்சல், மண்டைச் சூலை

## தலை கனப்புத் தீர நண்டு நெய்

79. ஒடுக்கமாஞ் சிலேட்ம நாடி
ஒழுங்கொடு பதறி நின்றால்
நடுக்கமாய் பீனி சங்கள்
நாசிநீர்ப் பாய்ச்ச லாகும்
பிடித்திடு மண்டை சூலை
பெருத்திடுந் தலைக னப்பு
தடுத்திடும் நண்டு நெய்யைத்
தலையினிற் தடவத் தீரும். 43

## ஒரு பகலுக்குள் இறக்கும் நாடி குறி

80. மத்திய ஐய நாடி
மந்தித்து வுழன்று நின்று
முத்திய ஈசல் போல
முடுகியே பதறு மாகில்
நித்ததோர் பகலுக் குள்ளே
நில்லாது மரணம் வந்து
சக்தியே மாய்ப்பா ரென்றே
சொல்லுவார் நல்லோர் தாமே. 44

## குத்தல் - கோழை - வாயு மரண நிச்சயக் குறி

81. சிலேத்தும் நாடி தானே
தெளிவொடு நிற்கிற் றீதாம்
சிலேட்சும மந்தம் பத்தில்
சேர்ந்திடும் கோழை வாயுவு
சிலேட்சும மிகுந்து நின்றால்
செப்பிடு மரணந் திண்ணம்
சிலேட்சும திரட்ட தெல்லாந்
தெளிவொடு கண்டு கூறே. 45

## சாடும்குறி

82. (ஐ)யந்தான் பித்தந் தன்னை
யணைந்தெதிர்ந்த தேறு மாகில்
நையவோர் நாளிற் காலன்
நாடியே வருவ துண்மை
பையவே ஐயம் பாய்ந்து
வாதத்தைப் பற்றி நின்றால்
செய்யுவா றென்னச் சாவோர்
நாழிகை திண்ணந் தானே. 46

### வியாதி தோஷம் - ஐயங்கள் வருகை

83. ஐயமே கதித்த போது
அஜுபகியே வியாதி யுண்டாம்
ஐயமே கதித்த போது
அறிந்திடும் தோஷ மாகும்
ஐயமே கதித்த போது
ஐயமாஞ் சன்னி யாகும்
ஐயமே கதித்த போது
அவயமே மெலிந்து கொல்லும். 47

### சரீரக் குத்தலும் நெஞ்சுவலி, மயக்கம் காணுமேகமறிக

84. பார்த்திடு நாடி மூன்றும்
பதிந்தது மலிந்து நிற்கில்
தோற்றிடு மேக முன்னே
தோன்றிய மெய்யில்
ஆத்திடா குத்த லுண்டாக்
அதனோடு நெஞ்சம் நோகும்
தேற்றமாய் மிக்கு ளங்கள்
தெளியவே அறிந்தி டாயே.
48

85. வாதபித்த ஐய மூன்றும்
வல்பலத் துடனே தத்தம்
பேதமொன் றில்லா வண்ணம்
பேசிய தானம் தன்னில்
... வைத்து நின்றால்
நெடும்பிணி சிக்க லில்லை
தாதுவு மொன்றோ டொன்று
தாண்டிற் பிணிகள் தானே. 49

86. மூவரும் உதித்து நின்றால்
மூண்டிருங் கழல்வா தங்கள்
மூவரும் மந்த மானால்
முளைத்திடும் மூல மெல்லாம்
மூவரும் நின்றால்
முடிவது திண்ணங் கண்டாய்
மூவரும் தன்தன் காலத்
துதித்திடில் வாழ லாமே. 50

## ஆறு மாதத்தில் சாகும்குறி

87. காலையில் மூன்று நாடி
கதிப்பொடு நடக்கு மாகில்
வாலையா முச்சிக் காலம்
வன்பித்த மருந்து மாகில்
மாலையில் வாதம தாகும்
ஐயத்தி லுரையு மாகில்
நீலகண்டத்தா ரானை
நிலைசாவு மாத மாறே. 51

## மலசல அடைப்பும், விடுப்பும் வருதலறிக

88. பெருவிர லிரண்டு பக்கம்
நாடிதான் பிசகி யோடில்
மருவியே மலச லங்கள்
மந்தித்தே அடைத்துக் கொள்ளும்
பெருகவே யடிவ யிற்றில்
பிடித்தமே வெழுப்பு மாகில்
தடையில்லை மலச லங்கள் 52
தானது கழன்று போமே.

தொப்புளில் - மலம் - சலம் - வாயு -

இடதுசந்து - இடது முலை - யிருத்தலறிக

89. நடுவிரல் வலது பக்கந்
நாடிதான் நடக்கும் போது
மடையதம் யுந்தி தன்னில்
மலசலம் வாய்வு சேரும்
வடநிலை முலையின் மாதே
வாகொடு இடது சந்து
இடமுது கழுத்தி நிற்ப
தென்பது முன்சொன் னோமே. 53

தொப்புளின் கீழே ஐயமும், பித்தமும்

சேரும் குணமறிக

90. நடுவிர லிடது பக்கம்
நாடிதான் நடக்கும் போது
அடைவொடு யுந்தி யின்கீழ்
ஐயையொடு பித்தம் சேரும்
கடகரி யுரித்தோன் தன்னை
கருத்தினி லிருத்திக் கொண்டு
வருவது நாடி பார்த்து
வந்தநோ யறிந்து சொல்லே. 54

கால் - கை - வலிப்பும் - உடல் நோக்காடுமாய்

வரும் சூலை நோய்க் குறி

91. சிறுவிர லிரண்டு பக்கம்
நாடிதான் சிதறி யோடில்
மருவிய காலும் கையும்
வலித்துடல் மிகவே நோகும்
ஒருபொரு ளாகி நின்ற
உமையொரு பாகம் வைத்த
திருச்சடை சிவனை நோக்கிச் 55
செப்பினேன் சூலை யாமே.

## சூலைநோய் - கசத்த வாய்நீர் - மயக்கம்

## - வாந்தி - அடிவயிற்றுச் சூலை வருகை

92. மோதிர விரலி டத்தே
முடுகியே நாடி யோடில்
காதியும் சூலைநோ யுண்டாம்
கசத்திடும் வாயி வீரும்
ஆதியா மருளி னாலே
மயக்கமும் வாந்தி யுண்டாம்
ஆதியே அடிவ யிற்றில் 56
சூலையு மமர்ந்தி ருக்கும்.

## கால் - கை - கடுப்பு - சோபம் - உந்திநோய்

## தலைவலி வருகையும் சிகிச்சையுமறிதல்

93. மோதிர விரல் வலத்தே
முடுகியே நாடி யோடில்
கால்களும் கைக குந்தான்
கடுத்தபின் சோப மாகி
ஓதியே யுந்தி நொந்து
உறுதியாய் தலைவ லிக்கும்
ஆதியா வருளி வாலே 57
அவருக்கு நசியம் பண்ணே.

## இரண்டு நாளிலும் - எட்டு நாளிலும்

## சாகும் குறி

94. வெள்ளநீ ரோடும் போல
சிலேட்டுமம் மீறி யோடி
வள்ளல்தா னறியச் சொல்லோம்
மாப்பது மற்றா னாளில்
தெள்ளிய வாதந் தானும்
சிதறியே யோடு மாகில்
உள்ளிய நாளோ ரொட்டில் 58
உறுதியாய்ச் சாவா ரென்னே.

## மூன்று நாள் - பத்து நாள் -

## நாற்பது நாட்களில் சாகும் குறி

95. பித்தயில் படியே யோடிற்
    பிதற்றினாள் மூன்றிற் கொல்லும்
முற்றிய வாத பித்த
    முயங்கிப் படியே யோடில்
பற்றறச் சொன்னோங் கண்டீர்
    பதினைந்து நாளில் கொல்லும்
நற்றியே ஐயங் கூடில்
    நாற்பது நாளிற் கொல்லும். 59

## உடனேயும் - மூன்று மாதத்திலும் சாகும் குறி

96. அரணைவால் துடிபோ லோடி(ல்)
    அங்கவன் பிழைப் பதில்லை
பரவுதேள் கொடுக்கு போலும்
    பதைத்திடிற் சாவு திண்ணம்
கரையேறும் பசுபோ லோடிற்
    கண்டிட திங்கள் மூன்றில்
வரையணி முலைதல் மாதே
    மரணமென் றறிந்து கொள்ளே. 60

## மரண நாடி குறியறிதல்

97. ஐயமாஞ் சிலேட்டு மத்தில்
    ஆடிய நாடி தானும்
தெய்யவே தவளை போலத்
    தொடங்கியே குதித்திட் டாலும்
பையவே புரண்டு புற்றப்
    பாம்பென நடைகண் டாலும்
மைசெறி குழலி னாளே 61
    மரணமென் றறிந்து கொள்ளே.

## ஒரு மாதத்தில் சாகும் நாடிகுறி

98. தேளெனத் தொத்துச் சற்றே
திரிநாடி செல்லு மாகில்
மாளவே மரணம் (வந்து)
சேர்ந்திடுஞ் சன்னி யுண்டாம்
மீளுவ தில்லை முன்னாள்
விதிப்படி வந்த தீது
நாளறி திங்கட் குள்ளே
நாசமாய்க் கொல்லுந் தானே. 62

## இரண்டறை நாளிலும் - எட்டு நாளிலும்

## சாகும் ஐய நாடிக்குறி

99. புரண்டது உருண்டு மேலை
பொருந்தியே நடக்கு மாகில்
இரண்டரை நாளி லிற்றால்
இயல்பதாம் மரண மெல்லே
சுருண்டமென் குழலி னாளே
சொல்லுநா ளெட்டி லிற்றால்
மரணமே வருகு மென்று 63
வாகுகாடு வழங்கு வாயே.

## மரண நாடி குறியறிதல்

100. கண்டவிற் றடிப்பு முண்டு
கடியமூ விரலை யூன்றில்
விண்டைய வாத பித்தம்
மேவிய நாடி மூன்றும்
ஒண்டொடி மாதே கேளாய்
உயர்ந்ததோர் தோற்ற மாகி
மண்டியே யெழுந்து பாயில்
மரணமென் றறிந்து கொள்ளே. 64

## ஒரு மாதத்தில் சாகும் நாடி குறியறிதல்

101. ஏற்றிய தீபந் தன்னில்
   எரிசுடர் தீயைப் போல
போற்றிய நாடி தானும்
   பொலிறத் தோன்று மாகில்
மாற்றரும் வாழ்வு நாளும்
   மாறுமோர் மாதத் தென்று
நாற்றிசை யுள்ளோர்க் கெல்லாம் 65
   நாடிநீ யறிந்து சொல்லே.

## பிராணன் விடும்போது நாடிகுறியறிதல்

102. நிறைபுர வட்டம் புண்டு
   நின்றிடும் அரணை வால்போல்
குறைபடா (பக்க) மொன்றும்
   குறைந்துமே நிற்கு மாகில்
உயிர்விடும் பிராணி என்று
   உண்மைசொல் வாக டத்திற்
பறையது கட்டிச் சாற்றும் 66
   பண்டிதர்க் கெல்லாம் பாரே.

## அகத்திய முனிவர் அருளிச் செய்த

## அமிர்த சாரம் - 60

### கணபதி துதி விருத்தம்

103 . ஆதியாங் கணேசன் காப்பு
அருளா நிற கருவை யெல்லாஞ்
சோதியாம் ஆயி பாதம்
தனையெண வுட்கொண் டேத்தி
நீதியாந் திரட்டு சூத்திரம்
நிலைத்தவா கடமாய்ச் சொல்ல
வாதமாம் பிணிகள் தீர
மருந்தொரு குணத்தைக் கேளே. 1

### வாதம் வெப்பதம் தீர சூரணம்

104. வாதந்தான் வெப்ப தாகும்
வருகின்ற பக்க வாதம்
சீதமே நடுக்கு வாதம்
சிறந்திடு முடக்கு வாதம்
சூதமே சந்த வாதம்
தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந் தீர
பெருந்திடு மருந்து கேளே. ௨

105 . மருந்துதான் சித்திர மூலம்
வளருமா விலங்கு கொள்ளை
திருந்திய முருங்கைச் சங்கு
சிறந்தவெள் ளெருகு வேப்பு
பொருந்திய வெருக்கு சுக்கு
புகளுந் திப்பிலி மரிசல்
கருந்திய லவண மக்கல்
கால்மன் டலந்தான் கொள்ளே. 3

## மேலுக்குத் தொக்கிடமிருந் தையிலம்

106. கொள்ளவே யெள்ளெ யத்சுக்
   குலவுதில் லைப்பாற் கற்கம்
வில்லவே முருங்கை வாகை
   யிருத்தமா விலங்கை மூலங்
கள்ளவிழ் காய மிந்த
   கடியதிப் பிலிவ சம்பு
உள்ளமா யொாத்தப் புல்லே
   யுடம்புதொக் கடமுஞ் செய்யே. 4

107. செய்யதோ ரெல்லுஞ் சாகச்
   சிறந்திடும் பித்தம் கேளாய்
அய்யமாஞ் சித்தப் பிரமை
   அறிவிலா பிரமை சித்தம்
நெய்யவே நருக்கல் வாந்தி
   நலத்திரு அழற்றல் வாய்நீர்
தெய்யவே யிவைக ளுக்குச்
   சாற்றிட மருந்து கேளே. 5

## சூரணம் செய்யும் கிரகைகள்

108. சாற்றிய மதுரம் சோடசம்
   தளருமஞ் சிட்டி வேலம்
போற்றிய நெல்லி மாஞ்சில்
   புழுஞ்சத் தவங்கி நாம்பு
மாற்றிய தாளிசத் தாளம்
   மருவுசீ ரகமும் நாகம்
பாற்சர்க் கரையுங் கட்டிப்
   பார்த்துமன் டலந்தான் கொள்ளே. 6

## பித்தம் நாற்பதுந்தீர முருங் தைலம்

109 . பாரிந்தநல் வெண்ணெய் பாலும்
பாரிந்திரு நெல்லிச் சாறுந்
திருந்திய முசுமு சுக்கை
சிந்திடும் பொன்னாங் காணி
வருந்திய முத்தக் கிட்டி
மதுரமோ டேல மாக்கில்
பொருந்தசன் பகப்பு கிராம்பு
புனைந்தெறி தலைக்கு வாரே. 7

## சிலேஷ்மம் மிருபதும் தீர நெய்

110. வார்பெறு தனத்தா ஐயம்
வளர்ந்திரு மிருப தாகும்
பேர்பெறு சுவாச காசம்
பெருமிரு மலமி ரத்தம்
சீர்பெறு காச மாந்தை
திகைத்திரு சயரோ கங்கள்
தார்பெறு சுரமுண் டாகுந்
தனக்கெவா மருந்த கேளே. 8

## நெய் செய்யுந் திரவகள்

111. தனதுநல் விஞ்சிச் சாறு
தருத்திரி கருகோ டேலம்
மனமுறுந் தேக்கு சிவ்வி
வாளுழு வாசி மிந்து
கைமுறு நாகம் கண்டம்
கத்திரி யரத்தை யொடு
நிலையுது சீதி ரத்தம்
நெய்யெரி தன்னே கொள்ளே. 9

112. எரித்தநல் வெண்ணெய் பாலும்
இருவேலி விலாமிச் சோடு
தாத்திடு சீந்தில் முத்தஞ்
சந்தனம் தேவ தாரும்
உரித்திடு தண்ணீர் மீட்டா
உயர்நிலைப் பனைநல் லாரி
பருத்தமஞ் சளமஞ் சோடு
பகர்தலைத் தனக்கு வாரே. 10

## மூலநோய் அறும்தீரச் சூரணம்

113. தனக்குற மிரத்த மூலத்
தாங்குற மூலஞ்சீ மூலம்
மனக்குற வாத பித்தம்
வளைரய மூலத் தோடு
சினக்குற முளையா மூலஞ்
சீமலக் குருத மெல்லாங்
கனக்குற மருந்த சொல்லக்
கன்னியே கேட்டி டாயே. 11

114. கன்னிரிவ் சருகு முத்தங்
கரணையும் பெருத்த சுக்கும்
வல்லியாத் சித்திர மூல
மருட்கூழல் கோடுக டுக்காய்
பன்னிய பிரண்டை கொன்றைப்
பகர்புளி நறளை காட்டிற்
துன்னிய கரணை பாவிற்
சூரணஞ் செய்த கொள்ளே. 12

### கிராணி தீர மருந்து

115. செய்திடு வாத பித்த
சிலேட்டுமக் கிராணி மூலங்
கொய்திடு கிராணி யுங்
கூடிய யிரத்த பித்தம்
நெய்திடு சலக்கு ராணி
நிலைத்திடு சீக்கி ராணி
எய்திடும் கிராணிக் கெல்லா
மினியநல் மருந்து கேளே. 13

116. இனியதோ குப்பு காய
மிந்துப்பு வளைய லுப்பு
கனியவெள் ளுள்ளி சுக்கு
கடியதிப் பிலிம ரீசந்
தனியது சவுட்டு மண்ணுந்
தழற்சித்ர மூல மோமம்
பனியது பிரமிச் சாற்றால்
பண்ணிய மருந்து கேளே. 14

### குன்மம் வெட்டும் தீர சூரணம்

117. பண்ணிய வாத பித்தம்
பகரையக் குன்ம மெல்லாம்
நண்ணிய சத்தி குன்மம்
நலத்திடு வாயிநீர் குன்மங்
கண்ணிய வெரியாங் குன்மங்
கனத்திடும் பிரட்டு குன்மங்
குன்னிய குன்மம் தீர
கூறக்கேள் மருந்து தானே. 15

118. காரிய நாவி சூதம்
    கொடியவெள் காரந் தாரந்
தேரிய மிருவி லிங்கந்
    திகழ்மனோ சிலையுங் காரம்
காறிய கெந்த கந்தாள்
    களர்திரி கருகு கட்டி
ஆறிய பொடிய தாக்கி
    அதிற்றேன்விட் டருந்த வாயே. 16

119. அரந்திட வாத பித்தம்
    ஐயமோ டிரத்த் திதால்
வருந்தம்வா தத்தில் நாலும்
    வளர்சல பித்தமா றும்
பொருந்தும்ஐ யத்திற் பத்தும்
    போகுமே யிவைக ளெல்லாம்
திருந்திய வாத பித்த
    சிலேட்டமும் தீர லாமே. 17

## தலை முழுகுந் தைலம்

120. ஆமத மருந்த கேளாய்
    அலைகடல் முத்தம் கோஉதீடம்
தாமத யெலந்தை கொட்டை
    கரந்தையுந் தரும்பு லாவும்
போமத கொன்றை யோடு
    புகழும்பா திரியும் நாவல்
ஓமத காச்சற் காய்ந்த
    வுயர்மத ரமுந்தாள் தீயே. 18

121. மதுரஞ்சந் தலைக்கி ராம்பு
மகிழ்பச்சை மகரப் பூவுஞ்
சதிர்பெறு மிலவங் கந்தாள்
தாளிச மாஞ்சில் பூரஞ்
கதிரிலா மிச்சஞ் சீந்தில்
களமுத்தம் வேலி சட்டம்
எதிரிலா வெண்ணெய் பாலு
மொத்தநீ யூஞ்சி டாயே. 19

## மேகம் (   ) (20) தீர ரசாயனம்

122. எரித்திடு மிரத்த மேக
மிசைந்தசீ மேகந் தன்னில்
மரித்திடு மேக(ப்) புண்ணும்
வருந்திய விசரம் பாளை
தரித்திடு தள்ளி மேகஞ்
சலக்கட்டு மேகந் தன்கா
விரித்திடு மேகந் தீர
விளம்பக்கேள் மருந்த தானே. 20

123. விளங்கிய பறங்கி பட்டை
மொரகெந்த கஞ்சா திக்காய்
களம்புரு கிராம்பு நாகம்
கற்பூரஞ் சாதிப் பத்திரி
தளம்புரு மகவ கெந்தி
தளர்கொடு வேலி மாஞ்சி
குளம்புசர்க் கரைநெய் கட்டு
மிதமுட னட்கொள் வாயே. 21

## காமாலை தீர(ம்) பொடி

124. இதமுறு வாத பித்த
மிசைந்தசிலேட் டுமக்கா மாலை
பதமுறு மழற்கா மாலை
பாண்டுவின் ஊதுகா மாலை
நிதமுறு வரட்கா மாலை
நிறமஞ்சள் நீர்க்கா மாலை
சிதமுறு விற்ப ரங்கள்
சேர்ந்தகா மாலை தானே. 22

125. சேர்ந்தகா மாலைக் கெல்லாந்
திரிந்தரப் பொடியுங் கிட்டத்
சார்ந்திடுங் கடுக்காய் நெல்லி
தான்றிசீ ரகமி ரண்டும்
போர்த்தவெள் ளுள்ளி க(ா)ரந்தம்
புகழ்பெறு காயஞ் சுக்கு
கார்ந்ததிப் பிலிம ரீசந்
தான்பதம் பழச்சாற் றீயே. 23

## சொறி சிரங்கு தீர உள்ருக்கு விருதம்

126. பதமுறு குலை புங்கள்
பகர்ந்திடு கடுவி சாரம்
மிதமுறு பெருவி யாதி
மிசைந்திடும் குட்ட ரோகம்
கதமுறு தேம்பல் மேனி
தளருந்தா மரைகை வெள்ளை
நிதமுறு சொறிசி ரங்கு
நிகழ்த்திடு மருந்த கேளே. 24

## மேலுக்கு சாம்பிராணி தைலம் பூசல்

127. நிகழ்ந்தநீ ரெட்டி வித்த
 நேர்படு குதம் விங்கந்
தகர்ந்தநெல் விக்காயி கெந்தி
 தாரமுந் தருக தத்தம்
பகர்ந்தநெய் வார்த்த ரைத்தும்
 பொருந்தநாள் பதநாட் கொள்ள
தகர்ந்திடுஞ் சாம்பி குணித்
 (தை) தயிலத்செய் துடம்பிற் பூசே. 25

## கண்டத்துக்கு மேற்பட்ட சகலரோகமும்

## தீரச் சூரணம்

128. பூசிய கபால சூலை
 பொருத்தபின் விசுநீர்த் தும்மல்
நாசிகா பீட ரோகம்
 நாற்றமுந் தின்னுவக் குடீடந்
தேசிகம் காதிற் சீழுக்
 சேர்த்திடுங் கபால வாயு
காசினி தந்த ரோகந்
 ... மருந்து கேளே. ௨6

129. கரந்திடும் பெரும குந்த
 கண்டங்கத் திரியுஞ் சுக்குஞ்
சுரந்திடுஞ் செங்கத் தாரி
 தோய்மூசீ ரகமி ரண்டும்
பரந்திடு கடுகு ரோணி
 பகர்சங்கம் அரத்தை யோடு
நிரந்தரஞ் சூரணந் தின்ன
 நீங்குமேல் நோய்கள் தானே. ௨7

## தலை முழுகுந் (தை) தயிலம்

130. நீங்குகார்த் திகைக்கி ழங்கு
நிலக்குமிழ் தசமூ லந்தாள்
பாங்குற மஞ்சள் மூன்று
பகர்குப்பிக் கடுகு ரோகி
தேங்குசா ரடையெ ருக்கு
செங்கொடி வேலி சீந்தில்
பாங்குநல் லெண்ணெய் செய்து
பருவமாய் வைத்திசெய் வாயே. 28

## கவிசை, பெருவயிறு, மகோதரம் தீர

131. பருவமாம் கவிசை யோடு
பக்கவிப் புருதி சால
உருவமாம் பிலி கோவை
உதரத்தில் சூலை யண்டி
கருவதை யழிக்கும் கற்பம்
கடியவிப் புருதி யோடு
பெருவயி றுடனே மற்றப்
பெருமகோ தரமுந் தாமே. 29

## பேய்த் துமட்டிக் காய் யெண்ணெய்

132. பெருத்தபேய்த் துமட் டிக்காய்
பேசும்வெள் காக்க ணம்வேர்
திருத்தமாம் லவண மைந்தஞ்
சேர்த்திடு கார மைந்தம்
வருத்தமா விலிங்கை கொன்றை
வச்சிரத் தின்பால் மூலங்
கருத்தது வசம்பு மஞ்சள்
காயம்வெள் ளுள்ளி கட்டே. 30

133. காயநற் சிவதை போளங்
காட்டினா மணக்கின் வித்து
வாயரோ கனிமு ருங்கை
வள்ளிமா வலுரி சின்னி
பாயுரு ... ...
பகரும் ... ...
... ... பாலத்
சேர்த்தெரித் துள்ளே கொள்ளே. 31

## சகல வாயுவுகளும் தீரச் சூரணம்

134. சேர்த்திரு மிரத்த காசம்
செய்யநெஞ் சிறுக வக்கும்
பார்த்திடும் வாத வாயு
பயித்திய வாயு மேகம்
சார்த்திடும் வாயு மெய்யில்
சருவாங்க வாயு மூலம்
ஏர்த்திடு வாயுக் கெல்லா
மிசைந்தநல் மருந்து கேளே. 32

## சூரணத் திரகைகள்

135. இசைந்தசீ ரகமி ரண்டு
இயல்திரி கடுகு மூலம்
இசைந்தநற் சித்திர மூலம்
மாந்திரி பலைவு மிந்து
இசைந்தவாய் விளங்கள் காய
மியந்திரு சவுட்டு மண்ணுங்
கசந்தரோ கணியும் தேனுங்
கலந்துண்ண நோய்கள் போமே. 33

## தீர நெய்

136. கலந்திடு மிரத்த வாந்தி
    களரத்த ரோக நெஞ்சிற்
புலந்திடு மிரத்த பித்தம்
    பொருந்திய சயகா சங்கள்
மலந்திடு பெரும்பா டோடு
    வளைரெலும் புருக்கி சூலை
நலந்திகழ் வுன்ஷுந் தீர
    நாரியே மருந்து கேளே. 34

137. நாரியே தண்ணீர் விட்டால்
    நல்லத்தி யரசால் வித்து
பாரிய பிளையுஞ் சீந்தில்
    பகர்முத்தங் சாதிக் காயுஞ்
சீரிய கிராம்பு பத்திரி
    திரவிய மைந்துங் கட்டி
காய நெய்யிற் செய்துக்
    கொடுத்திட ரோகம் போமே. 35

## சகல சுரங்களும் தீரக் கியாழம்

138. கொடுத்திடு சுரத்துக் கெல்லாம்
    கர்விலா மிச்சுஞ் சீந்தில்
எடுத்தகாஞ் சோறி முத்த
    மிசைபற்ப டாக முட்டி
மருந்திடு வேம்பு கோஉ்டம்
    வளர்கண்டங் கத்தரி யோடு
அடைவுடன் கியாழஞ் செய்த
    அருந்திடிற் சுரந்தான் போமே. 36

## சன்னிகள் தீர நசியம்

139. நன்முடல் சன்னிக் கெல்லாம்
தயங்கிய முசுறு முட்டை
மன்னாபு நாக மோடு
வளர்ந்திடுங் கடுகு காயம்
சொன்னதிப் பிலைமு லைப்பால்
துலங்கிய மிஞ்சிச் சாறு
முன்னமே வசம்போ டுள்ளி
மூக்கினில் நசியஞ் செய்யே. 37

## சன்னி தீர மேலுக்குத் தைலம்

140. ஓடிய காயத் தோடு
ஊசிய வசம்பு தாரம்
நாடியே கௌரி நாவி
நலந்திகழ் காயம் போலந்
தேடிய மஞ்சள் மூலந்
... ... ...
கூடிய பெருமை குந்தை
சொல்சிறு குறிஞ்சான் கட்டே. 38

141. சொல்லிய யெருக்கும் பூக்குந்
தல்கிய முருங்கை வேரும்
மல்லிகை சதுரக் கள்ளி
மருமஞ்சள் நேரியாரி சிப்பால்
புல்லிய வெள்ளை யைத்தும்
புகழுக்குக் குடத்தி லிட்டம்
மெல்லிய பதும தாக
... மேன் மேனுஞ் சேரே. 39

## சகல கரப்பான் தீர வெண்ணெய்

142. கருத்தறு புடைக ரப்பன்
கருங்கொல் லிக்க ரப்பன்
வீங்கிவருந் திடுங்க ரப்பன்
பித்தவாத சிலேட்டுமக ரப்பன்
பொருந்திடுஞ் செங்க ரப்பன்
பிலத்ததோ ரொக்க ரப்பன்
திருத்தமாங் கரப்ப மெல்லாந்
தீர்ந்திட மருந்து கேளே. 40

143. தீர்ந்திட செங்கத் தாரி
சேர்ந்திட நொச்சி நேற்ற
சார்ந்திடுங் கழற்சி புங்கு
சங்கொடு சங்கங் குப்பி
பேர்ந்திடும் கிரந்தி நாயன்
புகழ்செருப் படையுஞ் சின்னி
கூர்ந்தவே லிப்ப குத்தி
கொடிகள்வெள் ளறுகு தானே. 41

144. கொடியவேம் பாடம் பட்டை
கூரிய சிவனார் வேம்பு
நெடியநத் சிவதை மூலம்
நேரிய கண்டல் காரி
பொடியது கடுக்காய் ரோகி
புதக்க ரப்பான் பட்டை
வெடியசீ ரகமி ரண்டு
விளக்கெண்ணெ யொரித்தட் கொள்ளே. 42

## சகல விடதங்களும் தீர குடிநீர்

145. கொள்ளவே விடபா கங்கள்
   கூறிடப் பலவா யுண்டு
முள்ளினு தனைநா ரத்தை
   முதிருப்பக் கொண்டா னொச்சி
கள்ளைவிழ் பிரமி சிவ்வி
   கழற்சிமா மலைநல் வாரி
தெள்ளிய கடுக்கா(யி) சுக்கு
   சேர்ந்திட்டுக் குடிநீர் செய்யே. 43

## கண்டமாலை - பவுத்திரங்கள் தீர தைலம்

146. செய்யதோர் கண்ட மாலை
   சேர்ந்திடு பவுத்தி ரங்கள்
வெய்யவிப் புருதி விச்சு
   மேவிடுந் தடையின் வாழை
பையபுன் குலை யோடு
   பருத்திடும் பிளவை வீக்கம்
உய்யரை யாப்பு முன்று
   முடைந்திட மருந்த கேளே. 44

147. உடைந்தவேப் பெண்ணெ யுள்ளி
   யோங்குவேம் பாடம் பட்டை
கடைந்தநற் கெந்தி சூதம்
   கரகநற் றுருசு ரத்தம்
விடைத்தருள் கிலிய ந் தாரம்
   மிருதாரு சிங்கி கட்டி
இடைந்திடித் தயிலஞ் செய்யி
   விந்தமா நோய்கள் போமே. 45.

# துணை நூற் பட்டியல்

## துணை நூல்கள்


1. குணபாடம் (முதற் பாகம்) (பதி. 3) க.ச. முருகேச முதலியார் த.நா. அரசு வெளியீடு, சென்னை, 1969
2. குணபாடம் (2-3 பகுதிகள்) (பதி. 2) டாக்டர் ஆர். தியாகராசன் த.நா. அரசு வெளியீடு, சென்னை, 1968
3. சித்த மருத்துவ நோய் நாடல், நோய் முதனாடல் திரட்டு (இரண்டாம் பாகம்) டாக்டர் ம. சண்முகவேலு த.நா. அரசு வெளியீடு, சென்னை, 1967
4. சித்த மருத்துவாங்கச் சுருக்கம், டாக்டர் க.சு. உத்தமராயன் த.நா. அரசு வெளியீடு, சென்னை, 1953
5. சித்தர்கள் கண்ட சிறுநீர் மருத்துவம், டாக்டர்,இரா. மாணிக்கவாசம் அன்னை அபிராமி அருள், சென்னை
6. சித்தர்கள் சொல்லவை, டாக்டர் இரா. மாணிக்கவாசகம், அன்னை அபிராமி அருள் சென்னை, 1985
7. தெய்வீக மூலிகைகள், டாக்டர் சி.கே. மாணிக்கவாசகம், நர்மதா பதிப்பகம்
8. நம் நாட்டுச் சித்தர்கள், டாக்டர் இரா. மாணிக்கவாசகம், அன்னை அபிராமி அருள், 2-ம் பதிப்பு 1982
9. பண்டை மருத்துவமும் பயன்தரும் மூலிகைகளும், த. கோவிந்தன் திருமகள் நிலையம், சென்னை, 1989

# பின்னிணைப்பு

# பாட்டு முதற் குறிப்பு

## பாட்டு முதற் குறிப்பு


| | | |
|---|---|---|
| அச்சமற | ... | 8 |
| அரணைவால் | ... | 96 |
| அறிந்திட வாத | ... | 119 |
| அறிவிற்றுலை | ... | 63 |
| அல்லியொத்ததார் | ... | 1 |
| ஆதியாங்கணேசன் | ... | 103 |
| ஆமது மருந்து | ... | 120 |
| ஆமப்பா | ... | 17 |
| இசைந்த சீரகம் | ... | 135 |
| இடுப்பொடு கழுத்து | .... | 59 |
| இதமுறு வாத | ... | 124 |
| இதமொடு குறளி | ... | 78 |
| இப்படி சுரங்கள் | ... | 44 |
| இருமியே சீழும் | ... | 75 |
| இனியா தொடுப்பு | ... | 116 |
| உடைந்த வேப்பெண்ணெய் | ... | 147 |
| உதரிய பித்த நாடி | ... | 67 |
| உந்திய யெனும் தலத்தில் | ... | 20 |
| உறைந்த விறலைக் கட்டு | ... | 30 |
| உற்றிடும் ஐய நாடி | ... | 77 |

உற்றிடும் பித்த நாடி ... 65

உற்றிடும் வாத நாடி ... 43

எண்ணெயில் தலையில் ... 38

எரித்த நல்லெண்ணெய் ... 112

எரித்திடு மிரத்த ... 122

ஏத்திய தீபந்தன்னில் ... 101

ஐயந்தான் பித்தந்தன்னை ... 82

ஐயமா சிலேட்டுமத்தி ... 97

ஐயமா நாடித் ... 76

ஐயமே கதித்த ... 83

ஒடுக்கமாகு சிலேட்டு .... 79

ஓடிய காயத்தோடு ... 140

கண்டமதில் நின்று ... 23

கண்டவிற்றுடிப்பு ... 100

கரந்திடும் பெருமருந்து ... 129

கருத்தற வேவாதி மகள் ... 10

கருத்தப்புடைக ரப்பன் ... 142

கலந்திடுமிரத்த ... 136

கன்னியின் சருடு ... 114

காணுகின்ற வாதரே ... 33

| | | |
|---|---|---|
| காயநற் சிவதை | ... | 133 |
| காரிகை தமக்கு | ... | 97 |
| காலையில் மூன்று | ... | 87 |
| கூர்மஸூ விழியில | ... | 27 |
| கூரிய நாலி | ... | 118 |
| கூறிட்டவாத நாடி | ... | 52 |
| கூறுகின்ற வாத சிலேட் | ... | 29 |
| கேளப்பா மணமான | ... | 14 |
| கைக்கூலி கையொப்பு | ... | 2 |
| கொடியவேம் | ... | 144 |
| கொடுத்திடு சரத்த | ... | 138 |
| கொள்ளவே யெண்ணெய் | ... | 106 |
| கொள்ளவே விடிமா | ... | 145 |
| சங்கிணியெல்ப | ... | 24 |
| சல நிறமஞ்சள் | ... | 70 |
| சாற்றிய மதுரம் | ... | 108 |
| சித்திரை வைகாசி | ... | 37 |
| சிலேத்தும தேக நிறம் | ... | 32 |
| சிலேஉஷ்ம நாடி | ... | 81 |
| சிறுவிரவிரண்டு | ... | 91 |

| | | |
|---|---|---|
| சுழி முனையாம் இடகலை | ... | 22 |
| செய்கின்ற நாடி | ... | 26 |
| செய்திடு வாத | ... | 115 |
| செய்ய தோரென்ன | ... | 107 |
| செய்தோர் கண்ட | ... | 146 |
| சேர்ந்தகா மாலை | ... | 125 |
| சேர்ந்திடு யிரத்த | ... | 137 |
| சொல்லுகின்ற பித்த நாடி | ... | 27 |
| சொல்லிய யெருகிடு | ... | 141 |
| தமராயென்பார் | ... | 12 |
| தரணிதனில் வுதரத்தின் | ... | 9 |
| தரணியுள்ள வியாதி | ... | 25 |
| தனக்குறும் பித்த | ... | 113 |
| தனது நல் விஞ்சிக் | ... | 111 |
| தன்னுடன் சன்னி | ... | 139 |
| தானமொடு வாய் | ... | 36 |
| தானென்று விந்து வின்ற | ... | 15 |
| தானென்று பதினொன்று | ... | 18 |
| திருத்தமா வலிதத் | ... | 62 |
| தீர்ந்திட செங்கர் | ... | 143 |

| | | |
|---|---|---|
| தேவனைத் தெறிந்து | ... | 98 |
| நடக்கும் பயித்தகு் சவாி | ... | 28 |
| நடுவிரல் இடது | ... | 90 |
| நடுவிரல் பித்த மற்றும் | ... | 68 |
| நடுவிரல் வலது | ... | 89 |
| நாட்டினில் சுரங்கள் | ... | 45 |
| நாட்டியுள்ள வர்க்கங்கே | ... | 11 |
| நாாியே தண்ணீர் | ... | 137 |
| நிகழ்ந்து நீரெட்டி | ... | 127 |
| நிறையுறவட்டம் | ... | 102 |
| நீங்கு கார்த்திகைக் | ... | 130 |
| நோய் நாடி நாடி | ... | 40 |
| பஞ்சமற்று றென்ற | ... | 13 |
| பண்ணிய வாத | ... | 117 |
| பதமுற சூலை | ... | 126 |
| பதறிய வாத நாடி | ... | 53 |
| பரவிய வாத நாடி | ... | 49 |
| பாிந்து நல்லெண்ணெய் | ... | 109 |
| பருவமாங்கவிசை | ... | 131 |
| பார்க்கின்ற சோதிடம் | ... | 4 |
| பார்த்திடு நாடி மூன்றும் | ... | 84 |

| | | |
|---|---|---|
| பித்தந்தான் வாத்த்தோடு | ... | 73 |
| பித்தமாய் நாடி | ... | 66 |
| பித்தமிப் படியே | ... | 95 |
| பித்தமே குதித்த போது | ... | 72 |
| பித்தமே தணிந்திற்கூடு | ... | 71 |
| பிலத்து நிற தசவாயு | ... | 19 |
| பிறந்திடும் | ... | 64 |
| புரண்டது உருண்டது. | ... | 99 |
| புசிய கபால சூலை | ... | 128 |
| பெருத்த பேய்தும்மட் | ... | 132 |
| பெருவிரலிரண்டு | ... | 88 |
| பேச்சது குளறி நின்று | ... | 50 |
| மதுரஞ் சந்தனஞ் | ... | 121 |
| மத்திய ஐயநாடி | ... | 80 |
| மருந்து சுத்தி குணம் | .... | 6 |
| மருந்துதான் சித்திரமு | ... | 105 |
| மந்திரமும் வாகடமும் | ... | 3 |
| மாதற்கை பிடித்த போது | ... | 58 |
| மாதற்கை பிடித்த போது | ... | 60 |
| மந்தமாய் வந்தநாடி | ... | 55 |

| | | |
|---|---|---|
| முறையான பெண்ணும் | ... | 16 |
| முற்று மிக் குணங்கள் | ... | 74 |
| முலையில்ற தேகம் | ... | 31 |
| மூவரும் உதித்து | ... | 86 |
| மோதிர விரலிடத்தே | ... | 92 |
| வந்தமா வாதரோ | ... | 93 |
| வந்திடு மூன்று நாளில் | ... | 48 |
| வந்திடும் வாத நாடி | ... | 46 |
| வலக்கையைப் பிடித்திழுத்து | ... | 7 |
| வளர்ந்திடு பித்த நாடி | ... | 69 |
| வாதந் தந்தான் தனித்து நிற்கில் | ... | 56 |
| வாதது பித்த நாடி | ... | 61 |
| வாதந்தான் தனித்து நின்று | ... | 42 |
| வாதந்தானென்பதாகும் | ... | 104 |
| வாதவித்தய மூன்றும் | ... | 85 |
| வாதமே கதித்தபேடு | ... | 54 |
| வார்பெரு தனத்தாய் | ... | 110 |
| வாதமும் பித்தமைய மருவிய | ... | 41 |
| வாதமே மெலிந்து விம்மி | ... | 51 |
| வாதகுறி வயித்தியரே | ... | 5 |
| விதமுள்ள பயித்தியர்தன் | ... | 35 |
| விளங்கிய பற்கு | ... | 123 |
| வெள்ள நீரோடு | ... | 94. |

சொல்லடைவு

# நோய்கள்


| | |
|---|---|
| அசாத்திய ரோயி | 7:4 |
| அசாத்தியம் | 8:2 |
| அண்டத்தில் | 48:2 |
| அரையாப்பு | 146:7 |
| அழற்காமாலை | 124:3 |
| இரத்தகாசம் | 134:1 |
| இரத்த பித்தம் | 115:4 |
| இரத்த மூலம் | 113:1 |
| இரத்த மேகம் | 122:1 |
| இரத்த வார்தி | 136:1 |
| ஈளை | 31:3 |
| இருமல் | 71:4; 77:1; 110:4 |
| இளைப்பு | 77:4; 131:2 |
| உதரத்தில் சூலை | 131:4 |
| உழலை | 67:6 |
| உடந்ஷம் | 31:3 |
| எரிகரப்பன் | 142:6 |
| எரிவாக் குன்மம் | 117:5 |
| எலும்புருக்கி | 136:6 |
| ஐயக் குன்மம் | 117:2 |

| | |
|---|---|
| ஐயம் | 107:2; 41:1; 74:3; 76:1 82:1; 85:1; 83:3; 85:1; 83:6; 95:4; 93:1; 110:1; 119:3 |
| ஐய மூலம் | 113:4 |
| கடிவிசாரம் | 126:2 |
| கபாலகுலை | 128:1 |
| கபாலவாயு | 128:3 |
| கர்ப்பம் | 131:3 |
| கவிசை | 131:1 |
| கழல் வாதங்கள் | 86:2 |
| காசம் | 110:3 |
| காதிற் சீழ் | 128:3 |
| காமாலை | 33:4; 124:2; 125:1 |
| கிராணி | 115:2 |
| கிரிசரம் | 122:4 |
| குட்ட ரோகம் | 126:4 |
| குடலை வாய்வு | 30:2 |
| குத்தல் | 84:3 |
| குலைரோய் | 92:3 |
| குன்மம் | 56:2; 61:3 |

| | |
|---|---|
| குஷ்டம் | 128:4 |
| கொள்ளிக்கருப்பான் | 142:2 |
| கோழை | 73:3; 81:2 |
| சத்தி | 119:2 |
| உத்தி குன்மம் | 117:3 |
| சந்துவாதம் | 2:3 |
| சயரோகம் | 110:6; 74:4 |
| சருவாங்க வாயு | 134:3 |
| சலக்கட்டு | 122:3 |
| சலக்கி ராணி | 115:3 |
| சன்னி வாதம் | 29:3; 30:3; 33:3 73:3 |
| சன்னி | 47:3; 48:2; 52:4; 54:4 83:3; 139:1; 96:2 |
| சித்தப்பிரமை | 107:3 |
| சிலேத்துமம் | 25:3; 31:3; 32:3; 33:3 35:3; 81:3; 94:2; 97:1; 110:2; 115:2; 119:8 |
| சிலேத்தும ரோகி | 34:4 |
| சிலேஷ்மம் | 6:2 |
| சிக்கிராணி | 115:3 |
| சிமூலம் | 113:2 |

| | |
|---|---|
| சுரங்கள் | 42:3; 44:3 |
| சுரம் | 43:3; 49:3; 68:4; |
| | 69:3; 75:2; 110:3 |
| சுவாசகாசம் | 110:3; 138:1; 30:4 |
| சூலை | 62:4; 70:3; 91:4; 92:4 |
| | 126:1; 136:3; 146:3 |
| செங்கரப்பான் | 142:3 |
| சொறிசிரங்கு | 126:4 |
| சோபம் | 93:4 |
| தலைவணப்பு | 39:3 |
| தலைவலி | 93:3 |
| தடைவாழை | 146:4 |
| தேம்பல்மேனி | 126:3 |
| தொர்த ரோகம் | 32:3 |
| தோஉடம் | 83:4 |
| தீர்த்தும்மல் | 128:2 |
| தீர்க்காமாலை | 124:3 |
| நாசிகா பீடரோகம் | 128:3 |
| நடுக்கல் | 103:3 |
| நடுக்கு வாதம் | 2:3 |

| | |
|---|---|
| பக்க வாதம் | 2:2 |
| பக்க விரப்புருதி | 131:2 |
| பயித்தியம் | 28:1; 31:3; 35:1; 35:4; 64:3; 66:3 |
| பயித்திய தேகம் | 31:4 |
| பவுத்திரங்கள் | 146:2 |
| பாண்டு | 124:4 |
| பித்தம் | 46:3; 62:1; 62:2; 63:3 68:1; 73:1; 73:3; 74:5 82:1; 85:1; 87:4; 90:4 95:1; 10003; 107:2; 113:3 109:1; 119:4 |
| பித்தமே | 71:1; 71:3; 71:4; 72:1 72:2; 72:3; 72:3 |
| பித்தரோகி | 33:3; 34:3 |
| பித்தவாத சிலேத்தம கரப்பான் | 142:4 |
| பிரட்டுக் குன்மம் | 117:6 |
| பிரமை | 107:4 |
| பிளவை | 146:6 |
| விளை | 137:3 |
| பிளிசம் | 79:3 |
| புண் | 70:4; 136:3; 147:3 |

| | |
|---|---|
| புடை கரப்பன் | 142:1 |
| பெரும்பாடு | 136:5 |
| பெருவியாதி | 126:3 |
| மண்டைச் சூலை | 79:3 |
| மந்தம் | 42:4; 47:4; 76:3; 81:3 86:3 |
| மலடு | 18:4 |
| மாந்தை | 110:3 |
| முகத்தின் வாதம் | 2:3 |
| முடக்கு வாதம் | 2:9 |
| மூளை மூலம் | 113:3 |
| மூலம் | 106:4; 113:2; 115:2 |
| மேகப்புண் | 122:3 |
| மேகம் | 122:7 |
| வரட்காமாலை | 124:3 |
| உயிற்றெரிவு | 46:3 |
| வலிப்பு | 62:3 |
| வாத சிலேத்துமம் | 29:1 |
| வாததோரி | 31:2 |
| வாதத்தில் | 61:1; 119:3 |
| வாதத்தின் | 56:3 |

| | |
|---|---|
| வாதத்தை | 82:3; 73:3 |
| வாதர்தான் | 2:1; 94:3 |
| வாதபித்த | 6:2; 115:1; 117:1; 119:1 |
| | 124:1 |
| வாதப்பைத்தியம் | 28:3 |
| வாதம் | 2:3; 35:3; 43:3; 46:3 |
| | 62:1; 63:2; 72:2; 73:1 |
| | 35:1; 106:3; 95:3; 87:3 |
| வாதமாம் | 48:2; 52:3; 54:3; |
| வாதமே | 57:1; 34:1 |
| வாதரோகி | 34:1; 33:1; 34:3 |
| வாதவாயு | 134:3 |
| வார்தி | 103:3; 92:3 |
| வாய்நீர் குன்மம் | 117:4 |
| வாயு | 14:1; 81:4 |
| வாயுமேகம் | 134:4 |
| வாய்வு | 47:3; 60:3; 62:4; 72:4 |
| | 73:3 |
| விக்கல் | 21:2 |
| விப்புருதி | 146:3 |
| விற்பரம் | 124:3 |

விடத் பாகங்கள் 145:1

வீக்கய காமாலை 124:4

<u>மரணம்</u>

மரணப் 80:3; 81:3; 96:4; 97:4
98:3; 99:4; 100:4.

## எண்வகைத் தேர்வுக் குறி - பெயர்கள்


அஉட்டாங்கம் ... 25:1

அஜீரண நாடி ... 21:1

ஆச்சரிய நாடி ....27:2

கண்கள் ... 25:2, 33:1, 33:3

குருநாடி ... 23:4

சத்தம் ... 25:2, 32:2, 32:4

சரீரம் ... 31:1

சலநிற ... 70:1

சன்னிரோகம் ... 36:2

சிலேத்துமதேகம் ... 32:1

சிலேத்தும நாடி ... 27:2, 28:2, 79:1, 81:1

சிறுநீர் ... 34:4, 35:1, 67:2

தசநாடி ... [illegible]:3, 22:2

திரிநாடி ... 98:1

தேகப்பரிசத்தை ....31:1

தொந்தநாடி ... [illegible]6:2

தொஷயாம் ... 32:2

நாக்கு ... 25:2

நாடி ... 7:1, 25:2, 26:1, 28:1
39:4, 40:1, 60:1, 84:1
88:1, 89:1, 90:1, 90:4
91:1, 92:1, 93:1, 97:1
100:2, 101:2, 101:4

நாவை ... 49:4

நிறம் ... 31:4, 32:1, 55:4

பரிசம் ... 25:2

பித்த நாடி ... 27:1, 64:1, 64:3, 65:1
66:3, 67:1, 69:1
பித்தமாய் நாடி ... 66:1
பெருநாடி ... 20:3
பேச்சு ... 65:4
மலக்கட்டு ... 34:3
மலசலங்கள் ... 20:1; 46:2, 88:2, 7
மலசலம் ... 89:2
மலபந்தநாடி ... 29:3
மலம் ... 25:3, 34:1, 1, 2, 3
முகம் ... 55:3, 74:3
மூச்சு ... 50:1
மூத்திரம் ... 25:3
மூவரும் ... 86:1, 2, 4
மூன்று நாடி ... 87:1
வசனம் ... 24:4, 65:2
வாக்கு ... 24:4
வாடை ... 25:2
வாதத்தின் நாடி ... 27:3
வாத நாடி ... 26:4, 43:1, 46:1, 47:1
49:1, 52:1, 53:1, 55:1
57:2; 58:2
வாய் நீர் ... 92:2, 107:3

## மருந்துப் பெயர்


| | | |
|---|---|---|
| அஷ்தக்கில் சத்தி | ... | 9:1 |
| அஷ்ட சூரணம் | ... | 61:4 |
| எண்ணெய் | .... | 121:4 |
| கற்கம் | ... | 45:3, 77:3, 106:1 |
| கஷாயத்தின் | ... | 45:2 |
| கஷாயம் | ... | 67:4 |
| கிருதம் | ... | 75:3 |
| க்ஷாழம் | ... | 138:4 |
| குடிநீர் | ... | 145:4 |
| குழம்பு | ... | 59:8 |
| குளிகை | ... | 45:3 |
| சூரணம் | ... | 129:4, 114:4 |
| தயிலம் | ... | 127:4, 147:4, 48:4 |
| நெய் | ... | 110: |
| தொக்கிடும் | ... | 106:4 |
| நசியம் | ... | 93:4, 139:4, |
| நெய் | ... | 50:3, 78:4, 111:4, 123:4 137:4 |
| புகை | ... | 68:4 |
| பொடி | ... | 118:4 |
| மரிசல் | ... | 116:2 |

மருந்து ... 8:2, 13:1, 110:4, 113:4, 115:4, 116:4 120:1, 122:1, 122:4 126:4, 128:4, 134:4, 142:4, 146:4

மருந்துக்குப்பத்தியம் ... 10:4

மருந்து சுத்தி ... 6:1

முழுகுந் தைலம் ... 109:

## தாவர வர்க்கம்


| | | |
|---|---|---|
| அசுவகெந்தி | ... | 123:3 |
| அரசு | ... | 137:1 |
| அரத்தை | ... | 111:3, 129:3 |
| அரிசிப்பால் | ... | 141:2 |
| ஆல் | ... | 137:1 |
| ஆவின் நெய் | . | 59:3 |
| இஞ்சிச் சாறு | ... | 111:1 |
| இருவி | 1.. | 118:2 |
| இருவேலி | ... | 112:1 |
| இலந்தை | ... | 120:2 |
| இலவங்கம் | ... | 121:2 |
| எண்ணெய் பக்சம் | ... | 106:1 |
| எருக்கு | ... | 105:3, 130:3, 141:1 |
| ஏலம் | ... | 108:1, 109:3, 111:1 |
| ஓமம் | ... | 116:3 |
| கடுக்காய் | ... | 118:2, 125:2, 144:3 |
| கண்டந்தோடை வளை | ... | 75:4 |
| கண்ட | ... | 78:4 |
| கண்டங்கத்திரி | ... | 111:5, 129:1 |
| கண்டங்காரி | ... | 144:2 |
| கரணை | ... | 114:1 |
| கழற்சி | ... | 143:2, 145:3 |

| | | |
|---|---|---|
| கள்ளியின் சருகு | ... | 114:1 |
| காஞ்சொறி | ... | 138:2 |
| காட்டாமணக்கின் விதை | ... | 133:1 |
| காட்டிலில் முட்டி | ... | 45:1 |
| காயம் | ... | 106:3, 116:1, 132:4 |
| கார்த்திகைக் கிழங்கு | ... | 130:1 |
| கிரந்தி நாயகன் | ... | 143:3 |
| கிராம்பு | ... | 108:2, 109:4, 121:1 |
| குப்பி | ... | 130:2 |
| குதிரை வாலி | .... | 53:2 |
| குருநிம்பக் குக்கிலாதி | ... | 75:3 |
| கொடிவேலி | ... | 123:3 |
| கொட்டைக் கரந்தை | ... | 120:3 |
| கொன்றை | ... | 105:1, 114:3 |
| கோஉநம் | ... | 108:1 |
| கோஉஷ்டம் | ... | 120:1 |
| சங்கங்குப்பி | ... | 143:2 |
| சங்கம் | ... | 129:3 |
| சங்கு | ... | 105:2 |
| சட்டம் | ... | 121:4 |
| சன்பகப்பூ | ... | 109:4 |
| சதுரக்கள்ளி | ... | 141:2 |
| சந்தனம் | ... | 108:2, 112:2, 121:1 |
| சர்க்கரை | ... | 123:4 |

| | | |
|---|---|---|
| சாதிக்காய் | ... | 123:1, 137:2 |
| சாதிபத்திரி | ... | 123:2 |
| சாரடை | ... | 130:3 |
| சிட்டி | ... | 109:3 |
| சித்திரமூலம் | ... | 105:1, 114:2, 116:3 135:2 |
| சிவதை | ... | 133:1 |
| சிவதைமூலம் | ... | 144:2 |
| சிவனார் வேம்பு | ... | 144:1 |
| சிறுகுறிஞ்சான் | ... | 140:4 |
| சிற்றாமுத்தோடு | ... | 66:4 |
| சில்லி | ... | 133:2, 143:3, 145:3 |
| சீந்தில் | ... | 109:2, 112:2; 130:3 137:2 |
| சீரகம் | ... | 125:2, 108:3 |
| சீரகமிரண்டு | ... | 135:1 |
| சீறிரத்தம் | ... | 111:4 |
| சீனி | ... | 61:4 |
| சுக்கு | ... | 105:3, 114:1, 116:2 |
| செங்கந்தாரி | ... | 129:2, 143:1 |
| செங்கொடி | ... | 130:3 |
| செருப்படை | ... | 143:3 |

| | | |
|---|---|---|
| தசமூலம் | ... | 130:1 |
| தண்ணீர் மீட்டான் | ... | 112:3, 137:1 |
| தாமரை | ... | 126:3 |
| தாளிசம் | ... | 108:3 |
| தான்றி | ... | 125:2 |
| திப்பிலி | ... | 105:3, 106:3, 116:2 |
| திரவிய மைந்து | ... | 137:3 |
| திரிகடுகு | ... | 111:1, 118:3, 135:1 |
| திரிபலை | ... | 135:2 |
| திருகுக் கள்ளி | ... | 59:3 |
| தில்லைப்பால் | ... | 106:1 |
| துமட்டிதாய் | ... | 59:4 |
| தூ துவளை | ... | 77:4 |
| தூ தளை | ... | 143:2 |
| தேக்கு | ... | 143:1, 111:2 |
| தேவதாரு | ... | 112:[illegible] |
| தொண்டை | ... | 78:2 |
| தோடகை | ... | 77:2 |
| தோஉதம் | ... | 54:2 |
| நல்லத்தி | ... | 137:1 |
| நல்லெண்ணெய் | ... | 109:1, 112:1 130:4 |
| நன்னாரி | ... | 112:3 |

நாகம் ... 108:3, 111;3

நாரத்தை ... 145:2

நாவல் ... 120:3

நாவி ... 118:1

நிலக்குமிழ் ... 130:1

நிலப்பனை ... 112:3

நீரொட்டி ... 127:1

நெல்லி ... 108:2, 125:2

நெல்லிக்காய் ... 67:4

நெல்லிச்சாறு ... 109:2

நொச்சி ... 143:1, 145:2

பத்திரி ... 137:3

பயிறும் பச்சை ... 67:4

பழச்சாறு ... 125:4

பறங்கிப்பட்டை ... 123:1

பற்படாகம் ... 138:2

பாதிரி ... 120:3

பாளை ... 122:3

பாற்று சர்க்கரை ... 108:4

பிரண்டை ... 114:3

| | | |
|---|---|---|
| பிரமி | ... | 145:3 |
| பிரம்பிசாத | ... | 116:4 |
| பீலி | ... | 131:2 |
| புங்கு | ... | 141:1 |
| புளிநறளை | ... | 1[illegible]:3 |
| பூதகரப்பான் பட்டை | ... | 144:3 |
| பெருமருந்து | ... | 129:1 |
| பொல்லாங்காணி | ... | 109:2 |
| போளம் | ... | 140:2, 133:1 |
| மகரப்பூ | ... | 121:1 |
| மஞ்சள் | ... | 70:1 |
| மஞ்சனம் | ... | 112:4 |
| மஞ்சிட்டி | ... | 108:1 |
| மதுரம் | ... | 108:1, 120:4, 121:1 |
| மதுரமோ | ... | 109:3 |
| மாசிக் | ... | 105:4 |
| மருட்கிழங்கு | ... | 114:2 |
| மலைநன்னாரி | ... | 145:4 |
| மல்லிகை | ... | 141:2 |
| மாஞ்சில் | ... | 108:2, 109:3 |
| மாவிலங்கு | ... | 105:1, 106:2, 132:3 |

| | | |
|---|---|---|
| முசுமுசுக்கை | ... | 109:2 |
| முத்தம் | ... | 109:3, 112:2, 114:1<br>137:2 |
| முருங்கை | ... | 105:2, 106:2 |
| முருங்கைவேர் | ... | 141:1 |
| முள்ளி | ... | 145:2 |
| ரோணி | ... | 144:3 |
| வசம்பு | ... | 106:3, 132:4 |
| வாகை | ... | 106:2 |
| வாசனாதி | ... | 24:2 |
| வாய் விளங்கம் | ... | 135:3 |
| வாலுழுவரிசி | ... | 111:2 |
| விலாமிச்சை | ... | 112:1 |
| விலாமிச்சம் | ... | 138:1 |
| விளக்கெண்ணெய் | ... | 144:1 |
| வெங்காக்கணம் | ... | 132:1 |
| வெள்ளறுகு | ... | 105:2, 143:4 |
| வெள்ளுள்ளி | ... | 116:2, 125:3 |
| வெப்பு | ... | 105:2 |
| வேப்பெண்ணெய் | ... | 147:1 |
| வேம்பு | ... | 138:2 |
| வேம்பாடம்பட்டை | ... | 144:1, 147:1 |
| வேலி | ... | 121:, |
| வேலிப்பருத்தி | ... | 143:4 |

# தாது வர்க்கம்


| | | |
|---|---|---|
| அரப்பொடி | ... | 125:1 |
| அலைகடல்முத்தம் | ... | 120:1 |
| இந்து | ... | 106:3, 111:2 |
| இந்துப்பு | ... | 116:1 |
| உப்பு | ... | 116:1 |
| கற்பூரம் | ... | 123:2 |
| காரணமந்து | ... | 132:2 |
| காரம் | ... | 118:2 |
| கிட்டம் | ... | 125:1 |
| குக்குடம் | ... | 141:3 |
| குக்கில் | ... | 78:4 |
| குங்கிலியம் | .. | 147:3 |
| கெந்தகம் | ... | 118:3, 123:1 |
| கெந்தி | ... | 147:2 |
| சவுட்டுமண் | ... | 116:3. 135:3 |
| சாதிலிங்கம் | ... | 68:4 |
| சாம்பிராணி | ... | 127:4 |
| சிங்கி | ... | 111:2 |
| சூதம் | ... | 118:1, 147:3 |

தாரம் ... 118:1, 147:3

துத்தம் ... 127:2, 147:2

துருசு ... 127:2, 147:2

பாஷாணம் ... 44:4

மனோசிலை ... 118:2

லவணமைந்து ... 132:2

லிங்கம் ... 118:2,127:1

வங்கபற்பம் ... 70:3

வஜ்ஜிரத்தின்பர்ல் ... 132:3

வளைய லுப்பு ... 116:1

வெங்காரம் ... 118:1

## உயிர் வர்க்கம்


கத்தவப் பால் ... 74:2

தேன் ... 118:4, 115:4

நன்குநெய் ... 79:4

பால் ... 109:1, 112:1

புநாகம் ... 139:2

மிருதாருசிங்கி ... 147:3

முசறா முட்டை ... 74:1, 139:1

முல்லப்பால் ... 139:3

# மூலிகைப் படங்கள்

## ஆவாரை

சொல்லுதற்கு மட்டோ தொலையாத மேகநீ
ரெல்லா மொழிக்கு மெரிவகற்ற - மெல்லவச
மாவரைப் பம்பரம்போ லாட்டுந் தொழிலனைக்கே!
யாவாரை மூலி பத.


ஆவாரை

ஈச்சர முனி

பலபலவிக் கஞ்சந்நி பாதங்க ளோடு

நலமகல்வி ஊங்கள் நடுங்குங் - கலகலெனப்

பேச்சரமுண் டாடுமலர்ப் பெண்ணமே நீகேளாய் !

ஈச்சர முனிதனக் கின்று



ஈஸ்வரமூலி
(ARISTOLOCHIA INDICA)

## ஓரிதழ் தாமரை

தாதுவையுண்டாக்குந் தனிமேகத்தைத் தொலைக்கும்
ஆதரவா மேனிக் கழகுதரும் - சீதம்போம்
சீரிதழ்த் தாமரைவாழ் செய்ய மடவனமே
ஓரிதழ்த் தாமரையை யுன்.




ரத்ன புருஷ் (அ) ஓரிதழ்தாமரை

## கரிசாலை

குரற்கம்மற் காமாலை குட்டமொடு சோபை
யுறற்பாண்டு பன்னோ யொழியு - நிரற்சொன்ன
மெய்யாந் தகரையொத்த மேனியுமா நற்புலத்தக்
கையாந் தகரை யொத்தக் கால்.

## கரிசணாங்கண்ணி



## குரோசாணி ஓமம்

வெகுமூத் திரம்வாதம் வீரிய நட் டம்புண்

உடுபேதி யுட்கடுப்பி னோடே - மிகுகரப்பான்

தீராக் கபமிவை போம் செய்யகுரோ சாணியென்றால்

வாரா மயக்கமுறு மால்.



கு( ராசானிஓமம்
(  OCYAMUS NIGER)

## சங்கத்

வீக்கம் கரப்பான் விதாகம் விரந்தி குன்மம்
ஐக்கமிரு சூலைவாய் வோடு பித்தந் - தாக்குண்டும்
வீறுமோ கந்தலங்கும் வீசுபசி ரத்த முண்டாம்
கூறுசங்கம் வெள்ளிலை கட்டு.

சங்கன்



## குமரி (அ) சோற்றுக் கற்றாழை

பொல்லாமே சங்கபம்பு முச்சூலை சூடக்டரச

மல்லார்மத் தம்பகந்த ரக்குன்ம - மெல்லாம்விட்

டேகு மாக்கு ளைச்சற் கிரிச்சரமு

மாகு மாக்கு மருண்டு.



குமரி (என்ற) சோற்றுக்கற்றாழை

## முசுமுசுக்கை

இருமலுட னீளை யிரைப்பு புகைச்சல்
மருவுகின்ற நீர்த்தோம் மாறுந் - திருவுடைய
மானே! முசுமுசுக்கை மாமூலி யவ்விலையைத்
தானே யிருந்தவர்க்குந் தான்.



மிசுமிசுக்கை
(இருகுரங்கின்கை)

## வல்லாரை

அக்கர நோய்மாறும் அகலும் வயிற்றிழிவு

தக்கவிரத் தக்கடுப்புத் தானேகும் - பக்கத்தில்

எல்லாரை யுமருந்தெள் றேறரைத்து நல்மனையுள்

வல்லாரை யைவளர்த்து வை.



வல்லாரை

## வாத நாராயணன்

நன்மை தரும்வாத நாராயண மரத்தின்
தன்மை இனிதுரைக்கின் தாழ்குடிலே - வன்மையுறும்
வாத வலிகுடைச்சல் வாட்டுகளுச் சூலையெலாம்
பூதலத்தில் விட்டோடிப் போம்.



வாதமடக்கி

1.
2.
3.